இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 48+II

சுடர் 32 | கதிர் 246 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை 30.07.2017

## மாணவியின் குடிதண்ணீரில் கலந்த மர்மப்பொருளை கண்டறியப் பரிசோதனை

கிளிநொச்சி, ஜூலை 30
கிளிநொச்சி நகரிலுள்ள பாடசாலையில் மாணவியின் குடிதண்ணீரில் கலந்த மர்மப்பொருளைக் கண்டறிவதற்காக, குடிதண்ணீர் கொழும்புக்கு மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி நகரப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில், மாணவி >> 08

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இன்று முல்லைத்தீவில் வழிகாட்டல் கருத்தமர்வு

*உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில் நான்கு பாடசாலைகளில் நடக்கிறது*

யாழ்ப்பாணம், ஜூலை 30
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள முல்லைத்தீவு மாணவர்களுக்காக உதயன் குழுமம் நடத்தும் இலவசச் சிறப்பு வழிகாட்டல் கருத்தமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, குமாரசாமிபுரம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இன்று கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளன. இன்று முற்பகல் 9 மணிக்குக் கருத்தமர்வுகள் ஆரம்பமாகவுள்ளன. அனைத்து மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நாடுமுழுவதும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ளது. அதற்குத் தோற்றும் மாணவர்க >> 45

## நீதிபதி மீதான துப்பாக்கிச் சூடு திட்டமிட்டே நடத்தப்பட்டது

*வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்*

யாழ்ப்பாணம் ஜூலை 30
யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதியைக் கொலை செய்யும் திட்டத்துடனேயே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று வடக்கு >> 45

## சட்டிக்குள் இருந்து தவறி அடுப்புக்குள் விழும் கதையே சம்பந்தனுக்கு மாற்றீடு

*வவுனியா நேற்று நடந்த கலந்துரையாடலில் கூறினார் புளொட் உறுப்பினர் லிங்கநாதன்*

யாழ்ப்பாணம், ஜூலை 30
சம்பந்தனுக்கு எதிராக இன்னொருவரைக் கொண்டு வருவது என்பது, சட்டிக்குள்ளிருந்து தவறி அடுப்புக்குள் விழுந்த கதையாகவே முடி >> 45

## கூட்டமைப்பு காட்டும் சின்னத்துக்கு வாக்கிடும் நிலை இனிக் கிடையாது

*பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறுகின்றார்*

யாழ்ப்பாணம், ஜூலை 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டுகின்ற ஆளுக்கு, சின்னத்துக்குத்தான் வாக்களிப்பது என்ற நிலமை இனிமேல் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் >> 45

முச்சந்தி முரளி



அப்ப ஆளுநருக்கும் கெதியா மாற்றம் வரும் எண்டிறியளோ!...

# நான் நினைத்தால் நாளையே மலரும் புதியதொரு அரசு

*சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் அரச தலைவர் இறுமாப்பு*

கொழும்பு, ஜூலை 30
அவசியம் ஏற்பட்டால் நாளைய தினமே புதிய அரசொன்றை அமைப்பதற்கு என்னால் முடியும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
எனினும், தூய்மையற்ற அரசொன்றை உருவாக்கத் தான் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு >> 45



## அம்பாந்தோட்டை உடன்பாடு எதிர்ப்பையும் மீறி கைச்சாத்து



கொழும்பு, ஜூலை 30
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத் துக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிகழ்வு கொழும்பிலுள்ள துறைமுக அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்றது.
ஒப்பந்தத்தை அடுத்து இலங்கை அரசும், சீன மேர்ச்சண்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனமும் அம் >> 08

## தொண்டராசிரியர்களாக 12 பேர் கற்பித்தனர் என அதிபர் கடிதம்

*‘லொக்புக்’ கோரியபோது அதுவும் மாயம் விசாரணைகளை ஆரம்பித்தது கல்வி வலயம்*

கிளிநொச்சி, ஜூலை 30
கிளிநொச்சி வலயத்துக்கு உட்பட்ட ஒரு பாடசாலையில் 12 தொண்டராசிரியர்கள் கற்பித்தனர் என அதிபர் கடிதம் வழங்கியுள்ளார். இது தொடர்பில் பாடசாலையின் வருகைப் பதிவேட்டுப் புத்தகத்தை >> 45

## தொடருந்து தடத்தை கடந்தவர் தொடருந்து மோதி உயிரிழப்பு

*சங்கத்தானையில் பரிதாபம்*

தென்மராட்சி, ஜூலை 30
தண்டவாளத்தைக் கடக்க முயன்ற குடும்பத் தலைவர் கடுகதி தொடருந்தில் மோதுண்டு உயிரிழந்தார். >> 08

## வடக்கு-கிழக்கு இணைப்புக்கு புதிய அரசமைப்பு இடமளியாது

*அடித்துக் கூறுகிறார் அஜித் பெரேரா*

கொழும்பு, ஜூலை 30
மாவட்டத்துக்கு மாவட்டம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில் புதிய அரசமைப்பு அமையவுள்ளது. எனவே >> 45

*நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்;*

## சந்தேகநபருக்கு மனைவி கொடுத்த பார்சலில் மீட்கப்பட்டது ‘ரெஸ்ரர்’

>> 42

## வாய்க்குள் துணி திணித்துக் கட்டிவைத்து காதைக் கிழித்துத் தோடுகளைப் பிடுங்கினர்

*பல பவுண் நகைகள் அராலியில் கொள்ளை ஆசிரியர் வீட்டில் நள்ளிரவில் அடாவடி*

யாழ்ப்பாணம், ஜூலை 30
நள்ளிரவில் வீடு புகுந்த கொள்ளையர் குடும்பத் தலைவரையும் அவரது மனைவியையும் கட்டி வைத்து வாய்க்குள் துணி திணித்துப் பல பவுண் நகைகளைத் திருடினர். போதாதென்று குடும்பப் பெண்ணின் காதுகளைக் கிழித்துத் தோடுகளைப் பிடுங்கிச் சென்றனர்.
குருதிப் பெருக்கால் பெண் மயங்கினார்.
காலையில் பால் கொண்டு சென்றவரே அவர்களைக் கண்டு வைத்தியசாலையில் சேர்த்தார் >> 43

SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10% அதிகூடிய வட்டி
• எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
• SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
• வட்டி வீதம் 10% (வ.தே.வ 10.46%) வரை*
011 5 411 411
SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

நல்லூர் கந்தன் அழகைக் காண கண் ஆயிரம் வேண்டுமே
நல்லூர் கந்தன் உற்சவக் காட்சிகள் தினமும் newuthayan.com இல்

இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஒப்பந்தத்துக்கு எதிராக நூதனப் போராட்டம்




கொழும்பு, ஜூலை 30
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறு வனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு துறைமுக ஊழியர்கள் நேற்று ஆர்ப் பாட்டம் நடத்தி சவப் பெட்டி எரித்தனர்.
சவப்பெட்டியைச் சுமந்து ஊர்வலமாகச் சென்ற ஊழியர்கள் துறைமுக வாயிலுக்கு முன்பாக அதை வைத்து அஞ்சலி செலுத்தித் தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.
இந்த ஒப்பந்தந்துக்குப் பலத்த எதிர்ப்பு வெளியி டப்பட்டிருந்த நிலையில் நேற்று இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரிடையே கைச்சாத் திடப்பட்டது. (ந-ஜ)

## சட்டவிரோதமாக ஒப்பந்தம் சாடுகின்றது தே.சு.முன்னணி

கொழும்பு, ஜூலை 30
மாகம்புர துறைமுக உடன்ப டிக்கை சர்வதேச சட்டம் மற்றும் உள்நாட்டு ஒப்பந்த விதி முறைக ளுக்கு அமைய சட்டவிரோதமா னது என தேசிய சுதந்திர முன் னணி குற்றம்சாட்டியுள்ளது.
ஹம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகம் தொடர்பான அமைச் சரவைப் பத்திரத்தில் உள்ள விட யங்கள் பரஸ்பர விரோதமாக இருக்கின்றன என்று அந்தக் கட்சி யின் பிரதித் தலைவர், நாடாமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரி வித்துள்ளார்.
கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந் திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
30 வருடங்களுக்கு முன்னர் ஜே.ஆர்.ஜயவர்வன ஆட்சியின் போதும் உடன்படிக்கை ஒன்றின் மூலம் இந்த நாடு இந்தியாவுக்கு தாரை வார்க்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந)

## பொலிஸாக நடித்தார் வட மாகாண ஆளுநர்



யாழ்ப்பாணம், ஜூலை 30
பொலிஸ் உடை அணிந்து யாழில் நடமாடினார் வடக்குமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே. யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் ஆவ ணப்படம் ஒன்றில் வடக்கு மாகாண ஆளுநர் பொலிஸ் அத்தியட்சகர் கதாபாத்தி ரத்தில் நடிக்கின்றார். யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் ஆவணப்படத்துக்கான படப்பி டிப்பு நேற்று இடம்பெற்றது. அதற்காகப் பொலிஸ் சீருடையை அணிந்து நடமாடினார். (ந-ஜ)

## வடக்கு முதலமைச்சருடன் ஜேர்மன் தூதுவர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்கு மாகாண முதல மைச்சர் சீ.வி. விக்னேஸ்வரனுக்கும் ஜேர்மன் நாட்டின் இலங் கைக்கான தூதுவர் ஜோன் ரோக்டி மற்றும் அவரது குழுவினருக்கும் இடையில் நேற்றுமுன்தி னம் இரவு சந்திப்பு நடந் துள்ளது.
இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண மக்களின் உற் பத்திகள் வெளிநாட்டில் சந்தைப்படுத்துவற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜேர்மன் தூதுவர் ஜோன் ரோக்டிக்கிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது என்று வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக் னேஸ்வரன் தெரிவித்தார்.
ஜேர்மன் நாட்டுக்கும் வடக்கு மாகாணத்துக் கும் இடையே எவ்வாறு பொருளாதார மேம் பாட்டை ஏற்படுத்த முடியும் என்பது தொடர் பில் விரிவாக ஆராயப்பட்டது. வடமாகாண மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்து வது தொடர்பில் அரசு பேசி உரிய நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.
வடமாகாணத்தில் தனியார்துறை முதலீடுகளுக்குப் போதியளவு முன்னுரிமை வழங்கப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். தனியார்துறையில் முதலீ டுகள் தொடர்பில் ஆராய்ச்சி அறிக்கைளை தரமுடியும் என்று குறிப்பிட்டேன் என்றும் வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (ந-106)

## புதையல் தோண்டிய எண்மர் கைது

கொழும்பு, ஜூலை 30
திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரி யவெவ சமகேபுர வயல் வெளி யில் புதையல் தோண்டிய எட்டுப் பேர் நேற்றுக் கைது செய்யப்பட் டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரங்க ளும் அவர்களிடம் இருந்த கைப் பற்றப்பட்டன. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ள னர். (நஜ)



## டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றும்



யாழ்ப்பாணம், ஜூலை 30
நாடாளாவிய ரீதியில் பாடசாலை மட்டத் தில் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் அனைத் துப் பாடசாலைகளிலும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன. பாடசாலை விடு முறை நாளாக இருந்தபோதும் மாண வர்களும், ஆசிரியர்களும், அதிபர்க ளும் தமது பாடசாலைகளின் சுற்றுப்புறச் சூழலில் சிரமதானப் பணிகளை முன் னெடுத்தனர். பாடசாலை மட்டத்தில் 3 தினங்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டது. அதற்கமைவாக நேற்று முன்தினம் முதல் சகல பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இன்றும் சிரமதானப் பணி கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட் டது. (ந-ஜ)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உடனுக்குடன் செய்தி
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## அயலுறவு அமைச்சுக்கு புதிய செயலாளர்



கொழும்பு, ஜூலை 30
அயலுறவு அமைச்சின் புதிய செயலாளராக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்பிரசாத்காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேன நேற்று இந்த நியமனத்தைவழங்கினார்என்று தெரிவிக்கப்பட்டது.

அயலுறவுஅமைச்சின்செயலாளராகப் பதவி வகித்து வந்த எசல வீரக்கோன் சுற்றுலா ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருவருடம் இந்தியாவுக்கான தூதுவராகப் பதவி வகித்த வீரக்கோன், இலங்கை தூதரக சேவையின் மூத்த அதிகாரி யாவார். (ற-ஜ)

# அரசின் கவனத்தை ஈர்க்கப் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 30
"எமது வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரி அரசு எம்மை ஏமாற்றி விட்டது. காணாமல்ஆக்கப்பட்டோர்விடயத்தில் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகிறது. இந்த அரசு மீது எமக்கு இருந்த சிறிய நம்பிக்கையும் இல்லாமல் போய் விட்டது"

இவ்வாறு முல்லைத்தீவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும்காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களதுபோராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 5 மாதங்களைக்கடந்தபோதும்இது வரை தீர்வு வழங்கப்படவில்லை. இன்று வரை வீதியோரத்தில்தமதுஉறவுகளின் படங்களைக் கைகளில் ஏந்திவாறு பதிலுக்காகக்காத்திருக்கின்றனர்.

"இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் தொடர்பில் எந்தவொரு தகவலும் இல்லை. மைத்திரி-ரணில்தலைமையிலான அரசு இந்த விடயத்தை உதாசீனம் செய்து வருகிறது. எதிர்வரும் 31 ஆம் திகதி கவனவீர்ப்புப் பேரணியை நடத்தத் தீர்மானித்துள்ளோம். தமிழ்சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கிறோம். கூட்டரசு இது வரை எமக்கு எதுவித பதிலையும் வழங்கவில்லை. தொடர்ந்தும் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக மற்றுமொரு போராட்டத்தை நடத்தவுள்ளோம்." என்றனர். (ற-ஜ)

## பொலிஸாரின் ரயர்களை திருடிய இருவர் சிக்கினர்

சாவகச்சேரிப்பகுதிவாகனத்திருத்தகம்ஒன்றில்பொலிஸ்வாகனத்தின் ரயர்களைத் திருடிய இருவர் சந்தேகத்தின்பேரில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 30 வயதை உடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டனர். சாவகச்சேரிப்பொலிஸார்தமதுவாகனத்தின் ரயரைப் பழுது பார்ப்பதற்காக அந்தத் திருத்தகத்தில் கொடுத்தனர். அதனை மீளப் பெற்றுக் கொள்வதற்காகப் பொலிஸார் திருத்தகத்துக்குச்சென்றபோது, அங்குரயர்கள்திருடப்பட்டமை தெரியவந்தது. திருத்தகத்தின்அருகாமையில்இருந்தசி.சி.ரீவி. கம்ரா ஒளிப்பதிவுகளைப்பொலிஸார்பார்வையிட்டனர். அதில் இருவர் உழவு இயந்திரத்தின் ரயர் உட்பட பொலிஸ் வாகனத்தின் ரயரையும் திருடிச் சென்றமை பதிவாகியிருந்தது. சந்தேகநபர்கள் தொடர்பான விவரங்களைப்பெற்றபொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-26)



## கடும் வறட்சியின் பின் வவுனியாவில் மழை

### விவசாயிகள் மகிழ்ச்சி

வவுனியா, ஜூலை 30
வறட்சியான காலநிலை நிலவி வந்த நிலையில் வவுனியாவில் நேற்று மதியம் காற்றுடன் கூடிய மழை பெய்தது. அதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பாகங்களிலும் வறட்சியான காலநிலை நிலவி வருகிறது. அதனால் குடிதண்ணீருக்குத்தட்டுப்பாடு, விவசாயச்செய்கைபாதிப்பு, கால்நடைகள் அவதி உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிட்டது.

நேற்றுத் திடீர் மழை பெய்ததால் மக்கள் மகிழ்சி அடைந்தனர். நேற்று முன்தினம் முதல் மலையகப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இங்கு இயற்கை இடர்களும் ஏற்பட்டுள்ளன. கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரிமாவட்டங்களுக்கும்மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ)

## திடீரென வீசிய காற்றால் முள்ளிவளையில் சேதம்



முல்லைத்தீவு, ஜூலை 30
முள்ளியவளையில் நேற்றுத் தீடிரென வீசிய காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், புதிதாகக் கட்டப்பட்ட கடைத்தொகுதி ஒன்றும் இடிந்து சேதமடைந்தது. முள்ளியவளையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் பலமான மழை பொழிவுடன் சற்று பலமாக வீசிய காற்றால் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலை வளாகத்தில் நின்ற மரங்கள் முறிந்து விழ்ந்தன. நீராவிப்பிட்டியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதியும் இடிந்து சேதமானது. (ற-ஜ-7)

## முல்லைத்தீவு மாவட்ட ஓய்வூதியர்கள் கௌரவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 30
முல்லைத்தீவுமாவட்டஅரச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்நடைபெற்றது.

நீண்ட காலமாக அரச சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற20உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்குமாலைஅணிவித்து, பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவுமாவட்டஅரசஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின்தலைவர்மு.குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடமாகாணசபைபிரதிஅவைத் தலைவர் கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன், முல்லைத்தீவுமாவட்டஅரச ஓய்வூதியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ற-ஜ-7)

## கடையிலிருந்தோர் விழித்ததால் திருடர்கள் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணம்குப்பிளானில் திருட்டு முயற்சி ஒன்று தடுக்கப்பட்டுள்ளது. குப்பிளான் சந்திக்கு அருகாமையில் வீதியோரமாக இயங்கி வரும் கட்டடப்பொருள்கள் வர்த்தக நிலையத்திலேயெ இந்த திருட்டு முயற்சி நடந்துள்ளது.

வழமை போன்று வேலைகள் முடிவடைந்த பின்னர், அதன் உரிமையாளர் உள்ளிட்டவர்கள் வர்த்தக நிலையத்தில் உறங்கியுள்ளனர். நேற்று அதிகாலை வர்த்தக நிலையத்தில் தங்கியிருந்த இளைஞர்களில் ஒருவர் வெளியே வற்தார். அந்த நேரம் வர்த்தக நிலையத்தின்முன்பக்கமாகஇனந்தெரியாதவர்களின் நடமாட்டம் இருந்ததைஅவதானித்தார். அதன்போது வர்த்தக நிலையத்தின் முன்பாக நடமாடிக் கொண்டிருந்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்து மதிலேறிக் குதித்துத் தப்பியோடியுள்ளனர். அவர்கள் வர்த்தக நிலைய வளாகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் உதிரிப்பாகங்கள் சிலவற்றைக் கழற்றி வைத்திருந்தனர்எனத்தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ)




நல்லூரான் திருவடிக்கு
மரகத மாமணியே
திருவீதி வலம் வருக

ஞாலத்தினர் போற்றும் ஞான முதல்வனே
மெய்ஞானிகள் நற்றவம் செய் நல்லைவேலே
தண்ணளி வெண்குடை வெற்றிவேல்
தமிழ் தாயகம் காத்திடும் நல்லை வேல்

சண்முக வாயிற்றரிசனம் செய்து
நின்னிடம் சரண் புகுந்தேன்
கண்ணினம் போலெனைக் காத்தருளீரோ
நல்லைக் கந்தவேள் கலியுகனே

எண்ணிய நல்லெண்ணமெலாம்
எனிதினில் இனிதே ஈடேற
என்னை நீ ஆண்டருளும்
நன்நாளும் எந்நாளோ

திருநுதலிலேயெழுந்த அறுபொறியிலே
உதித்த திருக்குமரன் நீயல்லவோ
மருவுமடியார்கள் மனதிலுவமை கூர
மரகத மாமணியே திருவீதி வலம் வருக

த. கந்தசாமி
தாவடி கொக்குவில்

கொடியேறிய நல்லைக்குமரனே

ஆலய வளாகம் முழுவதும் நந்திக் கொடிகள் பறக்க
சிவப்ப வெள்ளை நிறத்திலான படங்குகள் சூழலை அலங்கரிக்க
வீதிதோறும் பந்தல்கள் வர்ண மின்குமிழ்கள் புதுப்பொலிவுடன்
அடியவர்களுக்கான அன்னதான மடங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் சூழ

முருகா எனும் அருட்கோபுர வரவேற்க
பக்தர்கள் புடை சூழ மங்கல வாத்தியம் முழங்க
கொடியேறி நாட்டில் பிணியகல
நல்லூரானை கும்பிட்டு நீ பாடு

அருளோசை எழுப்பும் ஐந்து மணிக்கோபுரங்கள்
காண்டா மணியோசையின் சத்தம் முழங்க
பூமாரியுடன் கொடியேறும் காட்சியை பக்தர்கள்
அரோகரா! என வாழ்த்தி வணங்கினரே

சாந்தினி சரவணமுத்து




திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
திருமணம், கொண்டாட்டங்கள், பெரு நிறுவன நிகழ்வுகள்
பிறந்த நாள் விழா விசேட நிகழ்வுகள் இன்னும் பல...
E-mail:jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511
இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு சந்தி (அருகில்), யாழ்ப்பாணம்.

## விபத்தில் மாணவி காயம்


தென்மராட்சி, ஜூலை 30
மோட்டார்சைக்கிளில்பயணித்த12வயதுமாணவி தவறி வீழ்ந்து காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று தனங்கிளப்பில் நடந்துள்ளது.
சாலையில் காணப்பட்ட குழியில்மோட்டார்சைக்கிள் சில்லு இறங்கியதால் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த மாணவி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்தவர்சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஐ-9)

## சிகிச்சைப் பெறச்சென்ற மூதாட்டி இறப்பு

தென்மராட்சி, ஜூலை 30
சாவகச்சேரி மருத்துவமனைக்குச்சிகிச்சைபெறச் சென்ற மூதாட்டி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம்நேற்றுக்காலை இடம்பெற்றது எனத்தெரிவிக்கப்பட்டது.
மீசாலை வடக்கைச் சேர்ந்த மூதாட்டி தனக்கு மூச்சு விடச் சிரமமாக உள்ளது என்று கூறி மருத்துவமனையில் சிகிச்சைபெறச்சென்றார். வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்ற அவரைப் பரிசோதித்த மருத்துவர் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லுமாறு பணியாளருக்குக்கூறினார். பணியாளர் அவரை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச்சென்றார்.
அங்கு அவருக்கு மருத்துவர் சிகிச்சையளிப்பதற்கு முன்னரே அவர் உயிரிழுந்தார்எனத்தெரிவிக்கப்பட்டது. மீசாலை வடக்கைச் சேர்ந்த ரீ. அன்னலட்சுமி(வயது68)என்பவரே உயிரிழந்தவராவர். (ற-ஐ-9)

## தொடருந்து தடத்தில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 30
ஹாலிஎல பகுதியில் தொடருந்துத் தடத்தில் இளம் பெண்ணொருவரின் சடலம்நேற்றுக்காலை மீட்கப்பட்டது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, உடுவரை தொடருந்து நிலையத் தடத்தில் சடலம் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. சடலம் இதுவரை இனங்காணப்படவில்லை. சடலத்தைஅடையாளம் காண்பதற்குப் பொலிஸார் பொதுமக்களின் உதவியைநாடியுள்ளனர். (ற-ஐ)




# யாழ். இந்துக் கல்லூரியில் கல்விக்கான நடைபவனி



யாழ்ப்பாணம், ஜூலை 30
க.பொ.த. சாதரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவுமட்டத்தைஅதிகரிக்கும்நோக்குடனான விழிப்புணர்வுநடைபவனியாழ்ப்பாணம்இந்துக்கல்லூரிமுன்றலில்நேற்று நடத்தப்பட்டது.
கல்லூரி முன்றலில் ஆரம்பமான நடைபவனி கே.கே.எஸ் வீதியின் ஊடாக முத்திரைச் சந்தியை அடைந்துஅங்கிருந்து மீண்டும் கல்லூரியை சென்றடைந்தது. தொடர்ந்து கல்லூரியின்சபாலிங்கம்அரங்கில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்து விழி நூலும் வழங்கப்பட்டது.
"கணித பாடத்தில் செயல் திறனை மேம்படுத்துதல், மெல்லக்கற்கும்மாணவர்களுக்கு சிறப்புக் கல்வித்திட்டங்களை ஆரம்பிக்க பாடசாலைகளுக்கு உதவுதல், மாணவர்களின் செயல் திறனைக்கண்காணித்துசிறந்த பெறுபேறுகளைப் பெற ஊக்குவித்தல், பெற்றோருக்கு விழிப்புணர்வு ஊட்டுதல், கல்விப் புலன் சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெறுதல்" போன்ற ஆலோசனைகள் நடைபவனியின் போதுவலியுறுத்தப்பட்டன.
"க.பொ.தசாதாரணதரப்பரீட்சையில் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நாம் கருத்தில் கொண்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டோம். மாணவர்களின் கணித பாடத்தில் சித்தியை அதிகரிக்க நாம் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். வடக்கு மாகாணத்தில் 202 பாடசாலைகளில்க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில்40வீதத்துக்கும் குறைவான மாணவர்கள் சித்தியடையும் நிலைமையே காணப்படுகின்றது. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை 40 வீதமாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் கல்வி மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றக் கூடிய துறைகளைத் தெரிவு செய்ய வேண்டும். இதனை நாம் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும்" என்று கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர் சுபாஷ்சங்கர் தெரிவித்தார்.
யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், மற்றும் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் கல்லூரியின் 1992 ஆம் ஆண்டின் உயர் தரப் பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில்இந்தநடைபவனி நடத்தப்பட்டது. நடைபவனியில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ,ரி)

## கண்டியில் அடைமழை வீடுகளுக்குள் வெள்ளம்



கண்டி, ஜூலை 30
கண்டியின்பலபகுதிகளில்நேற்று அதிகாலைதிடீரெனஅடைமழை பெய்ததால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கண்டி சுதுஹும்பல பிரதேசத்திலுள்ள பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.
சில வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கின. போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது. தற்போது வெள்ளம் குறைவடைந்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. திடீர் வெள்ளத்தால் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)

## விபுலானந்தர் நினைவு நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூலை 30
சுவாமி விபுலானந்தரின் 125ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு, மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தின் நடராஜானந்தா நினைவு மண்டபத்தில் இன்று பிற்பகல் 1.30க்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.
அகில இலங்கை இந்துமாமன்றமும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து ஏற்பாடுசெய்திருக்கும்இந்த நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

# பொல்லால் தாக்கப்பட்டு குடும்பப்பெண் கொலை

### சந்தேகத்தில் கணவன் கைது

கொழும்பு, ஜூலை 30
நுவரெலியா மாவட்டம் கந்தப்பளைபகலவத்தைதோட்டத்தில்பெண் ஒருவர்பொல்லால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்துடன் தொர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணின் கணவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
மது போதையில் வீட்டுக்கு வந்த கணவர் மனைவியுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார். அது கைகலப்பாக மாறியது. கணவர் பொல்லொன்றால் மனைவியின் தலையைத் தாக்கியுள்ளார் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
தாக்குதலுக்கு உள்ளான பெண் அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்குக்கொண்டுசெல்லும்வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் மகேஸ்வரி என்பவரே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ)

# வெல்லாவெளியில் புதிய பொலிஸ் நிலையம் திறப்பு

மட்டக்களப்பு, ஜூலை 30
மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேசத்துக்கானபுதிய பொலிஸ் நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, கிழக்கு மாகாண முதலமைச்சர்ஹாபீஸ்நசீர் அகமட், பிரதியமைச்சர்எம்.எஸ்.எஸ். அமீர்அலி ஆகியோர் இணைந்து கட்டத்தைத் திறந்தனர். நிகழ்வில் பொலிஸ் நிலைய வளாகத்தில் மரக்கன்றும் நடப்பட்டது.
வெல்லாவெளியில் இருந்த பொலிஸ் நிலையம் போரால் அழிவடைந்தது. 1970 ஆண்டு முதல் வெல்லாவெளி பொலிஸ் நிலையம் தனியார் வீடுகளில் இயங்கி வந்தது. தற்போது சட்டமும், ஒழுங்கு மற்றும் தெற்குஅபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டல்களில் ஒரு கோடி ரூபா நிதியில் இந்தப் புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் ஆயுதக் களஞ்சியம், பொறுப்பதிகாரி அலுவலகம், கடமை பொலிஸ் உத்தியோகஸ்தர் அலுவலகம், இரண்டு சிறைக்கூடங்கள், தொலைபேசி இயக்குநர் அலுவலகம், பொலிஸ் விடுதி என்பன அமைக்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கோ.கருணாகரம், மா.நடராஜா, ஞா.கிருஸ்ண பிள்ளை, மதகுருமார்கள் மற்றும் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-46)



# 200 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள்

வவுனியா, ஜூலை 30
வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் நேற்று வழங்கப்பட்டன.
வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அவற்றை வழங்கினார். 20 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. விஸன் கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ற-ஐ)



## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி ஜூலை 30
தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 2 மணிக்குச் சாவகச்சேரி சிவன்கோவில்சாலையில் உள்ள தென்மராட்சி கலை கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.
பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இணைத் தலலமைகள் தலைமையில் பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டதாகவும், இடவசதிகள் போதாத காரணத்தினால் கலாசார மண்டபத்திற்கு மாற்றம் செய்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (21,ரி,9)

## வீரகத்தி விநாயகர் அலங்கார உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் அடுத்த மாதம் 6ஆம் திகதி சிறப்புப் பூசைகள் நடைபெற்று விநாயகப்பெருமான் சாலைவலம்வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது. (21)

## கல்விக்கான நிதியுதவி

கொழும்புத்துறை, ஜூலை 30
தந்தையை இழந்த மாணவர்கள் 12 பேருக்கு கல்விக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வு கிறீன் பீல்ட் சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், குருசோ சாலையில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி சி.நேசராசா அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமரர்களான ச.இராசதுரை, செனட்டர் நல்லையா, நா.தவமணி, எஸ்.கந்தையா, அ.பாலராஜா, தி.லூர்த் தம்மா, ம.தம்பிநாயகம், பொன்னையா சற்குணதேவி, லீனப்பு ஜேட்ரூட் ஆகியோரின் நினைவாக இந்த உதவித்திட்டம் ஒரு வருடகாலத்திற்கு வழங்கப்படவுள்ளதாக நிலைதாத் தலைவர் என்.கீத பொன்கலன் தெரிவித்தார். (21,135)

# கேவலமானவர்களாக மாறும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 30
இற்றைக்கு 40, 50 வருடங்களுக்கு முன்னர் படித்தவர்கள், பண்பட்டவர்கள், இங்கிதம் தெரிந்தவர்கள், உண்மையானவர்கள், நேர்மையானவர்கள் எனப் பல சிறப்புப் பட்டங்களை தம்மகத்தே கொண்டிருந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இன்று மிகக் கேவலம் நிறைந்தவர்களாக, கல்வி அறிவுகளில் பின்தங்கியவர்களாக, காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக மாறிவருவது எம்மைத்திகைக்கவைக்கின்றன என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன். எமது இளைஞர் யுவதிகள் இயற்கையிலேயே சிறப்பானவர்கள். அவர்களின் நடவடிக்கைகளை குழப்புவதற்கும் தான்தோன்றித்தனமானசெயற்பாடுகளில் ஈடுபட வைப்பதற்கும் திட்டமிட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கோஷ்டிகள் முனைவது வெளிப்படையாக தெரிகின்ற போதும் இளைய சமூகத்தினரை ஆற்றுப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை என்றும் அவர் கூறினார்.
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டிய கந்தபுராண எழுச்சி விழா நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 7மணியளவில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது. இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இப் புதிய உலகில் இளைய சமூகமானது தான் செல்லுகின்ற பாதை சரியானதா தவறானதா என்று சிந்திக்கக் கூட நேரம் அற்ற நிலையில் ஓடிக் கொண்டிருக்கின்றது. இவ் இளைய சமூகத்தினருக்கு இயற்கையில் இருந்து தாம் விடுபட்டு வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிவதில்லை. வாழ்வியல் தத்துவங்களையும் வாழ்வியல் முறைமைகளையும் சமயத்தின் பால் கூடிய ஈடுபாடுகளையும் அவர்கள் மத்தியில் ஏற்படச் செய்ய வேண்டியதற்கான அவசியம் எழுந்துள்ளது.
சமயங்கள் வெறுஞ் சடங்குகளாக மாறியதால்த்தான் இளம் சமூகத்தினர் அவற்றை வெறுக்கின்றார்கள். சமயமானது உங்களை அமைதி உடையவர்களாக மாற்றும், அன்பு செலுத்துபவர்களாக மாற்றும், ஆன்ம சிந்தனையுடையவராக மாற்றும், உண்மைக்குக் கட்டுப்பட்டவராக மாற்றும், நீதிவழிசெல்பவராக மாற்றும் என்று அவர்களுக்கு நாம் எடுத்துக் கூற முன்வர வேண்டும். அதற்கு எமது வாழ்க்கை முறை உதாரணங்களாக அமைய வேண்டும். எனவே இனியதொரு உலகத்தைப் படைக்கும் பாரிய பொறுப்பு சமய ஆர்வலர்களிடமும் அறிவுசால் பெருந்தகைகளிடமும் அனுபவமுதிர்ச்சிபெற்றபெரியோர்களிடமும் எங்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது.
இன்று இளைஞர் யுவதிகளின் நடவடிக்கைகளை உற்று நோக்கும்போது பயஉணர்வு எமக்கு ஏற்படுகின்றது. காரணம் அவர்கள் நாம் இளமைக் காலங்களில் இருந்தது போல் இல்லாமல் பல புறச் சூழல் பாதிப்புக்களால் நலிவடைந்துள்ளார்கள். அவர்களின் இந்த நிலையைத் தொடரவிட்டால் அவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்ற கேள்வி இயற்கையாகவே எழும். இவ்வாறான பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத நிலையில் ஏங்கித் தவிக்கின்றனர். அவர்களைத் திருத்தி நல்லவர்களாக மாற்றி கல்வியில் கூடிய கரிசனையுடையவர்களாக மாற்றியமைப்பதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வி முதியவர்கள் யாவரையும் இன்று பீடித்திருக்கின்றது. ஒரு சில விடயங்களை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அன்றிருந்த நிலை இனி என்றென்றும் வரப்போவதில்லை. நாம் வன்முறைகளைக் கண்டு அதன் சூழலில் வளர்ந்து வந்து விட்டோம். எனவே வன்மம் எமது மனதிலே தேங்கியிருப்பதை நாம் உணர வேண்டும். பயமும் பீதியும் எம்மைப் பீடித்திருப்பதை நாம் உணர வேண்டும். பயம் எமது நடவடிக்கைகளை ஆற்றுப்படுத்தி வருவதையும் நாம் உணர வேண்டும். காமத்துடன் இயைந்த பாலுணர்வும் போதைப்பொருள் மற்றும் சாராய நாட்டமும் எமக்குப் பாதிப்பைத்தந்து வந்துள்ளன என்பதையும் உணர வேண்டும். இவ்வாறு எமது நிலையை நாம் உணரத் தலைப்பட்டால் பாதிக்கும் அந்தநிலைகளில் இருந்துவிடுபடலாம்.
எமது இளைஞர் யுவதிகள் இயற்கையிலேயே சிறப்பானவர்கள். அவர்களின் நடவடிக்கைகளை குழப்புவதற்கும் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளில் ஈடுபடவைப்பதற்கும் திட்டமிட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கோஷ்டிகள் முனைவது வெளிப்படையாக தெரிகின்ற போதும் இளைய சமூகத்தினரை ஆற்றுப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை. பாதிப்புக்கள் தரும் எமது சூழலில் இருந்து எமது இளைய தலைமுறையை காப்பாற்ற வேண்டுமாயின் ஆலயச் சூழல்களும் அங்கு நடைபெறும் ஆன்மீக உரைகளும் கருத்தரங்கங்களுமே அவர்களுக்கு நல்வழியை காட்டவல்லன என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது - என்றார். (21)

## கே.கே.எஸ் சாரணர் மாவட்டத்தின் 60 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜூலை 30
காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டிய அமுதவிழாவும் பாசறை திறப்புவிழாவும் மலர்வெளியீடும் விருது வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30மணிக்குத் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.
குழுச் சாரணர் தலைவரும் அதிபருமான ம.மணி சேகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக பேடன்பவல் விருது சாரணரும் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய ராச்சிய பிரதிநிதியுமான சி.கணேசலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) சு.தேவமனோகரன், பேடன் பவல் விருதுசாரணரும் கல்லூரி பழையமாணவர்சங்ககனடாக் கிளையின் பிரதி நிதியுமான இ.இரவீந்திரன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக இலங்கை சாரணர் சங்கத் தலைமைக் காரியாலய ஆணையாளர் என்.சௌந்தரராஜன் ஆகியோரும் கலந்து கொள்வர்.
நூலின் மதிப்பீட்டுரையை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம் நிகழ்த்துவார். கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட அமுதவிழா பாசறைத் திறப்புவிழா கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெறும். காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சற்குணராஜா தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அரச தலைவர் சாரணரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட சாரணர் தலைவருமான இ.இராஜரஞ்சனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21, 9)

## நாட்டுக் கூத்து இசை நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 30
குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவைச் சிறப்பிக்கும் வகையில் நேற்று முன்தினம் தொடக்கம் மூன்று தினங்களுக்கு குருநகர் கலையரங்கில் மாலை 6.45 மணிக்கு நாட்டுக்கூத்து இசைநிகழ்வு, மற்றும் மாணவர்களின் கலை நிகழ்வுக நடைபெறுகின்றன.
நேற்று முன்தினம் தூய யோசவாஸ் ஆண்டை ஒட்டி யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருவானவர்கள் மட்டும் பங்கு பற்றும் மறைகாத்த மாவீரன் என்ற நாட்டுக் கூத்து நடைபெற்றது.
நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணம் கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் விடியல் இசைக்குழு வழங்கிய இசை மாலைப்பொழுது நடைபெற்றது. இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் இளைஞர் கலைக்கழகம் வழங்கும் செங்கோல் நாட்டுக் கூத்து நடைபெறவுள்ளது. என அறிவிக்கப்பட்டது. (21)



# ரஞ்சன மஞ்சரி நூல்வெளியீடு






யாழ்ப்பாணம், ஜூலை 30
உதவிப்பிரதேசசெயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் எழுதிய ரஞ்சனமஞ்சரி நூல்வெளியீடு தென்மராட்சிப் பிரதேசகலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.
பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் முதல் பிரதியைத் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளிதரன் வெளியிட்டுவைத்தார். மருதங்கேணிப் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் அதைப் பெற்றுக்கொண்டார். (21,9)

# மாலி செல்லும் படையினருக்கு உபகரணங்கள் வாங்க அனுமதி

கொழும்பு, ஜூலை 30
மாலியில் சமாதானச் செயற்பாடுகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கைப் படையினருக்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கென அமைச்சரவையினால் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. நிலையான கொள்ளல் குழுவின் பரிந்துரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கு அமைய குறைந்த விலை மனுவை முன்வைத்துள்ள 3 நிறுவனங்களில் இருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்காகப் பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(த-ய)


# STUDY IN CANADA

உங்கள் கனவுக்கல்வியினை கனடா நாட்டில் தொடர
உங்கள் கனவிற்கும் தகைமைக்கும் மதிப்பளிக்கும்
**WINSTAR VISA CONSULTANTS** ஐ நாடுங்கள்

- அடிப்படைதகைமை O/L சித்தி. 28 வயதிற்குட்பட்டவர்கள்
- 2018 JAN INTAKES
- நீங்கள் விரும்பும் பாடநெறி தெரிவு.
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
- 100% விசா பெறுவதற்கான சிறந்த சிநேகபூர்வமான ஆலோசனைகள்
- இலவச IELTS வகுப்புகள்.
- இலவச பயணச்சீட்டு.

4 வருடங்களாக மக்கள் மனதை வென்று இயங்கும் ஒரு நிறுவனம்

சிறந்த ஆலோசனைகளைப் பெற நேரில் வரவும்.

**WINSTAR VISA CONSULTANTS**
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.
021 300 4641 www.winstarjaffna.com



# சேவைநலன் பாராட்டும்
## 60 ஆவது பிறந்த நாள் வாழ்த்தும்
(30.07.2017)

**யோசேப் கிறிஸ்ரியன்**
(பிரதம காசாளர்- இலங்கை வங்கி)

**சேவைதனில் 41 வருடங்கள்**



20.07.1976இல் இலங்கை வங்கியில் இணைந்து சுன்னாகம், யாழ்ப்பாண அதி மேற்தரக்கிளை, கச்சேரி (யாழ்ப்பாணம்), பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி ஆகிய கிளைகளில் சேவையாற்றி 01.11.2010 இல் இருந்து ஓய்வுகாலம் வரை 2ஆம் கிளை யாழ்ப்பாணத்தில் சேவையாற்றி இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை நாற்பத்தியொரு வருட வங்கிச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் பிரதம காசாளர் யோசேப் கிறிஸ்ரியன் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**சிரேஸ்ட முகாமையாளரும் ஊழியர்களும்**
**(இலங்கை வங்கி, 2 ஆம்கிளை, யாழ்ப்பாணம்)**



# வேலைவாய்ப்புக்கள்

- 43 பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வுகள் வரும் வாரம் நடைபெறவுள்ளன.
- நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் பெயர், முகவரி, தகைமை விரும்பும் பதவியினைக் குறிப்பிட்டு குறுந்தகவல் அனுப்பி முன்னனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறுந்தகவல் இலக்கம்(SMS) 076 377 5763**

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளம் | பால் |
|---|---|---|---|
| Office Clerk | 02 | 10,000/= | Female |
| Sales | 10 | 15,000/= | Male /Female |
| Excecutive Secretary | 02 | 30,000/= | Male /Female |
| Finance Excecutive | 02 | 27,000/= | Male |
| Receptionist | 02 | 10,000/= | Female |
| Graphic Designers | 02 | 25,000/= | Male /Female |
| Nurse | 05 | 18,000/= | Female |
| Accounts Trainee | 01 | 15,000/= | Female |
| Marketing Excecutive | 01 | 12,000/= | Male |
| Promotion Girls | 15 | 25,000/= | Female |
| Admin Officer | 01 | 25,000/= | Female |

வேலை தேடுவோரின் 4வருட கால நம்பிக்கை
**WINSTAR JOB BANK**
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 320 2789
Web: www.winstarjaffna.com
Fb: Winstar Job bank



# Pizza Hut

மாறிவரும் **வாழ்க்கை முறையில்**
**சுவையான தொரு** அங்கமாகுங்கள்...



சம்பளம்
ரூ. 20,000/-
ரூ. 25,000/-
இடையில்

சம்பளம்
ரூ. 26,000/-
ரூ. 30,000/-
இடையில்

## CREW MEMBERS
வயது 17-45 இடைப்பட்டிருத்தல்
(முழுநேரம்) (ஆண்/பெண்) - Full Time

புதிதாக திறக்கவுள்ள எமது கிளைகள் யாழ்ப்பாணம், மற்றும் சிலாபம்

அத்திடிய, அவிஸ்ஸாவளை, பம்பலப்பிட்டி, பண்டாரநாயக சர்வதேச விமானநிலையம், பொரலஸ்கமுவ, தெஹிவளை, கோட்டை, கம்பஹா, ஹெவ்லொக், ஜா-எல, கடுவலை, கண்டி, கொட்டாஞ்சேனை, கொழிகாவத்தை, கொட்டாவ, லிபர்டி பிலாஸா, மஹரகம, மாலபே, மாத்தறை, மெஜஸ்டிக் சிட்டி, மொரட்டுவை, நாவல, நீர்கொழும்பு, நுவரெலியா, பாணந்துறை, பிலியந்தலை, ராஜகிரிய, தலவத்துகொடை, யூனியன் பிளேஸ், வெலிசற மற்றும் வென்னப்புவ

## DELIVERY RIDERS
வயது 22-45 இடைப்பட்டிருத்தல்
(முழுநேரம்) (ஆண்/பெண்) - Full Time

அதுருகிரிய, அத்திடிய, பொரலஸ்கமுவ, தெஹிவளை, கோட்டை, ஹெவ்லொக், ஜா-எல, கண்டி, கொட்டாஞ்சேனை, கொழிகாவத்தை, கொட்டாவ, மஹரகம, மாலபே, மொரட்டுவை, கல்கிஸ்சை, நீர்கொழும்பு, நுகேகொடை, பிலியந்தலை, இரத்தினபுரி, தலவத்துகொடை, யூனியன் பிளேஸ், வத்தளை, வெலிசற மற்றும் வென்னப்புவ

நிறுவனத்தினால் வழங்கப்படும் Bajaj CT100 துவிச்சக்கரவண்டி மற்றும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி

**எம்மிடமிருந்து உங்களுக்கு**
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போனஸ்
- சேவை நேரங்களில் உணவு இலவசம்
- முன்அனுபவத்திற்கு விசேட சம்பளத் தொகை
- தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி
- உள்ளக பதவி உயர்வு
- வைத்திய காப்புறுதி
- நிரந்தர தொழில் வாய்ப்பு

- தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சியும், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண தேர்ச்சியும் இருத்தல் அவசியம்

குறைந்தபட்ச தகமை: க.பொ.த. சாதாரண தரம்வரை (O/L) கல்வி கற்றிருத்தல்
உங்களின் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், கல்வி, சேவை சான்றிதழ் மற்றும் வங்கி புத்தகத்தின் பிரதியுடன் திங்கள், முதல் வெள்ளி வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 மணியளவில் கீழுள்ள முகவரிக்கு நேர்முக பரீட்சைக்காக வரவும்.

**55/25, வொக்ஸ்ஹோல் ஒழுங்கை, கொழும்பு 02.**
(இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பிரதான காரியாலயத்திற்கு பின்னால்)
**jayakody@gamma.lk** | விபூஷன - 0779226070
(கோட்டையிலிருந்து 138 மஹரகம பஸ்சில் ஏறி நவலோக சந்தியில் இறங்கி கியூ வீதியிலுள்ள வொக்ஸ்ஹோல் ஒழுங்கையில் இறுதி முனைக்கு வரவும்)



# 23ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
அச்சுவேலியூர்
**ஆறுமுகம்**
**லோகேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரியர்- அச்சுவேலி மத்திய கல்லூரி)



அவசியப் பிறப்பு
12.03.1932

அவசர அழைப்பு
14.08.1994

திதி:- 30.07.2017

மண்ணில் இருப்பவரையே - இன்று
மறக்கிறது மனித இனம்
மண்ணை விட்டுச் சென்றாலும் - உங்களை
மறக்க முடியவில்லையே அப்பா..

**பிரிவால் துயருறும்**
**மனைவி, மகள், மகன், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

# 24 வெளிநாட்டவர்கள் ஐந்து மாதங்களில் கைது

கொழும்பு, ஜூலை 30

இந்த ஆண்டின் முதல் 5 மாத காலப்பகுதியில் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் 24 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவர்களிடமிருந்து, சுமார் 34 கிலோகிராம் ஹெரோய்ன், 52 கிலோகிராம் கேரளக் கஞ்சா மற்றும் கொக்கெய்ன் முதலான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியது. பாகிஸ்தானியர்கள் 9 பேர், இந்தியர்கள் 8 பேர், நைஜீரியர்கள் இருவர் உட்பட பிரான்ஸ், இத்தாலி, மாலைதீவுகள், ஈரான் மற்றும் லட்வியா முதலான நாடுகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவருமே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டவர்கள் 83 பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது. (கு)









## தொடருந்து...

இந்தச் சம்பவம் சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்று நடந்துள்ளது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சிங்காரம் சிவச்செல்வன் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

சங்கத்தானையில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பும்போதே இந்த விபத்து நடந்துள்ளது. பேருந்து வருகின்றதா என்று சாலையைத் திரும்பிப் பார்த்தவாறு தொடருந்துத் தடத்தைக் கடக்க முற்பட்டபோதே விபத்து நடந்தது என்றும் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தை அடுத்துத் தொடருந்துக் காப்பாளர் சடலத்தைக் கொடிகாமம் தொடருந்து நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். சடலத்தை சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந-9)

## மாணவியின்...

ஒருவரது குடிதண்ணீரில் மர்மப்பொருள் கலக்கப்பட்டுள்ளது. இந்தக் குடிதண்ணீரைப் பருகிய மாணவி கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சி மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். மாணவி வகுப்பில் தொடர்ச்சியாக முதலிடம் பெற்றுவருவதே இதற்குக் காரணம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மாணவி பருகிய குடிதண்ணீர் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோருடன் வலயக் கல்விப் பணிமனையினர் கலந்துரையாடியுள்ளனர். பெற்றோரது சம்மதத்துடன் மாணவியை வேறு பாடசாலைக்கு மாற்றி, மாணவியின் கல்வி நடவடிக்கை தொடர்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (த-5-101)

## அம்பாந்தோட்டை...

பாந்தோட்டைத் துறைமுகத்தின் பங்காளர்களாக மாறியுள்ளன.

ஒப்பந்தத்தில் இலங்கை அரசு சார்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் எல்.பி.ஜயம்பதி, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திசாநாயக்க ஆகியோரும் சீன அரசு சார்பில் சைனா மேர்சன்ட் நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர் கலாநிதி ஹூ ஜியான் ஹூம் கைச்சாத்திட்டனர்.

தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்படப் பல்வேறு அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

இந்த நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்த ஒப்பந்தம் இலங்கையின் யாப்பு மற்றும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கைச்சாத்திடப் படுகின்றது. அதற்கு இணங்கிச் செயற்பட சீன நிறுவனம் உறுதியளித்துள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

"மகிந்த ராஜபக்ச காலத்தில் சீனாவுடன் செய்துகொள்ளப்படவிருந்த ஒப்பந்தத்தின் ஊடாகத் திறைசேரிக்கு எவ்வித இலாபமும் கிடைக்க வாய்ப்பு இருக்கவில்லை. தற்போதைய ஒப்பந்தத்தின் படி 1.12 பில்லியன் அமெரிக்க டொலர் திறைசேரிக்கு வருமானமாகச் செல்லும். எதிர்காலத்தில் 600 மில்லியனை முதலீடு செய்ய சீன நிறுவனம் தீர்மானித்துள்ளது. பூகோள அரசியல் மாற்றத்தை எம்மால் புறந்தள்ள முடியாது.

எமது நாட்டின் அரசியல் யாப்பு, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயற்படுவதற்கு சீன நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்கு உட்பட்டே ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனைவிடத் துறைமுகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை அரசின் வசமே காணப்படும். அமைச்சரவையில் இது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு கருத்துக்கள் வெளியாகின. இந்த ஒப்பந்தம் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட நாடாளுமன்றில் அவகாசம் வழங்கப்பட்டது. அரச தலைவரின் ஆலோசனைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் 58ஆவது பந்தியின்படி சில திருத்தங்களைத் தேவையான எந்தவொரு நேரத்திலும் திருத்தியமைக்க முடியும். அதற்கான ஏற்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன" என்று மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

"மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய முதலீடு நாட்டுக்குக் கிடைத்துள்ளது. அதனை விடவும் இந்தத் திட்டத்தின் ஊடாகத் துறைமுகத்தை அண்மித்த மாவட்டங்களுக்குக் கொழும்புக்கு இணையான அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். இந்த முதலீட்டு வலயத்தை மையப்படுத்தி ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகள் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளன." என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் பன்னாட்டு வர்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, சிறப்புத் திட்டமிடல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (ந-ஐ)

**சின்ன மடு புனித செபமாலை மாதா யாத்திரைத் தல விழா**

27.07.2017 தொடக்கம் 04.08.2017 வரை

ஆயத்த வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கும். திருவிழா திருப்பலி 05.08.2017 (சனி) காலை 7.00 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.

யாத்திரிகருக்கு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கடைகள் போடுவோர் பிரதேசசபை அனுமதியுடன் முதலாம் திகதி ஆலய நிர்வாகத்தை அணுகலாம்.

அன்னையூடாக இறையருள் பெற அனைவரையும் அழைக்கிறோம்.
பரிபாலகர்.






LG
Life's Good

# ரூ. 3,806 இலிருந்து

மாதாந்த தவணைக் கட்டண முறையில்

LG உண்மையான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்றை இன்றே உங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள்!

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு



## கண்மூடித்தனமாக சுத்திகரிக்கப்படாத எந்த நீரையும் பருகாதீர்கள்!



### உண்மையான RO வடிகட்டுதல்

கண்களுக்குப் புலப்படாத மற்றும் புலப்படும் பெரிய துகள்கள், துரு, கரை, சேறு, மணல், மண், கன உலோகம், கல்சியம், உப்பு, பக்டீரியா, வைரஸ், கிருமிநாசினிகள் மற்றும் ஆசனிக் ஆகியவற்றை நீக்கி 100% தூய்மையான மற்றும் ஆரோக்கியமான நீரை பெற்றுத்தருகிறது.

### உண்மையான பாதுகாப்பு

இரட்டை பாதுகாப்பு ஸ்டைன்லெஸ் ஸ்டீல் நீர் தாங்கி

காற்றுப் புகாத மூடியைக் கொண்ட ஸ்டைன்லெஸ் ஸ்டீல் தாங்கியில் நீர் எப்போதும் புத்துணர்வோடு இருக்கும்.

### உண்மையான அதிசிறந்த பராமரிப்பு

டிஜிட்டல் பராமரிப்பு

நீர் தாங்கி மற்றும் நீர் பயணிக்கும் சகல பாதைகளையும் 'தன்னியக்க டிஜிட்டல் பராமரிப்பு இயந்திரம் மூலம் தொடர்ந்து கிருமியழித்து சுத்திகரிக்கின்றது.

யாழ்ப்பாணம் (ஸ்டான்லி வீதி) 021-2220981, யாழ்ப்பாணம் (மானிப்பாய் வீதி) 021-5776107, யாழ்ப்பாணம் (ஸ்டான்லி வீதி) 021-5776153, திருநெல்வேலி -021-2220247, சுன்னாகம்-021-2240440, சங்கானை-021-2250106, மானிப்பாய்-021-5776100, அச்சுவேலி-021-3202027, நெல்லியடி -021-2264934, சாவகச்சேரி-021-2270005, மல்லாவி-021-5776108, முள்ளியவளை -021-5776104, முல்லைத்தீவு 021-5776154, புதுகுடியிருப்பு (பரந்தன் வீதி) -021-5776156, பளை - 077-3358560, புதுகுடியிருப்பு (முல்லைத்தீவு வீதி) -021-5776110, கிளிநொச்சி (A9 வீதி) 021-5776103, கிளிநொச்சி (கனகபுரம் வீதி) 2-021-5776155, பருத்தித்துறை 021-2262456, தெல்லிப்பளை 021-5776152, மன்னார் (கிராண்ட் பசார்) 023-2251193, மன்னார் (பள்ளிவாசல் வீதி) 023-5776097, முழங்காவில் 021-5776151, முருங்கன் - 023-3238552, கொடிகாமம் - 021-5776109, வவுனியா (கண்டி வீதி) - 024-2224878, வவுனியா (கண்டி வீதி) 024-5776151

Abans



LG
Life's Good

## LG டோ கூலிங் இன்வெர்டர்+

### அல்லாதவை ஒருபோதும் மின்சாரத்தை சேமிக்காது...

குளிரூட்டிக்கு தேவையான குளிர்ச்சியை மாத்திரம் வழங்கக்கூடிய **இன்வெர்டர் கொம்பிரெஸோர்** மற்றும் கதவுகளின் மூலம் குளிரூட்டக்கூடிய **டோ கூலிங் தொழில்நுட்பம்** ஆகிய இரண்டு சிறப்பம்சங்களையும் கொண்டுள்ள ஒரேயொரு குளிரூட்டி **LG டோ கூலிங் இன்வெர்டர்+ குளிரூட்டியாகும்.** அதனால் இப்பொழுது சந்தையில் உள்ள குளிரூட்டிகள் மத்தியில் அதிக மின்சாரத்தை சேமிப்பது **LG டோ கூலிங் இன்வெர்டர்+ குளிரூட்டியாகும்.**

மின்சார சேமிப்புக்கு 42% வரை உத்தரவாதம்

LINEAR COMPRESSOR 10 YEAR WARRANTY

இலங்கையில் முதல் மற்றும் ஒரேயொரு சேமிப்பை இரட்டிப்பாக்கும் குளிரூட்டி

**அதிகம் அதிகமாக சேமிக்கும் LG டோ கூலிங் இன்வெர்டருக்கு இன்றே மாறுங்கள்!**






கவர்ச்சிகரமான தோற்றத்தையுடைய இரட்டைக்கதவு குளிரூட்டி

இரட்டைக்கதவு குளிரூட்டி

டிஜிட்டல் டிஸ்பிலே மற்றும் நீர் டிஸ்பென்ஸர் கொண்ட குளிரூட்டி

பொட்டம் பிரீஸர் கொண்ட குளிரூட்டி

டோ இன்டோ இரட்டைக் கதவு குளிரூட்டி

டோ இன்டோ சைட் பய் சைட் குளிரூட்டி

83,400 ரூபாவிலிருந்து

0115939000

நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் ஏக முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

Hero

ஹீரோ உங்களுக்கு
5 வருட உத்தரவாத்தை வழங்குகிறது
அதனால், எந்த தயக்கமும் இல்லாமல் ஓட்டிச்செல்லுங்கள்

நவீன தொழில்நுட்பத்தில் பரிபூரண சிறப்பம்சம் தொடர்பான உயர் சான்றிதழே முழுமையான உத்தரவாதமாகும். இதனாலேயே, இலங்கையில் முதல் முறையாக ஹீரோ தனது அனைத்து மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு 5 வருட நம்பகமான உத்தரவாத்தை வழங்குகிறது. அதனால், மனதில் எந்த தயக்கமும் இல்லாமல் ஹீரோ மோட்டார் சைக்கிள்களை சுதந்திரமாக ஓட்டிச் செல்லுங்கள்.




இங்கு இலங்கை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள மாகாண வலய வரைபு கோடுகள் விளம்பரத்திற்காக பயன்படுத்தப்பட்டவையாகும். 2013 செப்டம்பர் மாதம் தொடக்கம் சகல மோட்டார் சைக்கிள்களுக்கும் 5வருட பூரண உத்தரவாதத்தை ஹீரோ மோட்டார்ஸ்கோப் வழங்கி வருகிறது. மோட்டார் சைக்கிள்களுக்கு 70,000 கிலோமீட்டர் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு 50,000 கிலோமீட்டர் உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

☎:011 5 777 000
R.G. டிரேடர்ஸ் - 0777 340056
Facebook.com/HeroMotoCorpSriLanka
ஹீரோ மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களை
அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans



# கண்டி, நுவரெலியா மக்களுக்கு எச்சரிக்கை

ஹற்றன், ஜூலை 30
கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கடும் வறட்சியின் பின்னர் மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இடர் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மலையகத்தின் நான்கு மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்படும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


மண் சரிவு ஆபத்துக்கள் காணப்பட்டால் உடனடியாக அந்த பிரதேசத்தை விட்டு வெளியேறுமாறு பொது மக்களுக்கு அவசர அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண் சரிந்து வீழக்கூடிய பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# இந்தியாவுடனான உறவு இலங்கையை பாதிக்காது

## கூறுகிறார் தலைமை அமைச்சர் ரணில்

கொழும்பு, ஜூலை 30
இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது நாட்டுக்குப் பாதகமாக இருக்காது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.




கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்ட அவர், திருகோணமலைத் துறைமுக எண்ணெய்க் களஞ்சியத்தை இந்திய இலங்கைக் கூட்டுக் குழு ஆய்வு செய்யும். தொழிற் சங்கங்களுடனும் கூட ஆலோசிக்கப்படும்.

இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது நாட்டுக்குப் பாதகமாக இருக்காது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களையும் அரசு மேற்கொள்ளவுள்ளது. இதற்காக, 2 - 3 பில்லியன் முதலீடுகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (த)



ashok
STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.105,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS
375

# எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக்கும் திட்டம் நிறைவேறவில்லை

## மஹிந்த அணியும், ஜே.வி.பியும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ள போதிலும், அது நிறை வேற்றப்படவில்லை என்று பொது எதிரணியான மகிந்த அணியும், ஜே.வி.பியும் நேற்று முன்தினம் அறிவித்தன.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரு கட்சிகளும் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்புகளின்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி கருத்து வெளியிட்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன,

அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் திட்டத்துக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கவில்லை. உரிய வகையில் வாக்கெடுப்பு நடக்கவில்லை. செங்கோலானது உரிய இடத்தில் இருக்கவில்லை. செங்கோலை படைக்கள சேவிதர் தூக்கிவிட்டார். உரிய இடத்திலிருந்து அதைத் தூக்கிய பின்னர் சபாநாயகர் வெளியேறவேண்டும்.

அதுவே நாடாளுமன்ற சம்பிரதாயம். எனவே, எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் பிரேரணை இன்னும் நிறைவேறவில்லை என்றே பொருள்படும் என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே,

கிராமப் பகுதிகளிலுள்ள வட்டிக்கடை முதலாளி போன்றே சபாநாயகர் செயற்படுகின்றார். தலைமை அமைச்சரின் கைப்பாவையாக அவர் மாறியுள்ளார் என்றார்.

அதேவேளை, ஜே.வி.பி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின்போது இது பற்றி கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க,

வாக்கெடுப்பின்போது செங்கோல் உரிய இடத்தில் இருக்கவில்லை. அது படைக்கல சேவிதரின் தோளிலேயே இருந்தது. இப்படி வாக்கெடுப்பு நடத்த முடியாது. இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஆரம்பத்தில் வரிசைகிரமப்படியும் பின்னர் பெயர் கூவியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இடைநடுவில் அது கைவிடப்பட்டது.

வாக்கெடுப்பின் பின்னர் முடிவுகளைச் சபாநாயகர் அறிவிக்கவேண்டும். அதுவும் இங்கு நடைபெறவில்லை.

எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தல் நிறைவேறவில்லை. அதை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் விவாதித்து நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்துக்குள் செங்கோல் இருந்தால் வாக்கெடுப்பு நடத்தலாம். அது உரிய இடத்தில் இருக்கவேண்டுமென அவசியமில்லை. வர்த்தமானி அறிவித்தல் நிறைவேறியுள்ளது என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (த)

---

**வீடு விற்பனைக்கு**

கைதடியில் 3 பரப்புக்காணியில் சகல வசதிகளுடன் புதிய வீடு விற்பனைக்குண்டு.

**077 210 5373**

**விற்பனைக்குண்டு**

Golden Finches, Star Finches, Red Finches விற்பனைக்குண்டு.

**078 301 4280 - சேர்ஜ் ஒழுங்கை, அராலி வடக்கு.**

**பெண் உதவியாளர் தேவை**

மானிப்பாயில் தங்கி வேலை செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

**077 555 8283** (CS 6258) (14)

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரோறண்டுக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

1. சுத்திகரிப்பாளர் (Room boy)
2. சமையலாளர் (Cook)

**077 839 2107**

**யாழ்- பரிஷ் திருமண சேவை**

20 வருடங்களாக திருமணசேவையை நடத்தி வருகின்றோம். தற்போது எம்மிடம் செவ்வாய்க் குற்றமுள்ள மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. நீங்களும் விவரத்துடன் தொடர்பு கொள்ள அழையுங்கள்.

**062 558 1037 - பரிஷ்,**
**077 569 2874 - யாழ்,**
**077 181 4499 - யாழ்.**

**வேலைக்கு ஆள் தேவை**

வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.

**077 729 0300** (CS 6235) (14)

**வீடு விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் நாவாந்துறை கெனடி வீதி, 12/12 என்னும் முகவரியில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
அ.கோபிராஜ்
**T. P :** 076 573 1160, 076 908 1760

**விற்பனைக்கு**

றைஸ் குக்கர் விற்பனைக்கு உண்டு.
(10 L)

**077 756 1341**

**ஒத்துமாறல்**

கொழும்பு மத்தியில் அமைந்துள்ள அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (DO) பணியாற்றும் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

**071 349 2846**

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் கொட்டைக்காட்டில $4\frac{1}{2}$ பரப்புக்காணியும். திருநெல்வேலி முருகன் வீதியில் 2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

**076 697 2287**

**முச்சக்கர வண்டி விற்பனைக்கு**

Q D - HQ என்னும் தொடர் இலக்கமுடைய 2 / STROKE முச்சக்கர வண்டி இரண்டு விற்பனைக்கு

**077 844 6089**

**மணமகள் தேவை**

திருநெல்வேலி. பரணி 8 இல் செவ்வாய், $29\frac{1}{4}$ பாவமுடைய 35 வயதுள்ள UK Service Station இல் Manager ஆகத் தொழில் புரியும் PR உள்ள யாழ். இந்து மணமகனுக்கு மணமகள் தேவை.

**076 741 2627**

**வேலைவாய்ப்பு (T.O)**

NCT or Equivalent கல்வித் தகைமையுடைய Buliding, Bridge Construction Work இல் குறைந்தது 3 வருட அனுபவமுடைய கிளிநொச்சி. முல்லைத்தீவு. யாழ்ப்பாணம் போன்ற வட மாவட்டங்களில் **Technical officer** பதவிக்கு உடன் வெற்றிடங்கள் உண்டு.

**077 344 4801**

**விற்பனைக்கு**

கடந்த மாதம் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Hand tractor (சிறிய டிராக்டர்கள்) Paddy Harvesting Machine (நெல் அறுவடை இயந்திரம்)Paddy Transplantor Machine (நாற்று நடும் இயந்திரம்) Cement mixer (சிமெண்ட் கலவை இயந்திரம்) ஆகிய இயந்திரங்கள் மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. இந்த இயந்திரங்களைப் புத்தளத்தில் பார்வையிடலாம்.

**076 689 1791**

**ஆசிரியர் தேவை**

Montessori, Grade - 1 ஆகிய வகுப்புக்களுக்கு ஆங்கில மொழி மூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை. G.C.E (O/L) or G.C.E (A/L) Fluency in English அவசியம் நேரில் வரவும்.

**Beefort International School**
136, Navalar Road, Jaffna.
**011 592 5923** (CS [illegible]) (14)

**திருமண சேவை**

உள்நாட்டு டொக்டர். எஞ்சினியர். வங்கியாளர்கள். ஆசிரியர்கள். அரச உத்தியோகத்தர்கள் மணமக்கள் எம்மிடம் உள்ளனர்.

அத்துடன் சகல வெளிநாட்டு மணமகள். மணமகன்களின் குறிப்புக்களும் எம்மிடம் உள்ளன. உங்களுக்குத் தேவையான மணமக்களை காளி அம்மன் துணையுடன் தேடித் தருகின்றோம். உற்றார். உரித்துடையோர் மட்டுமே தொடர்புகளுக்கு.

**Viber - 077 946 4287**
( பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது )

**வீடு வாடகைக்குண்டு**

சுண்டுக்குளி பாடசாலை அருகில் **(250m)** 4 அறைகளுடன் கூடிய **(Ac/Non Ac)** நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மாடிவீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
**(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)**

**தொடர்பு: 077 302 7618**

**மணமகன் தேவை**

1991 ஆம் ஆண்டு பிறந்த சுவீடனில் Full qualified MBBS படித்த டொக்டர் மணமகளுக்கு Full qualified MBBS முடித்த டொக்டர் மணமகன் தேவை.

**ஐரோப்பா**
**ரஷ்யா**
**சிறீலங்கா**

இடங்களில் படித்த மணமகன் விரும்பத்தக்கது.

பிறந்த ஆண்டு 1984 - 1990 இற்குள் இருப்பது விரும்பத் தக்கது.

IT Engineer Expert ஐரோப்பாவில் படித்தவர்களும் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:-Email address**
seegeer10@gmail.com

**EPF, ETF உடன் நிரந்தர வேலைவாய்ப்பு**

முதல்தர காப்புறுதி நிறுவனம் ஒன்றுக்கு காப்புறுதி அனுபவம் மிக்க TEAM LEDERSஉடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

**076 920 0619**

**தவறிவிட்டது**

கடந்த 19.07.2017 இல் சுன்னாகம் சந்திக்கும் மருதனார் மடம் சந்திக்குமிடையில் ஆ.ஜெயந்தி ஆகிய எனது தே.அ.அட்டை (738083105V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ([illegible])

**077 317 4227/ 071 767 9457**

**மாடிவீடு விற்பனைக்குண்டு**

பெரிய அரசடி சாவகச்சேரியில் சகல வசதிகளுமுடைய கீழ்தளம் 2500 சதுர அடி விஸ்தீரணமுடையது.

**077 910 7242**

**காணி விற்பனைக்கு**

மண்கும்பான் வெள்ளைக் கடற்கரையில் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**தொடர்புகளுக்கு: 077 910 7242** (IN/2949)(10)

**தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை**

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 2017.05.31க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 2017.08.12 ம் திகதி காலை 11.00 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டின் சாதகம்!

தமிழர்களின்பிரச்சினைக்கு கொழும்பு அரசு இழுத்தடிக்காமல்தீர்வை வழங்க வேண்டும். அதற்குப்பன்னாட்டு அழுத்தமே மிக அவசியம்.

இவ்வாறுவலியுறுத்தியிருக்கிறார்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். கனடா நாட்டின் கொழும்புக்கான தூதர் ஷெல்லி வைற்றிங் நேற்றுமுன்தினம் அவரைநேரில்சந்தித்துப்பேசியபோது சம்பந்தன் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

இப்போது மட்டும் என்றில்லை போருக்குப் பின்னரான எல்லாக்காலத்திலும்பன்னாட்டுஅழுத்தம்ஒன்றேதீர்வைத்தரும், பன்னாட்டுச் சமூகத்தையே நம்பியிருக்கின்றோம் என்று சம்பந்தரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றார்கள்.

போருக்குப் பின்னரான சூழலில் தமிழ் மக்கள் அதிகம் நம்ப வைக்கப்பட்டதும் இந்தப் பன்னாட்டுத் தலையீட்டின் மீது தான். இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைப் பன்னாட்டுச்சமூகம் பெற்றுத்தரும், அதற்கு வேண்டிய அழுத்தத்தை வழங்கும் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் உரைத்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, அதற்கு எதிராகஅரசியல்செய்கிறோம்என்றுகூறிக்கொள்ளும் அரசியல் தலைமைகளும் கூட உலக அரசியல் போக்குக்கு ஏற்ப நடந்துகொண்டு அதற்கூடாகப்பன்னாட்டுச்சமூகத்தின் ஒத்துழைப்புடன்தான் ஒரு தீர்வை அடைய முடியும் என்று மக்களை நம்ப வைத்தன.

அதனால்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அலுவலகம் அமைந்துள்ள ஜெனிவாவில் கொழும்புக்கு எதிராகத் தீவிரமான நிலைப்பாட்டைக் கூட்டமைப்பு எடுக்கவில்லை என்று அவை குற்றஞ்சாட்டின. இப்படி விட்டுக்கொடுப்பது கொழும்புக்குச் சாதகமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கு என்றும், இது சரணாகதி அரசியல் என்றும் சாடின. பதிலுக்கு உலக நாடுகளின் போக்கோடு இணைந்துதான் செல்ல வேண்டும், அதுதான்ராஜதந்திரம்என்றுகூட்டமைப்புக்கூறியது.

இப்படி விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான தமிழ் அரசியலில் அல்லது முள்ளிவாய்க்காலில் ஆரம்பித்த அரசியலில் தமிழர்களின் பிரச்சினையில் உலக நாடுகளின் பங்களிப்பு இன்றியமையாதது என்ற நிலைப்பாடு ஆணித்தரமாக ஊன்றப்பட்டுள்ளது.

புலிகளின் கடைசிக் காலத்தில் அதாவது முள்ளிவாய்க்கால் துயரத்தின் காலத்திலும், இதுபோன்றதொரு ஆழமான நம்பிக்கை இருந்ததை அவதானிக்கலாம். புலிகள் அழிந்துபோகவும், போரில் ஒரு மனிதப் பேரவலம் நிகழவும் உலக நாடுகள் அனுமதிக்கமாட்டா என்ற எதிர்பார்ப்பும் கணிப்பும் இருந்தன.

மனித உரிமைகள் குறித்து உலகம் அதிகம் கரிசனை காட்டிவரும் சூழலில், வன்னிப் போர்க் களத்தில் கொழும்பின் படைகள் அவை அனைத்தையும் காலில் போட்டு மிதித்தபடி நடத்திவரும் போர் இலங்கையைத் துண்டாடக்கூட வழிவகுத்துவிடும் என்று நம்பியவர்கள்கூட உண்டு. இறுதிப் போரின் இராஜதந்திரமாக அதுவே இருக்கிறது என்று எழுதிய அரசியல் ஆய்வாளர்களும் உண்டு.

கடைசியில், மனிதப் பேரவலம் நடந்து முடிந்ததுடன் விடுதலைப்புலிகளின்அத்தியாயத்துக்கும்முடிவெழுதப்பட்டது. உலகம்அந்தப்போரில்வெற்றிபெற்றவரின்பக்கமேஅழகாக நின்றுகொண்டது. இன்றுவரைக்கும்தமிழர்களுக்குநீதியோ, உதவியோகிடைப்பதைக்கூட அந்தஉலகநாடுகளால்உறுதிப்படுத்த முடியவில்லை.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை அகற்றி தமக்கு இசைவான ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தமிழர்களின் பிரச்சினையைப்பயன்படுத்திக்கொண்ட அளவிற்குத்தமிழர்களுக்குப் பயனுள்ள வகையில் உலக நாடுகளின் தலையீடு கொழும்பில் நிகழ்ந்ததில்லை. இனியும் நிகழ்வதற்கான வாய்ப்புகளைக் காணமுடியவில்லை.

அப்படியிருக்கும்போது, உலக நாடுகளின் அழுத்தமே தீர்வைத் தரும் என்று நம்பியிருப்பதில் எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள் அரசியல்ரீதியாக நலிந்திருந்தபோது நிமிர்வதற்கும், மோசமான பின்னடைவில் இருந்து மீண்டெழுவதற்கும், உலக நாடுகளின் ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டது சரி, தீர்வையும் அவர்களே பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்ப்பது சரியானதுதானா என்று சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ஏனெனில் போர் முடிந்து 8 வருடங்களில் தமிழர்கள் தலையில் வைத்துக் கொண்டாடிவிடக்கூடிய எதனையும் இந்த உலகநாடுகள் செய்யவில்லை.

எனவேமீண்டும்மீண்டும்உலகநாடுகளின்அழுத்தமேதீர்வைத் தரும்என்றநம்பிக்கையைமீள்விசாரணைசெய்வது அவசியம்.



# இலங்கைக்குத் தேவை

# ஒரு புதிய அரசியல் அமைப்பு, ஒரு புதிய பாதை

பிரபல அரசியல் ஆய்வாளரான வ.திருநாவுக்கரசு எழுதி 'கொழும்பு ரெலிகிராப்' ஆங்கில அச்சு ஊடகத்தில் வெளியான கட்டுரையின் தமிழ்வடிவம் கீழே தரப்படுகிறது.





இனவாதமும், மதச்செருக்கும் இந்த நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு இரட்டித்த சாபக்கேடாய் இருந்து வந்துள்ளன. நாட்டின் கடந்த நூற்றாண்டு கால வரலாற்றை நோக்குவோமாயின், இந்தநிலைமையானது ஆரம்ப கட்டத்திலேயே தோற்றம் பெற்று, வெவ்வேறு வடிவங்களில் இற்றைவரை நிலவி வருகிறது. 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததை அடுத்து, குறிப்பாக கொரியா நாட்டில் நடைபெற்ற போர் மற்றும் சீனாவுடன் செய்து கொண்ட இறப்பர் - அரசி ஒப்பந்தம் போன்ற நிலைமைகள் வாயிலாக, பொருளாதார வளர்ச்சி அறிகுறிகள் தென்பட்டன. எனினும், பின்பு சிங்கள மேலாதிக்கச் சிந்தனைகள் தோன்றியதன் காரணமாக, நிலைமைகள் தொடர்ச்சியாக மோசமடைந்து வந்துள்ளன. குறிப்பாக, 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் நெருங்கிய சந்தர்ப்பத்தில் ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மொழிப்பிரச்சினையைக் கையிலெடுத்துமேற்கொண்ட போட்டாபோட்டியில் ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைவர் எஸ். டபிள்யூ. ஆர்.டீ. பண்டாரநாயக்க, தனது ஆரம்ப கால இரு அரச கரும மொழிக் கொள்கையைக் காற்றில் பறக்க விட்டு, '24 மணித்தியாலத்தில் சிங்களம் மட்டும்' என்ற பதாகையின் கீழ் தேர்தல் பரப்புரை முயற்சியில், 'பஞ்ச மகா பலவேகய' என்ற போர்வையில் விவசாயிகள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், சமயத்தலைவர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள் போன்ற சக்திகளை அணிதிரட்டி தேர்தல் களத்தில் இறங்கி வெற்றியீட்டினார். பதவிக்கு வந்து 2 மாத காலத்திலேயே, நாடாளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டமூலத்தைக் கொண்டு வந்தார். தமிழ்மொழியைப் புறக்கணித்தது சாதாரண நீதி நியாயத்துக்கு முரணானது மட்டுமல்லாமல், அன்று நடைமுறையில் இருந்த சோல்பரி யாப்பின் 29 ஆவது பிரிவுக்கு குந்தகமானது என்று தமிழ்த் தலைவர்கள் வாதாடினர்.

அதே வேளை, லங்கா சமசமாஜக் கட்சி உள்ளிட்ட இடதுசாரிகள், அதனை வன்மையாக எதிர்த்து "இரு மொழிகள், ஒரு நாடு; ஒரு மொழி இரு நாடுகள்" என்ற கருத்தை முன்வைத்ததோடு, அது எதிர்காலத்தில தமிழர் தரப்பினரை ஒரு தனிநாட்டுக் கோரிக்கைக்கு இட்டுச் செல்லும் என்றெல்லாம் காரசாரமான வாதங்களை முன்வைத்தனர். பண்டாரநாயக்க அந்த வேளையில் பதவி மோக சந்தர்ப்பவாதத்தில் ஊறியிருந்தமையால், மேற்குறித்த எதிர்ப்புகள் எல்லாவற்றையும் புறந்தள்ளி விட்டார்.

### தனிச் சிங்கள சட்டத்தை எதிர்க்க தமிழ் அரசுக் கட்சி முடிவு

எனவே, தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பரந்த அளவிலானதொரு எதிர்ப்பு இயக்கத்தை முடுக்கி விடப்போவதாக பகிரங்கமாக அறிக்கை விடுத்தார். ஆனால் அதனைத் தடுக்கும் நோக்கில், செல்வநாயகத்தோடு பேச்சு நடத்துவதற்கு பண்டாரநாயக்க அழைப்புவிடுத்தார். அதனை அடுத்து நடந்தேறிய கலந்துரையாடல்களின் அடிப்படையில் 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது தான் பண்டா - செல்வா ஒப்பந்தம் ஆகும். அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து, தாம் உத்தேசித்திருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை கைவிடப் போவதாக செல்வநாயகம் அறிவித்திருந்தார். குறித்த ஒப்பந்தத்தை ஏறத்தாழ ஒருவருட காலமாக ஆங்காங்கே சிங்கள மக்கள் மத்தியில் பண்டாரநாயக்கா விளக்கி வந்தார். அந்தச் சந்தர்ப்பங்களில், தாம் பௌத்தமதத்தில் அலாதியான பற்றுள்ளவர் என்றும் எடுத்துரைத்து வந்தார். இருந்தபோதும், ஒப்பந்தத்துக்கு எதிராக, குறிப்பாக பௌத்த துறவிகள் மத்தியிலிருந்து தான், எதிர்ப்புக்கள் கிளம்பின.

### ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பாத யாத்திரை

அத்தோடு குறித்த அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து, ஐ.தே. கவின் மறைந்த தலைவர், ஜே.ஆர் ஜயவர்த்தன, கண்டி நோக்கி ஒரு பாத யாத்திரை மேற்கொண்டிருந்தார். எவ்வாறாயினும், தலைமை அமைச்சர் பண்டாரநாயக்காவின் ஆலோசனையின் பெயரில், ஸ்ரீ.ல.சு.க. நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த எஸ். டீ. பண்டாரநாயக்காவினால் ஜயவர்த்தனவின் கண்டியாத்திரை இம்புல்கொடவில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டது. இருப்பினும் ஜயவர்த்தனவின் முயற்சி வெற்றியீட்டுவதற்கு பௌத்த துறவிகள் தொடுத்த போராட்டமும் கைகொடுத்தது. அதாவது, 1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதியன்று காலை 9 மணியளவில், நூற்றுக்கணக்கான துறவிகள் திரண்டு சென்று அந்த வேளையில் பண்டாரநாயக்க வசித்து வந்த 'றொஸ்மிட்பிளேஸ்' இல்லத்தை முற்றுகையிட்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும் என்று வற்புறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆனால், பண்டாரநாயகாவிற்கு பக்கபலமாக ஒரு சில ஸ்ரீ.ல.சு.க உறுப்பினர்கள் தானும் முன்வரவில்லை.

எனவே, பௌத்த துறவிகளது நிர்ப்பந்தத்துக்கு அவர் அடிபணிந்தபடியால், அந்த இரு தரப்பு ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக கிழித்தெறியப்பட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் ஒரு கூட்டாட்சி முறைமையை உள்வாங்கவோ, சிங்களம் மட்டும் சட்டத்தில் எதுவித மாற்றம் செய்யவோ இடமளிக்கவில்லை. ஆனால் அதே நேரம் வடமாகாணத்துக்கு ஒரு பிரதேச சபையும், கிழக்கு மாகாணத்துக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச சபைகளும் அமைப்பதற்கு அந்த ஒப்பந்தம் மூலம் இடமளிக்கப்பட்டது. அத்தோடு விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடி போன்ற 13 துறைகளுக்கான அதிகாரங்கள் அந்தச் சபைகளுக்கான ஒதுக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் குடியேற்றத்திட்டங்க ளுக்கான பயனாளிகளை தெரிவு செய்யும் உரிமையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. மத்திய அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை ஒதுக்குவதோடு, வரிவிதித்தல் , கடன்பெறுதல் ஆகிய அதிகாரங்களும் பிரதேசசபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

ஆனால் பின்னர் நடந்ததுதான் என்ன? இனவெறிச் சக்திகளால் ஒரு சில நாள்களில் தமிழருக்கெதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அந்தக்கலவரம் சம்பந்தமான நூல் ஒன்றை எழுதியவராகிய அன்றைய ஆங்கில ஊடகத்துறை ஜாம்பவான், ராசி வித்தாச்சி "அது மனிதனால் மனிதனுக்கு இழைக்கப்பட்ட மனித ஈனம்" என்று கூறி வைத்தார். கலவரம் தீவிரமடைந்த நிலையில் சில புத்திஜீவிகள் சென்று அவசரகால நிலையை அறிவிக்குமாறு விடுத்த வேண்டுகோளைப் பண்டாரநாயக்கா நிராகரித்து விட்டார். மாறாக, நாட்டு மக்களுக்கு அன்று வானொலி மூலம உரையாற்றினார். அந்த உரையானது எரியும் நெருப்பில் எண்ணெய்



ஊற்றியது போன்று இருந்தது. 'blowing raw oxygen into a raging fire' என்று வித்தாச்சி அதனைப் பதிவு செய்திருந்தார். அதாவது, இனக்கலவரமானது 1958ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி வெடித்ததாயினும், நுவரெலிய ாவின் முன்னாள் மேயர் டீ.ஏ செனவிரத்ன உள்ளிட்ட சிலர் மட்டக்களப்பில் 1958 மே மாதம் 25ஆம் திகதி கொலை செய்யப்பட்டதன் காரணமாகவே இனக்கலவரம் வெடித்தது என்று மறுநாள் 26ஆம் திகதி ஆற்றிய அந்த உரையில் பண்டாரநாயக்கா குறிப்பிட்டிருந்தார். ஆனால் செனவிரத்ன கொலை செய்யப்பட்டதற்கு தனிப்பட்ட பகையே காரணம் என்று செல்வநாயகம் 1958 ஜூன் 4ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி யிருந்தார். அது எவரொருவராலும் மறுத்துரைக்கப்பட வில்லை.

**டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம்**

இரண்டாவதாக, 1965ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி தலைமை அமைச்சர் டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழ் அரசுக்கட்சித் தலைவர் செலவநாயகத்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் வாயிலாக மேற்குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் காட்டிலும் குறைந்த பட்ச உள்ளடக்கத்தையே கொணடிருந்த போதிலும், அதற்கெதிராகவும் தென்னிலங்கையில் குறிப்பாக சிங்கள பௌத்த வட்டாரங்களிலிருந்து பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பின. எனவே, உடனடியாகவே டட்லி சேனநாயக்கா ஒப்பந்தத்தை தூக்கி எறிவதற்கு நெடுநேரம் எடுக்கவில்லை.

ஒப்பந்தத்தில் கீழ்க்காணும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

1. வடக்கு கிழக்குமாகாணங்களில் தமிழ்மொழியில் நிர்வாகம் நடத்தப்படும்
2. வடக்குகிழக்கில் நீதிவிசாரணைகளும் பதிவுகளும் தமிழ் மொழியில் செய்யப்படும்.
3. மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டு அவற்றுக்குப் பாரதீனப்படுத்த வேண்டிய விடயங்களும் அதிகார எல்லைகளும் பரஸ்பரம் பேசித்தீர்க்கப்படும்.
4. அதே நேரத்தில் நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு மத்திய அரசினால் சிற்சில உத்தரவுகள் மாவட்ட சபைகளுக்கு விடுக்கப்படும், மேலும் வடக்குக்கிழக்கில் குடியேற்றத்திட்டங்களின் கீழ் காணிகள் பகிரப்படும் விடயத்தைப்பொறுத்த வரை முதலாவதாக, அந்தந்த மாவட்டங்களில் காணி அற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரண்டாவதாக, வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படும். மூன்றாவதாக நாட்டிலுள்ள ஏனைய மக்களுக்கு வழங்கப்படும். அந்த வகையிலும், வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்பிரஜைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆக, மேற்படி ஒப்பந்தங்களில் ஒன்றையாவது நடைமுறைப்படுத்துவதற்கு அவ்வேளைய அரசு நடவடிக்கை எடுத்திருந்தால், 26 வருட காலப் போரொன்று நிச்சயமாக தவிர்க்கப்படக் கூடியதாக இருந்திருக்கும். உண்மையில் தமிழர் ஆயுதப் போராட்டமானது, ஒரு இறுதித்தெரிவாகவே மேலெழுந்ததுதான் யதார்த்தம் என்பதை எவரும் மறுத்திட முடியாது. 1983 (கறுப்பு ஜூலை) படுமோசமான இனக்கலவரமே அதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு**

மறைந்த முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி சில்வா தலைமையிலான இந்த ஆணைக்குழு 2010ஆம் ஆண்டு அன்றைய அரச தலைவர் மகிந்தவினால் நியமிக்கப்பட்டது. ஒரு வருட காலமாக விசாரணைகள் நடத்திவந்த இந்த ஆணைக்குழு, நாடு சுதந்திர மடைந்த காலம் முதல் பதவிவகித்து வந்த எந்தவொரு அரசாங்கமும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள, நிலையான அரசியல் தீர்வு காணத்தவறியதாலேயே, காலத்துக்குக் காலம் குருதி சிந்தும் கலவரங்களும், இறுதியில் முழு அளவிலான போரும் வடக்கு கிழக்கில் நடைபெற நேர்ந்ததாகத் தனது அறிக்கையில் குறிப் பிட்டிருந்தது. அத்தோடு, மேலும் காலந்தாழ்த்தாது தமிழர் பிரச்சினைக்கு ஒரு இறுதியான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இற்றைவரை அது கிடப்பிலேயே போடப்பட்டிருக்கிறது. உண்மையில் ,ஆணைக்குழுவினால் ஒருவருடகாலத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால அறிக்கை தானும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஆணைக்குழு அதிருப்தி தெரிவித்திருந்தது.

**சில ஆய்வாளர்கள் முன்வைத்துவரும் மேலோட்டமான ஆய்வுகள்.**


பல்வேறு அரசியல் ஆய்வாளர்கள், நுனிப்புல் மேயும் பாணியில் ஆய்வுகள் செய்வதோடு, போர் ஆரம்பமாவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தான் அடிப்படைக்காரணம் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றார்கள். இவ்வாறு மக்கள் தவறாக வழிநடத்தப்படுவது கண்டனத்துக்கு உரியதாகும். மூன்றுதசாப்த காலமாக தமிழ்த் தலைமைகள் நடத்திய போராட்டங்கள் விழலுக்கிறைத்த நீராகிப் போனதன் காரணமாகவே, தமிழ் இளைஞர்கள் பொறுமையிழந்து களத்திலிறங்கி, பின்பு ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்பட்டனர் என்பது மேற்குறித் ஆய்வாளர்களால் மூடி மறைக்கப்படும் விடயமாகவே உள்ளது.

மேலும், புலம் பெயர் தமிழர்கள் இலங்கைக்கு களங்கம் கற்பிக்கின்றனர் என்று குற்றம் சுமத்துபவர்களும் உள்ளனர். காலங்காலமாக அரங்கேற்றப்பட்டு வந்த இனங்கலவரங்கள் எல்லாவற்றுக்கும் உச்சக்கட்டமாக 1983 ஆம் ஆண்டில் போர் ஆரம்பித்த காலத்திலும் உயிர் பாதுகாப்புக் கருதி பெருவாரியான தமிழ் மக்கள் நாட்டை விட்டு ஓடினர் என்பதை முற்றிலும் மறந்து விட்டவர்கள் அல்லது மறந்தது போல் பாசாங்கு பண்ணுபவர்கள் தான் அவர்கள்,

மற்றும், பெருந்தொகையான பொது மக்களும் ஆயுதப்படையினரும் உள்நாட்டுப் போரில் மாண்டனர். மேலும், போர் தொடர்பான செலவீனம் கொஞ்ச நஞ்சமல்ல, அது ஏறக்குறைய 200 பில்லியன் அமெரிக்க டொலர் தொகை ஆகும் என்று இலங்கைகான முன்னாள் இந்தியத் தூதுவர் சிவ் சங்கர் மேனன் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்தது.

எனவே, நல்லறிவும் நற்சிந்தனையும் கொண்ட எந்தவொரு பிரசையாவது, முழு நாட்டுக்குமே கடும் அழிவுகளுக்கு வழிசமைத்த தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல்தீர்வுத்திட்டம் அரசியல்யாப்பில் உள்ளடக்கப்படுவதற்கு தடைக்கல்லாக இருக்கக் கூடாது. 2015 ஜனவரியிலும் ஒகஸ்டிலும் நடத்தப்பட்ட அரச தலைவர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின்போது இன்றைய தேசிய ஒற்றுமை நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள இரு பெரிய கட்சிகளாலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை எவராலும் சரி மூடி மறைத்துவிட முடியாது.

இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராயினும், அவர்கள் இந்த நாட்டு மக்களோடு மக்களாகவுள்ளன இறைமையுள்ள பிரசைகள் என்ற யதார்த்தத்தை பௌத்த பீடங்களோ,வேறுஎந்தத்தரப்பினரோ மறந்து விடக்கூடாது, அத்தோடு, அவர்கள் பாரதீனப்படுத்த முடியாத தமது அதிகாரப்பகிர்வு உரிமையை வேண்டி நிற்கின்றனரே தவிர, வேறு ஏதாவது சலுகைகளுக்கோ அல்லது நன்கொடைகளுக்கோ கையேந்தி நிற்கவில்லை என்பது எல்லோராலும் நிதானமாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.




## மனிதம் தற்போதும் வாழ்கிறது

கலிமுற்றிவிட்டது; எங்கும் தீமையே தாண்டவமாடுகிறது; நல்லதுக்குக் காலம் இல்லை, என்றெல்லாம்நாம் அடிக்கடி சலித்துக்கொள்கிறோம். ஆனால் உண்மை நிலை என்ன? மானிடம் இன்னும் வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. நாம் சிந்தித்து முன்னெச்சரிக்கையுடன் நடந்து சமூகத்தை வழிநடத்துவோமாகில், இழந்து போனதாகச் சொல்லப்படும் தர்மநிலையை விரைவில் மீட்டுவிடலாம். உயர் பண்புகளைக் கொண்ட சமுதாயம் மீண்டும் தோன்றிட வழிகிட்டும்.

இப்படி நான் எழுதுவதற்கு ஒரு வலுவான காரணம் உண்டு. கொடிகாமம்- யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை மூலம் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணித்த எனது பயணப்பையை பஸ்ஸினுள் விட்டுவிட்டு யாழ்.பஸ் நிலையத்தில் இறங்கிவிட்டேன். அதனை மீண்டும் என்னால் பெற முடியுமா? என நான் தவித்து நின்ற போது, அது சம்பந்தமான சங்கத்தின் அங்கத்தவர்கள் என்னைத் தேற்றி சில நிமிடத் துளிகளுக்கு உள்ளாகவே நான் தவறவிட்ட எனது பயணப்பையைப் பெற்றுத் தந்தார்கள். நான் எதிர்பார்ப்பது இவ்வாறு நம்மவர்கள் அனைவரும் நடந்துகொள்ள வேண்டும் என்பது தான். அப்போதுதான் எமக்கான விடிவு காலம் நிச்சயம் கிட்டும்.

சி.ஜெயகணேசன், சாவகச்சேரி.

## ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க இயலாதா?

1989ஆம் ஆண்டுக்கு முன்னதாக இலாபகரமாக இயங்கி வந்த மேற்படி ஓட்டுத் தொழிற்சாலை, பின்னர் அறவே செயழிந்த நிலையில் தவம் கிடப்பதாக அறியக்கிடக்கிறது. சுமார் இருநூறு குடும்பங்கள் இந்தத் தொழிற்சாலையை நம்பி வாழ்ந்து வந்திருக்கின்றன. தற்போது தொழிற்சாலை இயங்காத நிலையில் இவர்களெல்லாம் மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. சம்பந்தப்பட்டவர்களின் ஜீவனோபாயம் தொடர்பாக உரியவர்கள் கரிசனைஎடுப்பார்களாயின்,அவர்களை இந்த மண் வாழ்த்தியே தீரும். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை போன்று ஒட்டுசுட்டானும் சமாதி நிலையில் செயலிழந்து விடாமல் பொறுப்பானர்கள் செயற்பட்டேயாக வேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 11.08.2016 சிவபதமடைந்த எமது குடும்ப
ஒளிவிளக்கு

## அமரர் சபாரத்தினம் தர்மரத்தினம்

(ஓய்வுநிலை சிரேஸ்ர சாலைப் பரிசோதகர் இ.போ.ச)

அவர்களின் ஓராண்டு நினைவு நாள்
இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்துயரம்
எம் அருமை பப்பாவே !
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இன்றில்லை - ஆனால்
நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள் !
கனிவான புன்னகையுடன் இனிய முகம்
காணத்துடிக்கின்றோம்



அன்பின் திருவுருவாய் ! புதுவீட்டின் தலைமகனாய்
ஆலடிப்பிள்ளையாரின் சீரிய தலைவனாய்
மனோகராவின் உயர் தலைவனாய்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் எம் நெஞ்சில்
என்றென்றும் பசுமையாய் நிலைத்திருக்கும்

நீங்கள் ஆலடிப்பாலகணபதி மீது கொண்ட அளவற்ற பற்றினாலும்
ஆலடிப்பாலகணபதி உங்கள் மீது கொண்ட மோகத்தினாலும்
ஆலடிப்பிள்ளையாரின் நிரந்தர தலைவனாகவே
அவனைக்காணச் சென்றீர்களோ?
பாலகணபதியின் பேரவா அதுவே என்றெண்ணி
மனம் தேறுகின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நீங்கா நினைவுடன்

மண்ணுலகில்
13.08.1949

விண்ணுலகில்
11.08.2016

மனைவி - த.கலாவதி
பிள்ளைகள் - வி.செந்தூரன், வி.குமரன், வி.துவாரகன்
கலோகேந்திரா, அல்வாய்.

# நெஞ்சைவிட்டகலா 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் தவராசா சுகந்தன்

(முன்னாள் காசாளர் - நகராட்சிமன்றம் - வல்வெட்டித்துறை)



மாதங்களோ பன்னிரண்டு
உம்மைப்பிரிந்து வருடங்களும் பன்னிரண்டு
பூமியின் சுழற்சி பன்மடங்கானதோ
தெரியவில்லை எமக்குத்தான்
பச்சிளம் பாலகனை, பாசமிகு மனைவியை
விட்டுச் செல்ல எப்படி முடிந்தது
இயலவில்லை இப்பிரிவின் வேதனையை
எள்ளளவும் குறைத்துக் கொள்ள
இன்னார்க்கு இன்னார் என்று இறைவன்
எழுதியதை மாற்றிட முடியவில்லை
இன்றோ நாளையோ எப்பொழுதோ
விரைந்து வந்துவிடும் எவர் முடிவும்
இது தவிர்க்க முடியாத வாழ்வின் கட்டாய நியதிதான்
வாழும் [illegible]மைவரை வாழ்ந்திருப்போம் -உம்
நினைவ[illegible]

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணுலகில்
28.05.1978

விண்ணுலகில்
13.08.2005

திதி:- ஸப்தமி

மனைவி, மகள்,
அண்ணா - சுதன்
குடும்பத்தினர்.
திருநெல்வேலி.




இல்லம் அல்லது வியாபார நிலையத்துக்கு சூரிய மின்கல கட்டமைப்பை நிறுவிக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்களாயின், நீங்கள் தெரிவு செய்ய வேண்டியது, வலுச்சக்தி முகாமைத்துவத்தில் அதிகளவு அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ள நிறுவனமொன்றையாகும். அது போன்று, உலகின் முதல் தர வலுச்சக்தி கட்டமைப்பு உபகரணங்களை மட்டும் பயன்படுத்தும் 32 வருட கால செயற்பாட்டையும் உத்தரவாதத்தையும் வெளிப்படுத்திய நிறுவனம்.

240, Rajagiriya Road, Rajagiriya. 076 691 3884
sales@clarionenergy.lk www.clarionenergy.lk

சூரிய மின்சக்தி கிளைகள்

| | |
|---|---|
| குருநாகல் | - 076 691 3885 |
| இரத்தினபுரி | - 077 238 4564 |
| ஹிங்குரக்கொடை | - 077 742 7413 |
| யாழ்ப்பாணம் | - 077 238 4541 |
| அம்பாந்தோட்டை | - 077 774 1539 |

உடனடி அழைப்புகளுக்கு
**0766 913 884**





மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்.

# 'மஞ்சள் எச்சரிக்கை'

## பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய தோல் மஞ்சள் நிறமடைதல் அச்சறுக்கை

பிறந்த குழந்தைகள் பொதுவாக இளஞ்சிவப்பு நிறமுடையவர்களாக இருப்பர். ஆனாலும் சில காரணங்களால் அவர்களின் தோல் சாதாரண இளஞ்சிவப்பு நிறத்தை விடவும் வேறு நிறங்களாக மாற்றமடையலாம்.

01. அதிகளவு மெலனின் (Melanin) எனப்படும் நிறப்பொருள் தோலில் இயற்கையாகவே காணப்படின் (உதாரணம்- ஆபிரிக்க குழந்தைகள்) அவர்கள் கடும் நிறம் (Drak Complexion) உடையவர்களாகக் காணப்படுவர்.
02. தோலில் பிளிறூபின் (Bilirubin) எனப்படும் மஞ்சள் பதார்த்தம் படியுமானால் தோல் மஞ்சள் நிறமாக மாற்றமுறும்.
03. குருதியில் ஈமோகுளோபின் (Haemoglobin) எனப்படும் சிவப்பு நிறத்துக்கான காரணி குறைவடைந்தால் தோல் வெளிறிக் காணப்படும். இதை நாம் குருதிச்சோகை (Anaemia) எனக் கூறுவோம்.
04. அதேபோன்று குருதியில் ஈமோகுளோபினால் கொண்டுசெல்லப்படும் ஒட்சிசனின் அளவு குறைவடைந்தால் தோல், வாய், உதடு என்பன நீல நிறமடைந்து (Cyanosis) காணப்படும்.
05. சிலசந்தர்ப்பங்களில் குருதியிலுள்ள செங்குருதிக் கலங்களின் (Red Blood Cells) எண்ணிக்கை சாதாரண அளவைவிடவும் அதிகரிப்பின் தோல் கடுஞ்சிவப்பு (Plethoric) நிறமாக மாற்றமடையலாம்.

மேற்கூறிய ஐந்து நிலைகளினுள்ளும் இறுதி நான்கு நிலைகளும் பச்சிளம்குழந்தைகளுக்குஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை. எனவே இந்த மாற்றங்களைப் பெற்றோர் அவதானிப்பின்உடனடியாக குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

**மஞ்சள் எச்சரிக்கை**

சிவப்பு நிறம் ஆபத்தைக் குறிக்கும் என்பது யாவரும் அறிந்துகொண்டுள்ள (Red Alert) ஒன்று. அதே போல் பிறந்த குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தோல் மஞ்சள் நிறமாவதும் (Yellow Alert) ஆபத்தானதே. மஞ்சள் நிறத்துக்கான பிளிறூபின் (Bilirubin) எனப்படும் பதார்த்தம் குருதியில் அளவுக்கதிகமாகச் சேர்ந்தால் அவை தோல், கண், மூளை மற்றும் உடல் உறுப்புகளில் படிந்துகொள்கின்றன. முக்கியமாக மூளையில் பிளிறூபின் படியுமானால் கேனிக்ரறஸ் (Kernicterus) எனும் நிலை உருவாகி குழந்தைகளின் மூளை பாதிப்படையலாம். இந்த சந்தர்ப்பங்களின் போது குழந்தைகள் சாந்தமடையாது உரத்த சத்ததத்துடன் அழுது கொண்டேயிருப்பர். அதுமட்டுமல்லாது சில சமயங்களில் வலிப்பு ஏற்படுவதோடு தலையையும், முதுகையும் பின்புறமாக வளைத்த நிலையில் (Opisthotonus) குழந்தைகள் காணப்படலாம். தோல் மஞ்சள் நிறமாதலை முற்கூட்டியே கண்டறிந்துகொண்டால் நிச்சயமாக இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.




பொதுவாக பிறந்த குழந்தைகளில் ஏற்படும் தோல் மஞ்சள் நிறமடைதல் (Neonatal Jaundice) நிலையையும், அது ஏற்படும் காலத்தையும் பொறுத்து மூன்றாக வகைப்படுத்தலாம்.

**01. குழந்தை பிறந்து 24 மணி நேரத்துக்குள் தோல் மஞ்சள் நிறமடைதல்**

இந்த நிலை எப்போதும் ஆபத்தானது. குழந்தை பிறந்து 24 மணி நேரத்துக்கு மஞ்சள் நிறமாக காணப்படின் உடனடியான சிகிச்சை தேவை.

**02. பிறந்த 24 மணிநேரம் தொடக்கம் 14 நாள்கள் வரை**

இந்தக் காலப்பகுதியில் சாதாரணமாக அனைத்துக் குழந்தை களுமே சிறிதளவு மஞ்சள் நிறமடைவார்கள். இது சாதாரணமானது (Physiolgical Jaundice). பிறந்த குழந்தைகளில் அதிகளவில் காணப்படும் செங்குருதிக் கலங்களில் சில அழிவடைந்து போவதே இதற்கு காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலை அதிகளவில் ஏற்படின் அல்லது வேறு பலகாரணங்களால் தோல் மஞ்சள் நிறமடைதல் அதிகரிப்பின் அதற்கான உடனடிச் சிகிச்சை தேவைப்படும்.

**03. குழந்தை பிறந்த 14 நாள்களின் பின்னரும் தோல்மஞ்சள்நிறமடைந்து காணப்படல்**

இப்படியான சந்தர்ப்பங்களின் போதும் அதற்கான காரண காரியங்களை கண்டறிந்துகொண்டு தகுந்த சிகிச்சைகளை வழங்க வேண்டும்.

> தோல் மஞ்சள் நிறமடைதல் என்பதும் ஆபத்தின் அறிகுறியே. இந்த நிலை காணப்படின் உடனடியாக மருத்துவமனைக்கு குழந்தையைக் கொண்டு சென்று அதற்கான சோதனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தோல்மஞ்சள்நிறமடைவதற்கான காரணங்கள்**

அடிப்படையில் இரு காரணங்கள் கொண்டு பிளிறூபின் எனப்படும் பதார்த்தம் குருதியில் அதிகரிக்கலாம்.

01. அதிகளவில் பிளிறூபின் உருவாக்கப்படல்

குருதியிலுள்ள செங்குருதிக் கலங்கள் அதிகளவில் உடைந்து அதிலுள்ள ஈமோகுளோபின் (Haemaglibin) பிளிறூபினாக மாற்றமடையும். இதற்கான மிகப் பொதுவான காரணமாகக் காணப்படுவது தாயின் குருதி வகையும், குழந்தையின் குருதி வகையும் ஒத்துவராத நிலையே. உதாரணமாக RH வகை குருதி வகைப்படுத்தலில் தாய் சய (-) வர்க்கமாகவும், குழந்தை சக (+) வர்க்கமாகவும் காணப்படின் அல்லது A, B, O குருதி வகைப்படுத்தலில் தாய் O வர்க்கமாகவும், குழந்தை A அல்லது B வர்ககமாகவும் காணப்பட்டால் குருதி ஒற்றுமை ஏற்படாது. குழந்தையில் அதிகளவான செங்குருதிக் கலங்கள் அழிவடைந்து போவதற்கான வாய்ப்புகள் உண்டு.

02. பிளிறூபின் (Bilirubin) பதார்த்தம் உடலிலிருந்து வெளியேற முடியாத சந்தர்ப்பங்கள்

உடலில் உருவாகும் பிளிறூபின் பாதார்த்தம் ஈரலில் மாற்றமடைந்து பித்தமாக குடலினூடாக மலத்துடன் வெளியேறும். எனவே ஈரல் கலங்களிலோ அல்லது பித்தக்குழாய்களிலோ பிரச்சினைகள் இருப்பின் பிளிறூபின் வெளியேற்றப்படாது உடலில் தங்கியிருக்க வாய்ப்புகள் ஏற்படும். குழந்தை பிறந்து 14 நாள்களின் பின்னரும் தோல் மஞ்சள் நிறமாகவும், மலம் மஞ்சள் நிறங்குறைந்து வெள்ளையாகவும் காணப்படின் இந்த நிலைக்கான பரிசோதனைகள் செய்யப்படும். தகுந்த சிகிச்சைகள் அளிக்கப்படும். மேலே குறிப்பிட்ட அடிப்படைக் காரணங்களை விட உடலிலுள்ள தைரொக்சின் எனும் ஓமோன் குறைபாட்டினாலும், குழந்தைக்கு கிருமித்தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் தோல் மஞ்சள் நிறமாதல் ஏற்படும்.

**சிகிச்சை முறைகள்**

1. பொதுவாக குருதியிலுள்ள பிளிறூபின் அளவைச் சோதித்து சிகிச்சை தேவைப்படின் நீலநிற ஒளியின் கீழ் குழந்தையை வளர்த்தி உடலிலுள்ள பிளிறூபின் பாதார்த்தத்தை குறைக்க முடியும். இதை ஒளிச்சிகிச்சை என்பார்கள்.
2. சில வேளைகளில் பிளிறூபினின் அளவு மிக அதிகமாயின் குழந்தையினுடைய குருதியை புதிதாக பெறப்பட்ட வேறு ஒருவரின் குருதியினால் மாற்றீடு செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். இந்தச் சிகிச்சை முறையை மிக அவதானத்துடன் அதற்கான வசதியுள்ள மருத்துவமனைகளில் மேற்கொள்ள முடியும்.

ஆக, தோல் மஞ்சள் நிறமடைதல் என்பதும் ஆபத்தின் அறிகுறியே. இந்த நிலை காணப்படின் உடனடியாக மருத்துவமனைக்கு குழந்தையைக் கொண்டுசென்று அதற்கான சோதனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் தோல் மஞ்சள் நிறமாக மாறுவதற்கான காரணிகளுக்கு சிகிச்சை உண்டு. உரிய வேளையில் தாமதமின்றி சிகிச்சையளிப்பின் குழந்தைகளின் மூளையைப் பாதிக்கக் கூடிய ஆபத்துக்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க முடியும். இந்த நிலையை மஞ்சள் எச்சரிக்கை என அழைத்து எம்மை நாம் அச்சறுக்கைப்படுத்திக்கொள்ளலாம்.

குழந்தை வைத்திய நிபுணர்,
குழந்தைகள் பராமரிப்பு பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.



30.07.2017
சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்



# நாட்டு நலனுக்காக நாட்டினர் தனிப்பட்ட நலனுக்காக தறிக்கின்றனர்

நடராசா லோகதயாளன்

இயற்கை அழகு நிறைந்தது...
அதன்எழில்காடுகளில் பளிச்சிடுகிறது...

இரண்டுபக்கங்களும்மரங்கள்நிறைந்த வீதியூடாக, பார்வையால் அந்தப் பசுமையைப் பருகிச் செல்லும்போது கிடைக்கும் இன்பத்துக்கு நிகர் ஏது...?

இயற்கைக் காடுகளுக்குப் போட்டியாக விடுதலைப் புலி கள் அமைப்பினால், அதன் பல்வேறுபட்ட பிரிவுகளால் நடப்பட்ட தேக்கம் காடுகளின் வளர்ச்சியைப் பார்க்கும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

சீராகத்துப்புரவு செய்யப்பட்டதரையில் அணிவகுத்துநிற்கு மாறுகன்றுகள்நடப்பட்டு, ஒழுங்கானபராமரிப்பில்வளர்த்து, சீரானகிளைகளுடன்கிட்டத்தட்டஒரேமாதிரியாகஅவைவியாபித்திருப்பது எப்படியான அழகு...!

புலிகளால்உருவாக்கப்பட்டஅப்படிப்பட்ட, அதிஅற்புதமான, சௌந்தர்யம்மிக்கதேக்கம்காடுகளுக்குத்தான்இப்போது ஆபத்து வந்துள்ளது என்றால் இதை விடச் சோகமான வியடமாக எதைக் கருத முடியும்...?

படங்கள்: கணேசதாசன்





## முல்லை மாவட்ட தேக்கங்காடுகளின் அவலநிலை

சூரியகாந்தி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




## தமது காவலர்கள் இல்லாமல் தவிக்கின்றன காடுகள்

வட மாகாணத்தில் அதிக வனப்பகுதியைக்கொண்ட மாவட்டமாக விளங்குவது முல்லைத்தீவு ஆகும். அதே போன்று ஏனைய வவுனியா , மன்னார், கிளிநொச்சியும் குறிப்பிட்டளவு வனப் பகுதியைக் கொண்டுள்ளன. குடாநாட்டில் வனப்பகுதி இல்லாதபோதும் இயற்கையாக உள்ள மரங்களாலும் பனை மரத்தின் மூலமும் ஓரளவு இயற்கைச் சமநிலை பேணப்படுகின்றது. முல்லைத்தீவில் இயற்கையாகவே காடுகள் அமைந்திருந்தாலும் அவை அழிக்கப்படாமல் நிலைத்த தற்குக் காரணம் புலிகள் அவைற்றைப் பலமாகப் பாதுகாத்ததே. அவற்றுக்கு அடைக்கலம்கொடுத்துப்பாதுகாத்தபெருமையும்பலவிடங்களில் மரங்களை நாட்டி உருவாக்கிய பெருந்தன்மையும் அவர்களையேசாரும். ஆனால்இப்போதுபுலிகள்இல்லாத நிலையில் அநாதரவாகிவிட்ட அவற்றை ஆளுக்காள் கங்கணங்கட்டிக்கொண்டுஅழிப்பதற்குமுன்டியடிக்கத்தொடங்கிவிட்டனர்.

முல்லைத்தீவிலே அபிவிருத்தி. மீள்குடியேற்றம் எனும் போர்வையால் எழில்மிகு இயற்கை வனங்கள் அளவு கணக்கின்றி அழிக்கப்படுகின்றன. இந்த நிலமை போர் நீடித்தகாலத்தில்கூடநிகழவில்லை. அத்துடன்மாவட்டஅரச நிர்வாகம் இந்த விடயத்தில் உறக்கத்தில் இருப்பதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

முல்லைத்தீவில் காலத்துக்குக் காலம் போர் காரணமாக அழிவடைந்தவை தவிர அதிகளவான இயற்கை வளங்கள் புலிகளால்பேணிப்பாதுகாக்கப்பட்டன. குறிப்பாக1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவத்தினரின் உலங்குவானூர்த்தித் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்கான பதுங்கு குழிகள் அமைக்க ஆரம்பித்தவேளையில் மரம் தறிப்பு ஆரம்பமானது. பின்னர் 1987, 1990களில் தாக்குதல்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் வேகம் பெற்றிருந்தன. 1993 காலப்பகுதில் இரண்டும் உச்சம் பெற்று யாழ். குடாநாட்டின்சகலவீடுகளிலும்ஒருபதுங்குகுழியும்தோன்றிவிட்டது. இப்படியாகவேதொடர்ந்தும்போர்ஏராளம்மரங்களைப்பலி எடுத்தது.

வடக்குக் கிழக்கின் அதிக நிலங்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துக்குள்ளேயே இருந்தன. மரங்கள் தறிக்கப்படுவது எதிர்கால சந்ததிக்கு ஆபத்தாக முடியும் என்பதைப் புலிகள் உணர்ந்திருந்தனர். போரில் புலிகள் காட்டிய அதே அக்கறையை இயற்கையிலும் காட்டினர். இதற்காக விடுதலைப் புலிகளின் இரண்டு முக்கிய பிரவுகளான தமிழீழ மொருண்மியமேம்பாட்டுநிறுவனம், வனவளப்பாதுகாப்புப் பிரிவு என்பன இயற்கை காக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகப்புலிகளின்அரசியல்துறையால்பணிக்கப்பட்டன.

## காடுகளைக் காப்பதில் மூச்சாயிருந்தனர் புலிகள்

களமுனை முன்னணிக் காப்பரன்கள் ஆகட்டும் பிற பணிகளாகட்டும் இந்த இரண்டு பிரிவுகளின் அனுமதி இன்றி அதாவது இயற்கை மரங்களைத் தறிப்பதாயின்; வனவளப் பாதுகாப்புபிரிவினரிடமும்பயன்தருமரங்களைத்தறிப்பதாயின் பொருண்மியத்தினரிடமும் அனுமதி பெறாமல் புலி உறுப்பினர்களால் கூட மரங்களை வெட்டமுடியாதவாறு இறுக்கமான நடைமுறை கொண்டுவரப்பட்டது. இதற்கு உதாரணமாக 1995ஆம் ஆண்டுவலி. வடக்கில் இருந்து படையினர் முன்னேறிக் கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவம்ஒன்றைக்குறிப்பிடலாம். அப்போதுகுடாநாட்டில்புலிகள் இயக்கத்தின் களமுனைத் தளபதியாகச் சொர்ணம் செயற்பட்டார். உடனடியாகக் காப்பரன்கள் , பதுங்கு குழிகள் அமைக்கவேண்டியதேவைஅவருக்குஏற்பட்டது. அதற்காக மூவாயிரம்பனைமரங்கள்தறிப்பதற்காகப்புலிகளின்தலைவரிடம் அனுமதி கோரினார்.

புலிகளின்தலைவர்போராளிகளின்உயிரில்கொண்டிருந்த அக்கறை போன்றே இயற்கையிலும் அக்கறை கொண்டவராக இருந்தார். அவர் அன்று சொர்ணத்தை அழைத்து எழுத்துமூலம்ஒருஆணையைவழங்கினார். காப்பரன்கள் அமைத்துஇராணுவத்தைத்தடுக்கவேண்டும். அதேநேரம் இயற்கை வளம் அளவுக்கு மிஞ்சி அழிக்கப்படக் கூடாது. என்றமைந்ததுஅந்தஆணை. அத்துடன்ஆயிரம்பனைகள் மாத்திரம்தறிப்பதற்கேஅனுமதிவழங்கப்பட்டது. அளவெட்டி முதல்வடமராட்சிவரையானகாப்பரன்களுக்காகவழங்கப்பட்ட அந்த அனுமதியின்படி சரியான எண்ணிக்கையில் தான் பனைகள் வெட்டப்படுகின்றனவா? என்பதைப் பொருண்மியத்தைச் சேர்ந்த ஒரு போராளி கவனிப்பார் என்று அந்த அனுமதியுடன் கூடவே கண்கானிப்பையும் விதித்திருந்தார் புலிகளின் தலைவர்.

## காடழிப்பவர்கள் எவராயினும் உரிய தண்டனை

இயற்கை அழிப்பு விடயத்தில் புலிகளால் மக்களுக்கும் விதிமுறைகள் விதிக்கப்பட்டன. பொது இடத்திலுள்ள மரம் மட்டுமல்லதங்கள்வீடுகளில்இருக்கும்எந்தமரத்தைத்தறிப்பதாக இருப்பினும் அனுமதி பெற்றே தறிக்க வேண்டும். அதனை மீறுபவர்களுக்கு மாத்திரமின்றி புலிகளுடன் வாழ்ந்த அனைவருக்குமே புலிகளின் தண்டனை எப்படி இருக்கும் என்பது தெரிந்த விடயமே. ஒரு மரத்தை வெட்டியதாக ஒருவர்இனம்கானப்பட்டால், 10மரங்களுக்குமேலாகவீதிகளில் நட்டு, அவை ஓரளவுக்கு வளரும் வரை பாதுகாத்துப் பராமரிக்கவேண்டியமுழுப்பொறுப்பும்அவருக்குரியதாகிவிடும். இதனால் மக்கள் மரத்தை அல்ல மரக் கிளைகளைக்கூட வெட்டுவதற்கு யோசனை கொண்டனர்.

ஒருதடவைவன்னிக்காட்டுப்பகுதியிலேஇயக்கத்தேவைக்காகச்சிலஉறுப்பினர்கள்இணைந்துஅனுமதியின்றிசுமார் 15 மரங்களைத் தறித்தனர். அவற்றை ஏற்றிச் செல்வதற்கிடையில்தலைமைக்குப்பறந்ததுசெய்தி. அவர்கள்சுமார்ஓர் ஆண்டுகாலம்வரைக்கும்ஒட்டுசுட்டான்முதல்கரிப்பட்டமுறிப்பு வரையான காட்டுப்பகுதியில் மரங்களை நட்டு நீர் ஊற்றும் நற்காரியத்திலீடுபட்டே தமது தண்டனைக் காலத்தைப் போக்கினர்.

## இராணுவத்திடம் சிக்கியதில் தொடங்கியது சீரழிவு

இவ்வாறாகப்புலிகள்இயற்கையைப்பாதுகாத்தநிலையில் 'ஜெயசிக்குறு'வின் மூலம் வன்னியின் பல பகுதிகளையும் கைப்பற்றியஇராணுவம், புலிகளின்கிளைமோர்த்தாக்குதலில் இருந்து தப்புவதற்காகச் சகல பிரதான வீதிகளின் இருமருங்கிலும் சுமார் 50மீற்றர்கள் தூரம் வரை நின்றிருந்த மரங்களை டோசர்கள் மூலம் அகற்றியது.

அதற்குப்பின்னரும்முன்னணிக்காவலரண்கள், காப்பரன்களுக்கென வகை தொகையற்று மரங்களை அழித்து ஒருவாறு போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. கோடிக்கணக்கானபணத்தைச் செலவு செய்து புலிகள் பராமரித்த மரங்களைப் படையினர்வகைதொகையற்றுஅழிக்கஆரம்பித்தனர். அவர்களால் வெட்டப்படும் பெறுமதி மிக்க மரங்கள் தென்னிலங்கைக்குக் கடத்தப்பட்டுப் பணம் சம்பாதிக்கப்பட்டது. அவற்றைத் தறித்துப் பணம்ஈட்டுபவர்களும்வலம்வரத்தொடங்கினர்.



## கடத்தல்காரர்களும் விட்டுவைக்கவில்லை

படையினரின் ஆசிர்வாதத்துடன் சில கடத்தல்காரர்களும்மரங்களைத்தென்னிலங்கைக்குக் கடத்தினர். அந்தக் காலப்பகுதியில்அங்குள்ளநிர்வாகங்கள் இராணுவமயமாக இருந்தமையால் யாரும் வாய் திறக்கவில்லை.

பின்னர்நல்லாட்சிஎன்றுசொல்லப்படும் காலத்தில் கிடைத்த வரப்பிரசாதமான வாய் திறந்து கேள்வி கேட்கும் சுதந்திரத்தையாவது பயன்படுத்த எண்ணும் மக்களுக்கு அரச அதிகாரிகள் மழுப்பலானவிடைகளையே அளித்துவருகின்றனர். விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இரணைமடு, கரிப்பட்டமுறிப்புமுதல்ஒட்டுசுட்டான், கூழாமுறிப்பு, தேராவில்எனப்பலநூறுஏக்கர்நிலத்தில் காட்டுத் தேக்கு மற்றும் விக்ஸ் மரங்கள் நாட்டப்பட்டுப்பராமரிக்கப்படன. செழிப்பானபிரதேசங்களாகின. அப்பகுதிக்குள் இலகுவில் சென்றுவரும் வகையில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டன.

அழகாகக்காட்சிதரும்அவையேமரவிற்பனையாளர்களின் கண்களை உறுத்தின. வெளி மாவட்டங்களில் இயற்கைகளை அழித்து, பசுமை குறைந்த நிலையில், காய்ந்து கிடக்கும் தேசத்தில் இதுவரைப் புலிகள் கட்டிக்காத்த பசுமைகள் இவர்கள் கண்களுக்குக் குளிர்ச்சி ஊட்டின. இவைகுடியேற்றக்கார்களின்கண்களுக்கும்தப்பவில்லை. இதன்காரணத்தினாலேயேமுல்லைத்தீவில்இருந்து90ஆம்ஆண்டளவில் இடம்பெயர்ந்த சுமார் ஆயிரம் முஸ்லிம் உறவுகளின் குடியேற்றத்துக்கும்இந்தவளமானபகுதியைஅபகரிக்கமுயல்கின்றனர். அவர்களின் குடியேற்றத்துக்குக் கூழாமுறிப்புப் பகுதி இலக்கு வைக்கப்படுவதன் மர்மம் என்ன என ஆராயும்போதுஇதைவிடவும்அங்குஓர்உள்அரசியல்நோக்கம் இருப்பதுதட்டுப்படுகிறது.

## குடியேற்றத்துக்குப் பின்னுள்ள அரசியல்

இந்தப் பகுதியில் உள்ள தேக்குகளை அழிப்பதால் கிடைக்கும் வருமானம் மூலம் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு முயல்பவர்கள் இலாபமடைவர். இங்கே குடியேறுபவர்களுக்கும்மரம், பலகைகளுக்குச்செலவுஏற்படாது. அவ்வாறு குடியேறுபவர்களின் உதவியுடன் இரவோடு இரவாக அயலில்உள்ளவனப்பகுதிகளையும்தொடர்ந்துசூறையாடுவது இலகுவாக அமையும். அதேநேரம் இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள கூழாமுறிப்பு ஓட்டுத்தொழிற்சாலை விரைவில் அதிக நிதி மூலம் அபிவிருத்தி செய்யப்படப் போகின்றது.

அவ்வாறு ஓட்டுத் தொழிற்சாலை அபிவிருத்தி செய்யப்படும்போது முதலில் இந்த மாவட்டத்தவர்களுக்கே முன்னுரிமையளித்து தொழிற்சாலைக்கான ஆளணிகள் நிரப்பப்படவேண்டும். அத்துடன்கூழாமுறிப்புக்கிராமத்தவர்களையும் உள்வாங்கியே ஆகவேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் குடியேறிய இவர்களில் அதிகமானோரை தொழிற்சாலை உள்நுழைக்கும் மிகப் பெரும் சூட்சுமம் சர்வ சாதாரணமாக முன்னெடுக்கப்படலாம்.

இதன்படி மாவட்டத்தின் அத்தனை வளங்களும் ஓர் இனத்தைமட்டுமேநோக்காகக்கொண்டுதிருப்பப்படுகின்றது என்ற ஐயம் தமிழர்கள் மத்தியில் எழுவதில் என்ன தவறு இருக்க முடியும்? என அப்பகுதி மக்கள் கேட்கும் கேள்விக்கு சந்தேகத்துக்கு அப்பால் விடையளிக்க யாரும் இல்லை. ஆனால்இந்தப்பிரதேசவனப்பகுதிபாதுகாக்கப்படுமானால் இத்தனை ஐயங்களுக்கும் விடை கிடைக்கும் என்பதே உண்மை.

# யானை ஓடுகிறதா நடக்கிறதா கடத்தப்படுகிறதா?



உளறி

"ஒரு ஊரில ஒரு பெரிய கடல் இருந்தது. அந்தக்கடலுக்குள்ள ஒரு பெரிய யானை மூழ்கிப்போச்சுது. அலை அடிக்க, அடிக்க கடலுக்குள்ள யானை அந்தரிச்சுக் கொண்டிருந்துது. அந்த நேரம் அங்க வந்த மீனவர்கள் அதைக் கண்டார்கள். அவசர அவசரமாகக் கடற்படையினருக்கு அறிவிச்சார்கள். புறப்பட்டு வந்த கடற்படையினர் பெரும் கஸ்ரப்பட்டு அந்த யானையைக் கரை சேர்த்தார்கள். கரை கண்ட யானை, மகிழ்ச்சி பொங்கத் தனது வசிப்பிடத்தை நோக்கி ஓடியது..."
இந்த மாதம் ஊடகங்களில் அதிக இடம்பிடித்த 'யானைச் செய்தி' கள். 'உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்' எனும் தொனிப்புடைய கதைகளாகச் சிறுவர்களுக்குப் புகட்டக்கூடிய வகையில் அமைந்தமை மகிழ்ச்சியே. ஆனால் நானோ இந்த 'யானைச்செய்தி'க்குப் பின்னால் பலவற்றைப் புனைந்திருக்கின்றேன்.

**முதல் முறையாக முல்லைத்தீவில்...**

கடந்த 11ஆம் திகதி முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் கரையில் இருந்து 8கடல் மைல் தொலைதூரக் கடலுக்குள் தத்தளித்துக் கொண்டிருந்த யானை ஒன்று இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டிருக்கின்றது. ஒருவாறு அந்த யானையின் உயிர் கடற்படையினரால் காப்பாற்றப் பட்டது... செய்தி செல்கின்றது.
நடந்திருப்பது முல்லைத்தீவில். காலப்பகுதி கடும்வறட்சி. போதாததற்கு அவ்விடத்தில் காடழிப்பும் நிகழ்கின்றது. காட்டுக்குத் தீ வைக்கின்றார்கள். இதன்படி நோக்கினால், அவ்விடத்தில் உயிரினங்களின் வாழ்க்கைக்கு ஒவ்வாத காலநிலை நிலவுகின்றது.
கடும் வறட்சியால் குளுமை தேடி யானைகள் கடலுக்குள் செல்கின்றன. போதாததற்கு அவற்றின் வசிப்பிடத்தைக் குறைக்கவும் வறட்சியை அதிகரிக்கவும் செய்யும் வகையில் அழிக்கப்படும் காடுகளால் காலநிலை இந்த அவல நிலையைக் கூட்டி விட்டுள்ளது. இனிவரும் காலங்களும் இந்த நிலை தொடர்ந்தால் சில காலத்தில் உயிரினங்கள் அனைத்தும் அழிந்து விடும். மனிதர்களின் நிலையும் பின்னர் அதோ கதிதானே...?

**திரும்பவும் அது திருகோணமலையில்...**

11ஆம் திகதியன்று முல்லைத்தீவில் நடந்ததைப்போன்று அதன் பின்னர் 23ஆம் திகதியன்று திருகோணமலையில் நடந்திருக்கின்றது. அதே சம்பவம். இப்போது யானைகள் இரண்டு. அவையும் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுக் கரைசேர்க்கப்பட்டன.
ஒன்றன் பின் ஒன்றாக, இடத்துக்கிடம் யானைகள் கடலுக்குள் இறங்கத் தொடங்கிவிட்டன. காடுகளை விட்டு அவை கடலுக்குள் குதிப்பதற்குக் காரணம் என்ன? வறட்சியை விட வேறு என்னென்ன காரணங்கள் இருக்கலாம்...!
ஒருவேளை விலங்குகளுக்கு இருக்கும் முன்னறியும் ஆற்றல் இதற்குக் காரணமாக இருக்குமோ...? அதாவது இயற்கை இடரோ, உயிராபத்தை ஏற்படுத்தும் இதர காரியங்களையோ தமது உணர் திறனால் முன்னறிந்து கொண்டு செயலாற்றுகின்றனவோ யானைகள்? அப்படிப் பார்த்தால் கிழக்குக் கரையை முன்பு தாக்கிய சுனாமி அலைகள் தான் மீளவும் அவ்விடத்தில் நிகழ்வது சாத்தியம்.
அப்படியிருந்தால் யானைகள் பாதுகாப்புக்காக உயர் நிலங்களைத்தேடியல்லவா செல்லவேண்டும். ஏன் அவை கடலுக்குள் சென்று தத்தளிக்கின்றன...?
எட்டாத தண்ணிக்குள் மூச்சுக்குக் கஸ்ரப்படும் அவல நிலைக்கு அவற்றின் அறியாமை காரணமா? அல்லது எமது புலனுக்கு எட்டாத பின்னணி ஏதும் இருக்கிறதா...? யானைகள் கடலுக்குள் தத்தளிப்பதைப் போலவே கேள்விகள் பலவும் எனக்குள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

**புத்திக்கூர்மையுடைய பிராணி யானை...**

வறட்சியால் யானைகள் குளுமைதேடிக் கடலுக்குள் புகுந்தாலும் அவை ஏன் தனக்கு வரவிருக்கின்ற ஆபத்தை உணராமல் கடலுக்குள் மீண்டும் மீண்டும் வெகுதூரம் செல்கின்றன? யானை புத்திக் கூர்மையுள்ள ஒரு உயிரினம். சில நடத்தைகளில் மற்றைய உயிரினங்களில் இருந்து அது மேம்பட்டிருப்பதும் உண்மையே. அப்படியான யானைகள் உள்நாட்டு நீர் நிலைகளுள் நீராடும் போதும் நீரருந்தும் போதும் தமக்குக் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு கடலுக்குள் இறங்கிவிட்டால், கண்ணுக்குத் தெரியும் கரையை அடைய முயற்சிக்காமல் எப்படியாகக் கடலுக்குள் அவை 8மைல் தொலைவு வரை...? மேலும் மேலும் ஏன் கடலுக்குள் வெகு தூரம் செல்கின்றன. வறட்சியோ, பஞ்சமோ, காலநிலை மாற்றமோ ? இதுவரை காலமும் யானைகள் குடிமனைகளுக்குள்ளும் தோட்ட நிலங்களுக்குள்ளும் புகுந்ததாகத் தானே பதிவுகள் இருக்கின்றன. அப்படி இருக்கையில் இன்று எப்படி அவை கடலுக்குள்...?
சரி... இப்படி யோசிப்போம்,
இலங்கையின் கிழக்குக் கரைகளில் இருந்து யானைகள் ஏன் சட்டவிரோதமாகக் கடத்தப்படக்கூடாது. அவ்வாறு கடத்தப்படும் யானைகளில் சிலவே இப்படியாகத் தொலை தூரக் கடலுக்குள் அநாதரவாகி விடுகின்றன என்பது ஏன் உண்மையாக இருக்க முடியாது...? யானைகளைக் கடத்துவது சாத்தியமற்றது என்றுகூடச் சொல்லிவிட முடியாத காலம்தானே இது. நம்ப முடியாத பல விடயங்கள் இந்த நாட்டில் அடிக்கடி நடந்துகொண்டு தானே இருக்கின்றன. இறுதிப்போரில் மக்களைக் கொன்றவர்கள் இன்றைக்கு யானைகளைக் காப்பாற்றுவது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா? சரி அதை விடுவோம் இதுவரை காதுக்கு எட்டாத இந்த 'யானைச் செய்தி' உங்களுக்கு எப்படியிருக்கிறது...?





## இந்தவார முகநூலில்...



உசிலமணி

ஒட்டுமொத்தச் சமூகவலைத் தளத்தையும் நல்லூர் துப்பாக்கிச் சூடு கடந்த வாரம் ஆக்கிரமித்து விட்டது. 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் ஓவியாவுக்கு ஆதரவளிக்கும் 'ஓவியா ஆர்மி' அணியின் கோசத்தையும் மீறி, நல்லூர் துப்பாக்கிச் சூடு பேசப்பட்டது.
துப்பாக்கிச்சூடு தன்னை இலக்கு வைத்தது என்று நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிட்டிருந்தார். "நீதிபதியின் கடந்த கால நீதிச்சேவைகளைக் குறிப்பிட்டு அவர் இலக்கு வைக்கப்பட்டது மிகப் பாரதூரமான ஆபத்து" என்று ஒரு அணியினர் பதிவுகளை இட்டனர். மறுபுறம் இன்னொரு கோஷ்டி, பொலிசாரின் வாக்குமூலத்தைத் தூக்கி நிறுத்தி "இது தற்செயலான நிகழ்வு. நீதிபதி இடையில் வந்து மாட்டி விட்டார். நீதிபதி இலக்கு இல்லை" என்று வாதாட ஆரம்பித்தது. நியாய பூர்வமாகத் தோன்றக் கூடிய சில கேள்விகளையும் இந்த கோஷ்டியினர் எழுப்பியிருந்தனர். இந்தக் கணம் வரையில் இந்த வாதம் முடியவில்லை.

'பிக்பாஸ்' நிகழ்சியைத் திட்டித் தீர்த்தாலும் அதைப் பார்ப்பதை யாரும் தவிர்ப்பதாகத் தெரியவில்லை. சமூகவலைத் தளத்தில் பெரும்பாலானோரை ஆக்கிரமித்து வைத்துள்ளது அது. இந்த நிகழ்சியைக் கிண்டலடித்து வருகின்ற 'மீம்ஸ்'களுக்கும் குறைவில்லை. கடந்த வாரங்களில் ஓவியாவுக்கு ஆதரவு அதிகமாகப்; பொங்கி வழிந்தன 'மீம்ஸ்'கள். 'ஓவியா ஆர்மி' என்றொரு அணி கூட உருவாகியிருந்தது. அந்தளவுக்கு அது சமூகவலைத் தளத்தில் பிரபலமாகிவிட்டது. அத்துடன் சமூகவலைத் தளத்தில் பிரபலமானதால் 'பிக்பாஸ்'க்கு வந்த ஜூலியைப் போட்டுத் தாக்காத சமூகவலைத் தளப் பதிவாளர்கள் எவரும் இல்லை என்ற நிலையும் வந்து விட்டது.






நல்லூர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியுடைய மனைவியின் காலில் நீதிபதி மா. இளஞ்செழியன் வீழ்ந்தது, துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட அதிர்வலையைவிடப் பெரிய அதிர்வலையை சமூக வலைத்தளத்தில் ஏற்படுத்தியிருந்தது. துப்பாக்கிச் சூட்டைச் சாதாரணமாகக் கடந்து சென்ற பலர் கூட, நீதிபதியின் மனிதாபிமானத்தின் முன்பாக மண்டியிட்டுக் கருத்துக்களைப் பதிவிட்டனர்.
வழமைக்கு மாறாகச் சிங்கள இளையோர், நீதிபதியின் இந்தச் செயற்பாட்டுக்கு உச்சபட்ச மரியாதை வழங்கினர். இதற்குமேலாக, உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் பிள்ளைகள் இருவரையும் தத்தெடுக்கிறேன் என்று நீதிபதி மா.இளஞ்செழியன் அறிவித்தற்கும் பலமான வரவேற்புக்கள் சமூகவலைத்தளத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.



# கண்டுபிடிக்கப்படாத வன்முறைகளின் மூலவேர்

சந்திரசேகரஆசாத்

அண்மையில் நல்லூர் வீதியில் ஒரு நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் கொல்லப்பட்டார். சன சந்தடி மிக்க ஒருபகுதியில் மாலை நேரத்தில் இப்படி ஒரு படுகொலைச் சம்பவம் இடம்பெற்றமை முழு நாட்டையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நாட்டின் பல்வேறு இடங்களிலும் இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் பல போராட்டங்கள் நடந்தேறின.

எப்படியிருந்த போதிலும் இது திட்டமிடப்படாது தற்செயலாக இடம்பெற்ற ஒரு சம்பவமா? அல்லது யாழ்.குடாநாட்டில் தொடரும் வன்முறைகளின் தொடர்ச்சியா? அல்லது திட்டமிடப்பட்டு நீதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஒரு கொலை முயற்சியா? என்பது போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுத்துள்ளன.

## நீதிபதியின் கருத்துக்கள்

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட நீதிபதி, தான் பயணித்த பாதையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது எனவும் தனது மெய்ப்பாதுகாவலர் அதைச் சீர் செய்ய முயன்றபோது ஒருவன் அவரின் இடுப்புப் பட்டியிலிருந்த துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டார் என்றும் பின்பு அவன் தன்னை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது தனது மற்றைய பாதுகாவலர் அவன் மீது பதில் தாக்குதல் நடத்தினார் எனவும் அதையடுத்து அவன் அந்த இடத்தை விட்டு ஓடி விட்டான் என்றும் தெரிவித்திருந்தார். அவரின் கருத்துப்படி அவரே இலக்கு வைக்கப்பட்டார் என்றும் சுட்டவன் துப்பாக்கியைக் கையாள்வதில் மிகுந்த அனுபவமுள்ளவன் என்பதும் வெளிப்பட்டது. அவரின் இரண்டாவது பாதுகாவலருக்கும் அவனுக்குமிடையே ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகவும் இரு தரப்பிலும் ரவைகள் தீர்ந்த நிலையில் அவன் அவ்விடத்தை விட்டு ஓடி விட்டான் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் பார்க்கும்போது நீதிபதியே இலக்கு வைக்கப்பட்டிருந்தாரெனவும் அவரைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒரு காவலர் உயிரிழந்துள்ளார் எனவும் மற்றவர் காயமடைந்துள்ளாரெனவும் சம்பவ இடத்தில் நேரில் இருந்த நீதிபதி கூறுவதே சரியானதாக இருக்க முடியும்.

## பொலிசாரின் கருத்துக்கள்

நாட்டில் இடம்பெறும் சட்டவிரோத சம்பவங்கள், காடைத்தனங்கள் அநீதிகள், வன்முறைகள் சார்ந்த குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு நீதிபதி இளஞ்செழியன் அவர்கள் சிம்மசொப்பனமாகத் திகழ்பவர்; இந்த வகையில் அவர் சமூக விரோதிகளால் இலக்கு வைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. அது மட்டுமன்றி கடந்த காலங்களில் சட்டவிரோத நடவடிக்கைகளிலோ அல்லது அதிகார முறைகேடுகளில் பொலிசாரோ ஆயுதப் படையினரோ ஈடுபட்டபோதும் அவர்கள் மீதும் நீதிபதி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அது மட்டுமன்றி பன்னாட்டு மர்பியா கும்பலு டன் தொடர்புபட்டவர் எனக்கருதப்படும் சுவிஸ்குமார் சம்பந்தப்பட்டிருக்கும் மாணவி வித்யா கொலை வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் மூவரில் இளஞ்செழியனும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போது அந்த வழக்கில் பொலிஸ் உயரதிகாரிகளும் குற்றவாளிகளாக இனம் காணப்படுகின்றனர். இப்படியான ஒரு நிலையில் நீதிபதி இளஞ்செழியனுக்கு எதிராக ஒரு சதி வலை பின்னப்படுமானால் அது தொடர்பாக ஆச்சரியப்படவும் எதுவுமில்லை.

ஆனால் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பொலிஸ் பேச்சாளர், இது மதுபோதையில் இடம்பெற்ற சம்பவமெனவும், நீதிபதி இலக்கு வைக்கப்படவில்லையெனவும், வீதியில் கலவரத்தில் ஈடுபட்டவர்களை மெய்ப்பாதுகாவலர் தடுக்க முயன்றபோதிலேயே அவரின் துப்பாக்கி பறித்தெடுக்கப்பட்டு அவர் சுடப்பட்டார் எனவும் தெரிவித்திருந்தார். அவ்வாறே யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு மூத்த பொலிஸ் அத்தியட்சகரும் இது ஒரு தற்செயலான சம்பவமெனவும் இதை மேற்கொண்டவர் புனர்வாழ்வு பெறாத ஒரு முன்னாள் போராளியெனவும் தற்சமயம் சாரதியாகப் பணியாற்றுகிறார் எனவும் தெரிவித்திருந்தார்.

இவர்கள், நீதிபதி இளஞ்செழியன் இலக்கு வைக்கப்படவில்லையெனவும் வீதியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தை மெய்க்காவலர் தடுக்க முயன்ற போதே சுடப்பட்டார் எனவும் இது மது போதையில் நடந்த ஒரு எதிர்பாராத சம்பவம் என்றுமே சம்பவம் நடந்து முடிந்த அவ்விடத்துக்குச் சென்ற பொலிசாரும் விடயத்தை விசா ரிக்கும் பொலிசாரும் கூறிநிற்கின்றனர்.

## மக்கள் மத்தியில் சந்தேகங்கள்

நீதிபதி வழமையாகச் செல்லும் பாதையில் அவரின் வாகனத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் வீதியில் ஒரு அசம்பாவிதம் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதெனவும், அந்தத் தடங்கலை நீக்க மெய்க்காவலர் சென்றபோது நீதிபதிக்கு அவரின் பாதுகாப்பை இல்லாமல் செய்யும் நோக்குடன் அவர் சுடப்பட்டார் எனவும் அடுத்த காவலர் உசாரடைந்து செயற்பட்டதால் துப்பாக்கிதாரியின் நோக்கம் நிறைவேறவில்லை எனவும் ஏன் நம்பக்கூடாதெனவும் கேள்விகள் எழத்தான் செய்கிறது.

ஆனால் விசாரணைகள் முழுமையாக நிறைவு பெறாத நிலையில், முக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படாத நிலையில், பொலிசாரால் ஏன் இப்படி ஒரு அறிக்கை அவசரமவசரமாக விடுக்கப்பட்டது...? என்ற சந்தேகமே மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது. முக்கிய சந்தேகநபர் பொலிஸாரிடம் சரணடைந்த பின்பு உடனடியாக நீதிமன்றில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டதும்கூட அதே சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது ஏனெனில் பாரதூரமான குற்றங்கள் தொடர்பான நபர்கள் கைது செய்யப்படும்போது பொலிஸார் நீதிமன்றில் அனுமதி பெற்று பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதுண்டு. ஆனால் இந்த விடயத்தில் அந்தநடைமுறை பின்பற்றப்படவில்லை, இந்தச் சம்பவம் தற்செயலாக இடம்பெற்றதா? அல்லது சந்தேக நபரால் திட்டமிட்டு மேற்கொளப்பட்டதா? அல்லது இவருக்குப் பின்னால் வேறு சில சக்திகள் இருந்து இயக்கியிருந்தனவா? போன்ற விடயங்களைத் தெளிவாக அறிய நிச்சயம் நேர்மையான ஒரு விசாரணை அவசியமாகும். இதில் காத்திரமான புலனாய்வு நடவடிக்கைகள் ஏதாவதொரு உள்நோக்கத்துடன் தவிர்க்கப்பட்டனவா...? என்ற சந்தேகமும் மக்களுக்கு எழத் தவறவில்லை.

## பொலிசாரில் நம்பிக்கையிழப்பதில் தவறென்ன...?

பொலிசாரின் நடவடிக்கைகள் தொடர்பாக இப்படியான சந்தேகங்கள் எழுவதற்கும் காரணங்கள் இல்லாமலில்லை. காரணம், கடந்த காலங்களில் குற்றவாளிகளை இனம் காண்பதிலும் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதிலும் பொலிசாரின் நடவடிக்கைகள் பல சம்பவங்களில் திருப்திகரமாக இருக்கவில்லை.

சங்கானைப் பூசகர் கொலை விடயத்தில் ஒரு சிப்பாயும் முன்னாள் போராளி எனக்கூறப்பட்ட ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். முதலில் அவர்கள் தடுப்புக்காவலுக்கு அனுப்பப்பட்டனர். அதன் பின்பு அவர்களுக்கு என்ன நடந்தது...? என்ற விடயம் வெளிவரவேயில்லை. அதேபோன்று உரும்பிராயைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இன்றுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தீவுப்பகுதியில் மருத்துவத் தாதி தற்கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட மருத்துவர் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டாரா...? இல்லையா...? என்பதும் எவருக்கும் தெரியாது.

இவ்வாறாகக் கவனிக்கப்படாமலிருக்கும் பல குற்றங்களுக்கு மத்தியில் மக்களின் பெரும் கொந்தளிப்பால் கவனத்தை ஈர்த்தது வித்தியா கொலை வழக்கு. இதனால் அது நீதித் துறையால் பெருமெடுப்பில் கவனிப்புப் பெறுவதாயிற்று. இல்லையாயின் இதுவும் மேற்கூறியவற்றைப் போன்றே கவனிக்கப்படாமல் போயிருக்கும். இதன் சூத்திரதாரியெனக் கருதப்படும் சுவிஸ்குமார் என்பவர் தப்பிக் கொழும்புக்குப் போக உதவினார் என்ற குற்றச்சாட்டில் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்படித்தான் கவனிக்கப்படாமலிருக்கும் முந்தைய குற்றங்களிலும் பொலிசார் சம்பந்தப்பட்டிருக்கலாம்...! இதனால் பொலிசார் மீது நம்பிக்கை இழந்து விடுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இந்த நிலையில் தான் நீதிபதி இளஞ்செழியன் தொடர்பான சம்பவத்தில் அவர் இலக்கு வைக்கப்படவில்லையென பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் பண்பாட்டு மையம் எனக் கருதப்பட்டது. அதை பன்னாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் பலரும் பாராட்டியிருந்தனர். இங்கு இறுக்கமான கட்டுப்பாடு, ஒழுக்கம் பேணப்பட்டதை எவரும் மறுத்து விட முடியாது. புலிகளின் ஆளுகைக் காலத்தில் இந்த நிலைமை உச்சத்தைத் தொட்டுக் குற்றங்களே காணமுடியாத மண்ணாகப் பெருமையுடன் தலைநிமிர்ந்து நின்றது.

ஆனால் போர் முடிந்த பின்பு காடைத்தனம், சந்திச் சண்டித்தனம் வாள்வெட்டு, கொலை, களவு, பாலியல் வன்புனர்வு, போதைப் பொருள்கள் கடத்தல் என யாழ்.குடா சகல குற்றங்களினதும் களமாகி விட்டது. ஏராளமான இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் இரவு நேரப் பொலிஸ் ரோந்துகள் என எல்லாம் இருந்தும் எப்படிக் குற்றங்கள் பெருகுகின்றன...? நிச்சயமாக இவை தனிமனிதக் குற்றங்களாக இருக்கமுடியாது. சமூகத்தின் பலவீனமான பேர் வழிகள் உள்ளீர்க்கப்பட்டு, வெள;வேறு முனைகளில் எமது சமூகத்தின் பாரம்பரிய கட்டுக் கோப்பையும் ஒழுங்கத்தையும் சிதைக்கும் வண்ணம் சில சக்திகளால் அவர்கள் வழி நடத்தப்படுகின்றனர் என்பதே உண்மையாக இருக்க முடியும். இப்படியான சக்திகள் விடயத்தில் அதிகாரபீடங்கள் கவனம் செலுத்துவதில்லை. சில சம்பவங்களில் 'ஏவல்பேய்கள்' மட்டுமே கைது செய்யப்படுகின்றன. பின்பு அவர்களும் விடுவிக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் மூலவேர்கள் எவ்வித தொய்வுமின்றி இயங்கிக் கொண்டிருப்பது மட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.



எனவே தான் நீதிபதி இளஞ்செழியன் கொலை முயற்சியிலும் மூலவேர்களைக் கண்டுபிடிக்கவோ வெளிக்கொண்டு வரவோ முயற்சிக்காமல் ஏவற்பேய்களை மாட்டுவதுடன் விடயம் முற்றுப் பெற்றுவிடும் வகையில் காய்கள் நகர்த்தப்படுகின்றவா...? எனப் பொது மக்களில் பலர் சந்தேகப்படுகின்றனர். மூலவேர்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டாலேயே குற்றங்கள் இல்லாத யாழ்ப்பாணம் உருவாகும்.





12

# செல்லும் வழியின் தூரம்

ப்ரியமதா பயஸ்

மற்ற இடங்களைப்போல் அல்லாமல் வலைஞர் மடம், கொஞ்சம் கூடுதலான நாள்களைத் தன்னில் கழிக்க வைத்தது. நாம் கடற்கரைக்கு மிக அண்மையாகத் தறப்பாள் ஒன்றைக் கட்டிக்கொண்டோம். கடல் அலைகள் உக்கிரம் கொண்டால், எங்கள் கூடாரத்துக்குள்ளும் வந்துவிடும். கடல் நீர் காலை நனைக்கும் இடத்தில் எமது இருப்பிடம் அமைந்தது.

### அருமருந்தாக அரிசியும் தேங்காயும்

உணவுப்பொருள்களைக் காண்பதே பெரும் பாடாக இருந்தது. மரக்கறி என்பதை அரிதாகக் காணவும் கிடைக்காது. வாளைத்தண்டுகளையும், பனை வடலிக் குருத்துகளையும் உணவாக எடுத்துக்கொண்டோம். நாம் எதைச் சாப்பிட்டாவது உயிரைக் கையில் பிடிப்போம் என்கின்ற மனநிலையே எல்லோரது மனங்களையும் நிறைத்திருந்தது. கூடாரத்தின் பக்கத்தில் ஏதாவது தொழிலைச் செய்யலாம் என எண்ணினோம் எதைச் செய்வது? அப்போது எல்லோரும் கையில் கிடைக்கும் உணவுப்பொருள்களை உண்டதுபோக, விற்பனை செய்யவும் நினைத்தனர். நாமும் அப்படி ஏதாவது செய்யலாம் என நினைத்தோம்.

வலைஞர் மடத்தை அண்டிய சிறு காட்டுப்பகுதிக்குள் போய் விறகுகளை வெட்டிக்கொண்டு வந்து விற்பனை செய்தனர் பலர். நாமும் விறகு வாங்கி விற்போம் எனத் தீர்மானித்தோம். சைக்கிளில் கட்டிக்கொண்டு வரும் ஒரு சுமை விறகின் பெறுமதி. அறுநூறு ரூபாவாக இருந்தது. அதை வாங்கிக் கொத்தி,'

சிறு துண்டுகளாக்கி, சிறு சிறு கட்டுக்களாகப் பிரித்து விற்பனை செய்தோம். அத்தோடு 'சர்பத்' கரைத்து ஒரு கிளாஸ் பத்து ரூபாவுக்கு விற்றோம். இவற்றில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஒரு சுண்டு அரிசியும், ஒரு துண்டு தேங்காய்ச் சொட்டும் வாங்கிக்கொள்வோம். இங்கே பொன்னைவிட அதிக பெறுமதியாக, அருமருந்தாக இருந்தவை இந்த அரிசியும் தேங்காயும்தான். அநேகர் தொலைகாட்சிப்பெட்டியையும், மின்பிறப்பாக்கியையும், கொடுத்தும் தேங்காய் வாங்குவதற்கு வரிசையில் நின்றனர். கொப்பராத் தேங்காய்ச் சொட்டுகளையும் வரிசையில் நின்று வாங்கிக்கொண்டோம்.



### கப்பலில் வந்தன நிவாரணப் பொருள்கள்

ஒரு 'டொபி' (ஒரு ரூபா பெறுமதியுடையது) ஐம்பது தொடக்கம் நூறு ரூபாவரையில் விற்றது. அவற்றையும் மக்கள் முண்டியடித்து வாங்கத்தவறவில்லை. எந்த உணவானாலும் கிடைக்கும் இடத்தில் வாங்கவே முற்பட்டோம். அதன் விலை பற்றித் துளியும் சிந்திக்கவே இல்லை. அப்போது தான் ஒரு கப்பலில் உணவுப்பொருள்களும், மரக்கறிகளும் வந்திறங்கின. அவற்றைச் சங்கக் கடைகள் ஊடாக விநியோகிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எமக்கான நிவாரண அட்டைகளை எடுத்துச்சென்று அடுக்கிவிட்டு பொருள்கள் பெறக் காத்திருப்போம். சிலவேளைகளில் அந்த நிவாரணக் கடையைத் திறக்க வேண்டியவர் காயப்பட்டிருப்பார். இறந்துவிட்டார் என்ற செய்தியும் வரும். அன்று அப்படி நிவாரண அட்டைகளை அடுக்கிவிட்டுக் காத்திருக்கின்றோம். பூசணிக்காயில் ஒரு சிறிய துண்டு. இரண்டு கரட் கிழங்குகள். ஒருகிலோ அரிசி. கால்கிலோ சீனி என எமக்குப் பொருள்கள் கிடைத்துவிட்டன. பெரும் அமிர்தம் கிடைத்துவிட்டது என்ற நினைப்பு. அவற்றை வாங்கிக்கொண்டு ஓடி வருகின்றேன். அந்தப் பூசனிகாய்த் துண்டு உள் பக்கத்தால் அழுகி இருந்தது. கரட் கிழங்குகள் காய்ந்து சுருங்கிப்போய் இருந்தன. பரவாயில்லை இதுவாகினும் கிடைத்ததே என்று எண்ணிக்கொண்டு தறப்பாளை நோக்கி ஓடி வருகின்றேன்.

**அவலமும் ஓலமும் மனதைக் குடைந்து நின்மதியைக் குலைத்து எண்ணங்களைச் சீரழித்தது. இனி எப்படியாகப் போகின்றதோ எமது வாழ்க்கை...? என்ற கேள்வி எல்லோரது முகத்திலும் நிலை கொண்டது. யாரைப் பார்த்தாலும் ஒவ்வொரு உறவை பறிகொடுத்துவிட்ட வேதனையின் உச்சத்தில் அலைந்தனர்.**

### கூடவே வந்தன கொத்துக் குண்டுகள்

எனது கூடாரத்தை அண்மிக்கும் முன்பே இரண்டு குண்டுகள் விழுந்து வெடிக்கின்றன. நிலத்தோடு படுத்துக்கொள்கின்றேன். விழுந்த இரண்டும் கொத்துக் குண்டுகள். அவை ஆங்காங்கே சிதறித் தொடர்ந்தும் வெடித்துக் கொண்டே இருக்கின்றன.

தலையை நிமிர்த்த முடியவில்லை. கொத்துக்குண்டுகள் எங்களூரில் கட்டட வேலை செய்பவர்கள் வைத்திருக்கும் தூக்குக் குண்டு எனும் கருவியைப் போன்ற வடிவத்தில் இருக்கும்.

அவை விழுந்ததும் ஒரே நேரத்தில் வெடிக்காது ஆறு, ஏழு நிமிட இடைவெளியில் ஒன்று,

இரண்டாக வெடிக்கும். பெரும் அழிவுகளை அவை தரும். அந்தக் குண்டுகள் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இப்போதுள்ள இடத்தில் அனைத்துப் பகுதிகளிலும் வீழ்ந்து வெடிக்கின்றன. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு ஓடுகின்றனர். சிலர் அவர்களை எச்சரிக்கின்றனர்.

"ஓடவேண்டாம்... கொத்துக் குண்டு அடிச்சிருக்கிறான்... படுங்கோ... படுங்கோ..."

எழுந்து ஓடியவர்களில் சிலர் அமைதியாக ஆங்காங்கே வீழ்ந்து பதுங்கியிருந்த குண்டுகளுக்கு இலக்காகி காயப்படுகின்றனர். சிலர் பிணமாகி விழுகின்றனர்.

அவலத்தின் உச்சத்தில் அந்த இடம். சிறிது நேரத்தில் ஓரளவு ஓய்ந்து விட்டது என்பதை அறிந்து நான் எழுந்து ஓடுகின்றேன்.

### பொசுக்கியழித்தன பொஸ்பரஸ் குண்டுகள்

செல் விழுந்த திசை நோக்கி எல்லோரும் ஓடுகின்றனர். யார் காயப்பட்டனர்? யார் இறந்தனர்? என்று அறிவதற்கு எல்லோரும் ஒன்றாக அள்ளுப்பட்டபடி ஓடுகின்றனர். அவலமும் ஓலமும் மனதைக் குடைந்து நின்மதியைக் குலைத்து எண்ணங்களைச் சீரழித்தன. இனி எப்படியாகப் போகின்றதோ எமது வாழ்க்கை...? என்ற கேள்வி எல்லோரது முகத்திலும் நிலை கொண்டது. யாரைப்பார்த்தாலும் ஒவ்வொரு உறவைப் பறிகொடுத்துவிட்ட வேதனையின் உச்சத்தில் அலைந்தனர். அவர்களின் மனதை ஆறுதல் படுத்த யாராலும் முடியவில்லை.

எல்லோருக்கும் ஒரே நிலைதான். நான் கொண்டுவந்த பொருள்களைக் கூடாரத்துக்குள் வைத்துவிட்டுக் கை, கால்களைத் துடைத்துக்கொண்டு அவற்றைச் சமைக்கலாம் என நினைத்தேன். அடுத்த செல் இன்னும் அருகாக வந்து விழுந்தது. விழுந்ததும் அருகிருந்த கூடாரங்கள் எல்லாம் பற்றி எரிந்தன. இது பொஸ்பரஸ் குண்டு. வீழ்ந்த பிரதேசம் முழுவதையும் எரித்துச்சாம்பலாக்கும். குண்டு விழுந்ததும் எழும் புகையும் அதன் மணமும் அவை பொஸ்பரஸ் குண்டுகளே என்பதை இனம் காட்டும். பல நாள்களுக்கு அந்த மணம் மூக்கில் ஒட்டிக்கொண்டு சுவாசத்தையும் மனதையும் சீரழிக்கும். அந்தக் குண்டையே எம்மை நோக்கி வீசியிருந்தது இராணுவம்.

### சமைத்து உண்ட கடைசி நாள்...

பொஸ்பரஸ் குண்டுகளிலிருந்து வந்த புகையும் மணமும் மூச்சு விடமுடியாமல் திக்குமுக்காட வைத்தன. நிலைகுலைந்து ஓட்டம் எடுக்கின்றோம். எங்கே ஓடுகின்றோம் என்று புரியாமல் இரண்டு கிலோமீற்றர்கள் தூரம்வரைக்கும் ஓடியே நின்றோம். ஒரு சில மணி நேரங்களுக்குப் பின்னர் மீண்டும் திரும்பி அந்த இடத்துக்கு வருகின்றோம் கலையில் இருந்து தண்ணீர் கூடக் குடிக்காத வயிறு இறந்தே விட்டது. அதை உயிப்பிக்கத் தண்ணீரை அள்ளிக் குடித்துப் பிள்ளைக்கும் பருக்குகின்றேன்.

ஏதுமறியா என் பாலகன் பசியின் உச்சத்தில் தண்ணீரைச் சுவைத்துப் பருகியது எனது நெஞ்சை அடைத்து விம்மலாக அழுகையைக் கொண்டு வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு அந்தப் பூசணிக்காயையும் கரட்டையும் சமைக்கிறேன். நீண்ட நாள்களுக்குப்பின் நமது கண்களுக்குப்பட்டது அந்த இரண்டு மறக்கறிகளும்தான். அதன்பின்னர் வலயம்- 4க்கு வரும்வரைக்கும் சோற்றையோ. கறியையோ நாம் கனவிலும் காணவில்லை.

(தொடரும்)

## ஆணாதிக்க சமூகம்...



பெண் சாமிகள் உள்ளனதான்
ஆனால்,
கள்ளியில் இன்னும் பால் சுரக்கின்றது..
இது தேவதைகள் வாழும் பூமிதான்
ஆனால்,
ஓநாய்களுக்கு மட்டும் பஞ்சமில்லை...
விஞ்ஞானத்தில் சிகரம் தொட்டவர்கள்
நாங்கள்தான் ஆனால்
அரிச்சுவடி தெரியாத பெண்களும்
இங்குண்டு...
முற்போக்குச் சிந்தனைகள் அதிகம்தான்
ஆனால்,
பிற்படுத்தப்பட்டவர்களும் இங்குண்டு...
பெண்ணியல்வாதிகள் அதிகம்தான்
ஆனால்,
இது ஆணாதிக்க சமூகமாயிற்றே.

சரோன்

வளவை வளவன்

# விருந்து

சிறுகதை

அடர்ந்த காட்டில், மரங்களினூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையை ஊடறுத்துச் செல்லும் குதிரைகளின் குளம்பொலி தெளிவாகக் கேட்டுக்கொண்டே இருந்தது. குதிரைகளின் குளம்பொலியை வென்று விட வேண்டும் என்பதுபோலப் புளுதி எழுந்து எல்லாவற்றையும் உருமறைப்புச் செய்துகொண்டிருந்தபோது, ஏதோ ஒரு நம்பிக்கையோடு ஒரு மர நிழலில் படுத்துப் பதுங்கியவாறிருந்த சாத்தனார் மெல்ல எழுந்து மோப்பம் பிடிக்கும் வேட்டை நாய்களைப்போல தன் செவிகளையும் விழிகளையும் கூர்மைப்படுத்திக் கொண்டு, எல்லாம் அடங்கி வனத்தின் அமைதி மட்டுமே குடியிருப்பதை உணர்ந்து, சற்று வெளியாயிருந்த ஒரு இடத்தில் நின்று, "மன்னா...! மறைந்தது போதும் இனி வெளிப்பட்டு வாருங்கள். உங்கள் தமிழ்ப் புலவன் வந்திருக்கிறேன்" எனத் தன் மனம்போன போக்கில், நாடகத்தில் வசனம்பேசும் ஒரு நடிகர்போலப் பேசிக் கொண்டிருந்தார்.

புலவரின் குரல் காட்டில் எதிரொலித்து அதிர்ந்து மீண்டும் புலவரிடமே வந்து சரணடைந்து கொண்டது. இருந்தபோதிலும் புலவரின் மனம் தளராத ஒரு நம்பிக்கை உறுதியோடு...

"எங்கும் தேடி உன்னைக் காணா மனமும் வாடுதே, குமணா உன்னைத் தேடித் தேடி எங்கும் காணனே! எங்கும் தேடி..."

அதற்குமேல் குரல் எழாது கம்மித் தொண்டை அடைத்துக்கொண்ட புலவர் மெல்ல மெல்லச் சரிந்து மயக்கமுற்றவாறு கிடக்கிறார்.

அமைதி இருளான ஒரு மயக்கம். மெல்ல... மெல்லப் புலவரின் அறிவு சுய நினைவுக்கு வந்தபோது...

"யாரப்பா...?"

"ம்... நீ யார்...?"

"இந்தக் காட்டுக்குள் வந்து மன்னனைத்தேடும் நீ யார்...?"

தன் தாடியை விரல்களால் வருடியவாறு ஒரு துறவி நிற்பதைப் புல்வர் புரிந்து எழுந்து கொள்ள முயல்கிறார்.

புலவரை எழுந்து கொள்ள விடாது தடுத்தவாறு

"விழுந்து போவீர்கள் போலிருப்பதால் எழாதீர்கள்"

எனத் தடுத்த துறவி தன் தாடியை விரல்களால் தடவியவாறு நிற்பதைப் புலவர் புரிந்துகொண்டு

"அய்யா துறவியாக வந்து என் மயக்கத்தைத் தெளிவித்த தாங்கள் யார்?" என்று ஒரு கேள்வியைத் தொடுத்துவிட்டு, அந்தத் துறவியின் விழிகளைத் தன் பார்வையால் சல்லடை போட்டுத் துளைத்தார் புலவர்.

கணங்கள் சில கடந்து சென்றன.... இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாது அமைதி காத்தனர்.

புலவரின் விழிகள் துறவியின் விழிகளுக்குள் எதையோ தேடிக் கொண்டிருந்தன. அதே போலத்தான் துறவியும். அந்தப் புலவரைப் புரிந்து கொண்டது போலத் தனக்குள் தீர்மானித்துக் கொண்டிருந்தபோதும் எதையுமே சொல்லிக் கொள்ளாது இருந்தவர் ஏனோ, எதையோ தீர்மானித்ததுபோல ,

"அய்யா தாங்கள் யார்...?, உங்கள் பெயர் என்ன? இந்தக் காட்டுக்குள் யாரைத் தேடி...?" என்று இழுத்து நிறுத்தினார் துறவி.

"அய்யா என் பெயர் சாத்தனார். நான் ஒரு புலவன்" என அவர் வார்த்தையை முடிக்க முன்னர் "என்ன சாத்தனாரா...?" என்று கேட்டுக் கொண்டே தன்னை மறந்தவராகப் புலவரைக் கட்டித் தழுவியவாறு அழுதார் அந்தத் துறவி.

சாத்தனார், "நானே தான்" என மீண்டும் கூறிவிட்டுத் தனக்குள் எதையோ முடிவெடுத்தவராகித் தலையசைத்தவாறு "அப்படியானால்..." என்று சந்தோசம் கொப்புளிக்கச் சத்தமாகப் பேசிய சாத்தனார் விழிகளிலிருந்து பொல பொலத்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே,




**"அரசே! வாக்குத் தவறி வாழாத குமண வள்ளலுக்கு நீங்கள் தம்பி என்றால். சொன்ன சொல்லைக் காத்துப் பரிசினைத் தாருங்கள். ம்... எனக்கான பரிசினைத் தாருங்கள்"**

"மன்னா...! மன்னா...! குமண மன்னா...!" எனச் சத்தமிட்டவாறு மீட்டு மீட்டு அழுதார்.

"அய்யோ மன்னா...! இந்தக் கோலத்திலா...! வள்ளலே... உங்களை..." மீண்டும் புயலடித்து ஓய்ந்ததான அமைதி. இருவரும் எதையுமே பேசாது மௌனித்தனர்.

காட்டுக்குள் புலவன் ஏன் வரவேண்டும்? எதிர்பாராத இந்தக் கேள்வியைத் துறவி தனக்குள் கேட்டு நிறுத்தினார். காட்டுக்குள் புலவனுக்கு என்ன பணி? இதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட சாத்தனார் தனது நிலையை விளக்கிப் பாடினார்.

*ஆடு நனி மறந்த கோடு உயர் அடுப்பின்*

*ஆம்பி பூப்பத் தேம்பு பசி உழவாய்*

*பா அய் இன்மையில் தோலோடு திரங்கி*

*இல்லி தூர்ந்த பொய்ய வாறு முலை*

*சுவைத் தொறு அழுதும் தன் மகத்து முகம் நோக்கி*

*நீரோடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்*

*மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ*

*நின்முகம் நோக்கினனே இன்மை தீர்க்கும் குமணா...(புறம் 164)*

என்று பாடிக் கண்ணீர் வடித்துக் கொண்டார் சாத்தனார். கணப்பொழுதுக்குள் அந்தப் புதரின் பின்னால் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்துவந்து, "புலவரே! இதோ உங்கள் பஞ்சம் தீர்க்கும் வழி இந்த வாளினால் என் தலையை வெட்டி எடுத்துச் செல்லுங்கள். என் தலைக்கு ஆயிரம் பொற்கிளி தருவதாக அறிவித்த என் தம்பியிடம் காட்டி உரிய விருதினைப் பெற்றப் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்..."

என்று துறவி வேடத்திலிருக்கும் குமணன் சொல்லி முடிக்கும் முன்னரே சாத்தனார் வாளைப் பிடுங்கியதுபோல் பறித்துக் கொண்டார்.

"மன்னா...! உங்கள் தலை இப்போது எனக்குரியது. ஆம் நீங்கள் என் கவிதையால் என் வறுமையைப் போக்க உங்கள் தலையை எனக்கென்றுரைத்து விட்டீர்கள். எனவே நான் சென்று, திரும்பி வந்து தங்களைச் சந்திக்கும் வரை அதை யாருக்கும் கொடுத்துவிடக் கூடாது.

**"மன்னா...! உங்கள் தலை இப் போது எனக்குரியது. ஆம் நீங்கள் என் கவிதையால் என் வறுமையைப் போக்க உங்கள் தலையை எனக் கென்றுரைத்து விட்டீர்கள். எனவே நான் சென்று திரும்பி வந்து தங்களைச் சந்திக்கும் வரை யாருக்கும் கொடுத்துவிடக் கூடாது. உங்கள் வாளுடன் சென்று முடிவு காண்பேன் உறுதிபட உரைத்த சாத்தனார் எழுந்து சென்றார் விரைந்து.**

உங்கள் வாளுடன் சென்று முடிவு காண்பேன்" உறுதிபட உரைத்த சாத்தனார் எழுந்து சென்றார் விரைந்து.

துணி கொண்டு மூடிய ஒரு தட்டை ஏந்தியவாறு சாத்தனார் இளங்குமணனின் அரசவைக்குச் சென்று "மன்னா...! தலைக்கு ஆயிரம் பொற்காசுகள் தருவதாகக் கூறினீர்கள் அல்லவா...? இதோ குமண வள்ளலின் தலை" என்று கூறி நிறுத்தி நின்றார்.

இளங்குமணனின் கொலு மண்டபம் அதிர்ந்து போனது. இளங்குமணன் திகைத்துப் போனான். அந்தத் தலையைப் பார்த்துவிட மூடியிருக்கும் துணியை அகற்றுங்கள் என்று கூறி நிறுத்தி நின்றான். புலவர் சாத்தனாரோ, "எனக்குரிய ஆயிரம் பொற்காசுகளையும் தட்டில் வையுங்கள். தலையை மூடிய துணியை நானே திறந்து காட்டுகிறேன்" என்று வீரமாகவே கூறினார்.

"இந்தப் புலவன் கூறுவது உண்மைதானென்றால்... மூடிய துணிக்குள் இருப்பது என் அண்ணணின் தலை தானா?" அதற்கு மேல் அவனிடமிருந்து வார்த்தைகளுக்குப் பதில் அவலக் குரலாகக் கண்ணீர் பெருகி ஓடக் கதறினான்.

"அய்யோ.. அய்யோ... அரச மோகம்... ஆட்சி அதிகார வெறி... என்னை, என் உடன் பிறப்பை..." அதற்கு மேல் பேச முடியாது நாக்குழறிக் கதறி வீழ்ந்தான். தரையில் புழுவாய்ப்புரண்டுபுரண்டுகதறித்துடித்தான்.

புலவர் சாத்தனாரோ விடுவதாக இல்லை. "அரசே! வாக்குத் தவறி வாழாத குமண வள்ளலுக்கு நீங்கள் தம்பி என்றால். சொன்ன சொல்லைக் காத்துப் பரிசினைத் தாருங்கள். ம்... எனக்கான பரிசினைத் தாருங்கள்" என ஆணையிடுவது போலக் கூறினார்.

'குமணனுக்கு நான் தம்பி. வாக்குத் தவறாத குமண வள்ளலுக்கு நான் தம்பி. சொற்களால் என்னைக் கொல்லவா வந்தீர்' என்று சொல்லிச் சொல்லித் தரையில் வீழ்ந்து அரசன் என்பதையே மறந்து கதறினான் இளங்குமணன். ''தலை கொடுத்த அண்ணனுக்குத் தம்பியாக நான் அரசாள்வதா...?

பக். → 43



### சிந்தனைக்கு

வஞ்சனைகள்
செய்வாரோடு
இணங்க
வேண்டாம்.
-உலகநாதர்

# 'உபாயமும் அபாயமே'

## வஞ்சக எண்ணம் தரும் அழிவு



பச்சைப் பதுமையாய் காட்சிதரும் வயல்வெளிகளின் நடுவே நீரலைகள் கூடிக் களிக்கும் அழகிய குளம் ஒன்று அமைந்திருந்தது. அதன் ஓரமாய் வயதான கொக்கு ஒன்று கோபத்தின் வெறுமையோடு ஒற்றைக் காலில் இரை தேடிக் காத்திருந்தது.மீன்கள் அலையோடு கதைபேசி துள்ளிக் குதித்தபடி மகிழ்ந்திருந்தன.இந்த சந்தர்ப்பத்திலே காத்திருக்கும் கொக்கை அவதானித்த மீன் ஒன்று சந்தேகம் கொண்டது. "இந்தக் கொக்கு எங்களைக் கண்டால் தனக்கு இரையாக்கிவிடுமே.இன்று என்ன நடந்தது செயலற்றுப்போய் நின்றுள்ளதே. என்ன காரணமாக இருக்கும்?" என்று சிந்தனைவயப்பட்டது. பின்பு எதுநடந்தாலும் எமக்கென்ன என்று இருந்துவிடாது வயதான கொக்கின் முன்பாகத் துள்ளிக்குதித்தபடி, "என்ன கொக்காரே! உன் ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கிறீர்?" என்று கேட்டது.சற்றே நிதானம் கொண்ட கொக்கு பதிலுரைத்தது. "நான் மீனைக் கொத்தித் தின்பவன்தான். ஆனாலும், இன்று மனதில் ஒரு சஞ்சலம் குடிகொண்டுள்ளது." என்று கூறியது கொக்கு. "அப்படியா! மனதில் சஞ்சலமா,அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது உமக்கு?" என்று வினவியது மீன்.மீண்டும் பதிலுரை வழங்கிய கொக்கு, நீ வற்புறுத்திக் கேட்பதாலே சொல்கிறேன்.

"இப்போது ஒரு செம்படவன் இங்கே வரப்போகிறான்" என்று வார்த்தைகளை இழுத்தது. அதற்கென்ன "வரட்டுமே" என்றது மீன். எப்படி இந்தத் தைரியம் கிடைத்தது உமக்கு. வருவது வரட்டுமே என்கிறாய்..? "உங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக அவன் பிடித்துச் சென்றுவிடப் போகிறான்" என்றது கொக்கு.

ஆமாம் என்று தலையசைத்து கொக்காரின் அறிவுரையை கேட்டபடியே நீரினுள் அமிழ்ந்துகொண்டது மீன். சில நாழிகைகள் கழிந்ததும் பல மீன்கள் நீருக்கடியில் ஒன்றுகூடிக் கதைத்தன.பின்பு கொக்கின் முன்பாக துள்ளிக்குதித்தன. ஒருசேரக் குரல்கொடுத்து "நீயே எங்களையெல்லாம் அந்த அபாயத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்" என கெஞ்சின. கோரிக்கையை முன்வைத்தன. "நான் என்ன செய்வேன்..? என்னால் செம்படவனோடு சண்டை போட முடியாது. வேண்டுமெனில் உங்களை இந்தக் குளத்திலிருந்து வேறொரு குளத்தில் கொண்டு போய் விட்டுவிடுகிறேன். அந்தக் காரியத்தை செய்வதால் எனக்கு பரோபகாரி என்ற பெயர் கிடைக்கும். நீங்கள் பிழைத்திருப்பீர்கள்." என்றது கொக்கு. யோசனை ஏதுமின்றி தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கொக்காரின் பேச்சை நம்பின. "அபாயத்தை அறிந்து சொன்ன நீங்களே உபாயத்தையும் தெரிந்து சொல்கிறீர்கள். அப்படியே செய்யுங்கள்" என்று கூறி ஒருமித்த குரலில் தங்கள் ஒப்புதலை மீன்கள் வெளிப்படுத்தின. செயலில் இறங்கியது கொக்கு.மீன்களையெல்லாம் தனது அலகு கொண்டு கௌவிக் சென்றது.சில மீன்களைத் தின்றது. ஏனைய மீன்களை பாறையில் உலரவைத்தது. தனது உணவாக்கிக் கொண்டது. இந்த சந்தர்ப்பத்திலே குளத்திலிருந்த நண்டு ஒன்றும் வேறிடம் செல்லத் தீர்மானித்தது.மீன்கள் கொக்காரின் உதவி கொண்டு இடம்பெயர்வு கொள்வதை அவதானித்தது. கொக்கை விழித்தபடி, "ஓ.. ஜீவகாருண்யனே! என்னையும் அவ்விடத்துக்குக் கொண்டு போங்கள்" என்று கெஞ்சியது. நண்டின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொக்கு, நண்டையும் கௌவிக்கொண்டு பறந்தது. பறந்து செல்லும் வழியில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறியிருப்பதைக் கண்டது நண்டு. வேறு நீர்நிலைக்குக் கொண்டு செல்வதாகக் கூறி மீன்களைத் தின்றுவிடும் தந்திரத்தை நண்டு புரிந்துகொண்டது.

தன்னைத் தற்காத்துக்கொள்ள தீர்மானித்தது.பின்பு "கொக்காரே! நீங்கள் என்மீது இரக்கம் கொண்டு இப்பணி செய்கிறீர்கள்.ஆனாலும் நான் ஒன்றை மறந்துவிட்டேன்.அங்கே என் உறவினர்கள் பலரும் இருக்கின்றனர்.அவர்களையும் காப்பாற்றியாக வேண்டும்.என்னை மீண்டும் அங்கே கொண்டு செல்லுங்கள். அவைகளையும் உம்மிடத்தில் காண்பிக்கிறேன்." என்றுரைத்தது நண்டு. நண்டு கூறிய பரிவான வார்த்தைகள் மீது நம்பிக்கை கொண்டது கொக்கு. மீண்டும் நண்டை கௌவிக் கொண்டு பழைய குளத்தை நோக்கிப் பறந்தது. குளத்தை அடைந்ததும் தனது திட்டத்தை நிறைவேற்றியது நண்டு.தன் கொடுக்கின் உதவி கொண்டு கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கியது. குளத்து நீரில் பாய்ந்து உயிர் பிழைத்துக்கொண்டது.

**நீதி – "வஞ்சக எண்ணமுடையவரின் உபாயமும் அபாயமே"**

# மூன்றில் கவனம் கொள்க

**முடிவுகளை எடுக்காதிருத்தல்**
1.பசி வயிற்றைக் கிள்ளும் போது.
2.தூக்கம் கண்களைஅரவணைத்திடும் போது.
3.போதையில் இருக்கும்போது.

**வாக்குறுதி தராதிருத்தல்**
1.மகிழ்ச்சியாக இருக்கும்போது.
2.துக்கத்தில் இருக்கும்போது.
3.கோபத்தில் இருக்கும்போது.

**நட்பினின்றும் ஒதுங்குதல்**
1.எம்மைப் பற்றி உணராதவர்கள்.
2எமைக் கண்டு பொறாமை கொள்பவர்கள்.
3.எமக்கு ஈடாகச் செயற்பட முடியாதவர்கள்.

**மறந்திருந்தல் ஆகாது**
1.ஆபத்தில் எமக்கு உதவிசெய்தவர்கள்.
2.எமது குறைகளைப் பெரிதுபடுத்தாதவர்கள்.
3.எமது நலத்தை நாடுபவர்கள்.



# இளநீர்

தென்னை மரத்து இளநீரு நல்ல
தேன்போல இனிக்கும் சுவைநீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே தினம்
ஏற்று அருந்தி விட்டால் நலம் தருமே!

பானத்தில் இளநீர் அரியவகை எந்தக்
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை...!

இயற்கை தந்தது இளநீரு நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே எம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே...!

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே எம்
அனைவரது தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம் அவை தரும்
ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்...!




# கொடுங்கள்

1. மனிதர்களுக்கு மதிப்பைக் கொடுங்கள்.
2. துன்புறுவோருக்கு ஆறுதல் கொடுங்கள்.
3. பார்வையற்றோருக்குப் பார்வை கொடுங்கள்.
4. வன்முறைக்கு விடுதலை கொடுங்கள்.
5. திறமையுள்ளவர்களுக்கு வெற்றி யைக் கொடுங்கள்.
6. எதுவும் செய்ய முடியாதவர்களுக்கு விளக்கம் கொடுங்கள்.



அன்றியா சுரேந்திரன்,
தரம் - 1சி
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



கேதீசன் அக் ஷிதா,
வளர்மதி முன்பள்ளி கொக்குவில்.

# வாழ்க்கையில் வெற்றி காண..

1.எவருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ, அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.
2.மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட, ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.
3.பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் எவருக்குமே உன்னைத் தெரியாது.
4.சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகிறது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகிவிடுகிறது.
5.மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாகச் சிந்திப்பதும். முட்டாள்தனமாகச் செயற்படுவதுமே.
6.முட்டாளைச் சமாளிக்க இலகுவான வழி, மௌனமாக இருப்பதே.
7.அருகில் இருக்கும்போது கோபுரங்கள்கூட உயரமாகத் தெரிவதில்லை. தூரத்தில் இருக்கும்போதே மிகப் பெரிதாகத் தெரிகின்றன.
8.நன்றாகப் பேசுவது நல்லதுதான். ஆனால், நன்றாகச் செயற்படுவது அதனிலும் சிறந்தது.
9.மறக்க வேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும், மறக்க வேண்டாதவைகளை மறந்துவிடுவதும்தான் துன்பங்களுக்குக் காரணம்.
10.தோல்வி வந்தால், அதை உனக்குப் பிரியமானதாகக் காட்டிக்கொள். வெற்றி அடைந்தால், அதை மிகவும் பழக்கப்பட்டதுபோல் காட்டிக் கொள். இதுதான் வாழ்க்கையின் இரகசியம்.

### கிழமைகளும் இயல்புகளும்

| | |
|---|---|
| ஞாயிறு | ஓய்வு |
| திங்கள் | சுறுசுறுப்பு |
| செவ்வாய் | அலுப்பு |
| புதன் | பொறுமை |
| வியாழன் | வெற்றி |
| வெள்ளி | செல்வம் |
| சனி | துன்பம் |

# பழங்களின் நிறங்களும் குணங்களும்

## நீல நிறப் பழங்கள்





இவ் வகைப் பழங்களுள் நீலத் திராட்சை, நாவல்பழம், நீல பிளம்ஸ் போன்றவை அடங்குகின்றன. துவர்ப்புச் சுவையை மிகுதியாகக் கொண்டு இவை மனிதனுக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றன. குருதி அழுத்தத்தைக் குறைக்கின்றன. தொண்டைக்கம்மல், வறட்டு இருமல், தலைவலி, தலையில் நீர்க் கோர்வையைக் குணப்படுத்துகின்றன. ஆஸ்த்மா நோயாளிகளுக்கு மிகவும் உகந்த மருந்தாகும். நுரையீரலைப் பலப்படுத்தி சுவாசத்தை எளிதாக்கும். குருதி உறைவதைத் துரிதப்படுத்தும்.

# நான் கவிஞனாக வேண்டும்



கவிஞர்கள்
எங்களைப்போல இல்லை
குருவிகளோடு பேசுவார்கள்
நிலவு, கடல், ஆறு, மரம்
இவை என்ன நினைக்கின்றன
என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிகின்றது

பனி, மழை, வெய்யில் என இயற்கை அம்சங்களை
கவிதையால் கட்டிப்போடுகிறார்கள்

கோடை எரிகிற நேரத்தில்
மழையை கவிதைக்குள் கொண்டு வந்து விடுகிறார்கள்

"சாதிகள் இல்லையடி" என்று சமத்துவம் பேசுகிறார்கள்
"ஒருவனே தேவன்" என்று
மதங்களை இலகுவாகக் கடந்து விடுகிறார்கள்
சில சமயம் கடவுளோடும் பேசுகிறார்கள்
இதயத்து அன்பை எடுத்துச் சொற்களில் பூசி விடுகிறார்கள்
வார்த்தைகளால் மற்றவர்களை வசீகரிக்கிறார்கள்
துயரத்தின் நடுவில் இருந்தாலும்
வார்த்தைகளால் சிரித்துக் கொள்கிறார்கள்
கற்பனையிலேயே ராஜாவாக
வாழ்ந்து விட்டுப் போகிறார்கள்

"நாமார்க்கும் குடியல்லோம்"
என்று அதிகாரத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள்
சொற்களில் வெடிகளைப் பொருத்தவும்
இவர்களுக்குத் தெரிகின்றது
காயப்படாமல், சிறு கீறல் விழாமல்
புரட்சிகளைத் தூண்டி விடுகிறார்கள்
பெரும் போர்களை நடத்தி இருக்கிறார்கள்
வென்றால் வெற்றிப் பாடலையும்
தோற்றால் துயரக் கவிகளையும்
இவர்களே எழுதிக்கொள்கிறார்கள்

எப்படிப் பார்த்தாலும் வீரம் நிறைந்தவர்கள் இவர்கள்தான்
எனவே நானும் இப்படி ஒரு கவிஞனாக வேண்டும்
ஆனால் ஒன்றைப் பற்றித்தான் யோசிக்கிறேன்
பல கவிஞர்கள் மனைவிக்கு மட்டும்
பயந்தவர்களாக இருக்கிறார்கள்.

வேலணையூர் தாஸ்



அருணா செல்லத்துரை

## நாகவழிபாட்டுத் தலங்களில் உள்ள புராதன சிலைகள்

# 2,500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

4

புராதன காலத்தில் தமது சொத்துக்களின் அடையாளங்களை கருங்கற்களில் பொளிந்து வைக்கும் பாரம்பரியம் இருந்துள்ளது. எழுத்து வடிவங்கள் இல்லாத காரணத்தினால் பறவைகள் மிருகங்கள், பாம்புகள் போன்றவற்றின் உரு வங்கள் கருங்கற்களில் பொளியப்பட்டு நிலப்பிரிவுகள், சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்குப் பின்னர் நாகர்கள் பிராமி எழுத்து வடிவங்களை உருவாக்கித் தொடர்ச்சியாக தமது தலைவர்களின் பெயரை அடையாளமாகப் பொளிந்துள்ளமைக்குத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் ஆதாரமாகின்றன.

அநேகமான கல்வெட்டுகளில் நாகர்களுடைய தலைவர்களாகக் கருதப்பட்ட 'வேள்ணாகன்', 'வேள்ணாகன் மகன் வேள்கண்ணன்', 'வேள் கண்ணன் மகன் வேள்ணாகன்' என்று நாகர்களுடைய மூன்று பரம்பரைப் பெயர்கள் பொளியப்பட்டுள்ளன. இந்த அடையாளங்கள் நாகர்களுடைய வேள்புலங்களைக் குறிப்பனவாக உள்ளன. "வீடு, வாசல், காணி, பூமி என்பவற்றில் உரிமை கொள்வதற்குஉறுதிகள் எவ்வளவு ஆதாரமோ, அதேபோல நூற்றாண்டு காலமாகத் தமிழ்மொழி பேசுவோர் வாழ்ந்த வாழுகின்ற தொடர்ச்சியான நிலப்பரப்பில் அவர்களுக்குரிய உரிமையின் உண்மையான ஆதாரங்களே இந்தக் கல்வெட்டுக்கள். அநேகமான கல்வெட்டுக்கள் எமது பூர்வீக நிலத்திற்கான அடையாளங்கள்" என்று பேராசிரியர் சி.பத்மநாதன் குறித்திருக்கின்றார்.

அத்தோடு நாகர்கள் வழிபாடு இயற்றிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் 'மணிணாகன்' மற்றும் 'மணிணாகன் பள்ளி' என்றும் பொளியப்பட்டிருப்பது சில கல்வெட்டுகள் மூலம் தெளிவாகின்றது.

நிறுத்திய நிலையில் அகலம் குறைந்த தனிக்கல்லில் பொளியப்பட்ட நாகர்களின் வழிபாட்டுச் சின்னமான ஐந்துதலை நாக சிலைகள் அடங்காப்பற்று- வன்னிப் பிரதேசத்தின் பல இடங்களில் காணப்படுகின்றன. வவுனியா சமளங்குளத்துக்குத் தெற்கேயுள்ள மலைகளில் உற்பத்தியாகி சமளங்குளம் மலைக்குன்றைச் சுற்றிப் பாயும் அருவி ஆற்றின் நீரோடைக்குச் செல்வதற்கு உச்சியிலிருந்து படிக்கட்டுகள் ஆங்காங்கே பொளியப்பட்டுள்ளன.

மலைக்குன்றில் உள்ள அண்மைக்கால பிள்ளையார் கோவிலின் இடது பக்கத்தில், நாகர்களின் வழிபாட்டுச் சின்னமான ஐந்துதலை நாகத்தின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சிதைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஐந்துதலை நாகத்தின் உருவம் நாகர்கால வழிபாட்டைப் பறைசாற்றும் வரலாற்று அடையாளமாக உள்ளது.



**சமளங்குளத்தில் ஐந்துதலை நாக சிலை**

இதேபோன்ற அமைப்பில் உள்ள மற்றுமொரு ஐந்துதலை நாகசிலை, வவுனியா-யாழ்ப்பாணம் (ஏ- 9) பிரதான வீதியில் தாண்டிக்குளம் - பேயாடிகூழாங்குளத்தில் உள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தான வாசலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இது பதவியா (பதுவில்) பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டதாகத் தகவல்கள். பதவியாவில் பெரிய நீர்ப்பாசனக்குளம் ஒன்றும் சிவ தலம் உட்பட பிரசித்தி பெற்ற நவாலயங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேநேரம் தாண்டிக்குளத்துக்கு அடுத்திருக்கும் நொச்சிமோட்டையிலும் ஐந்துதலை நாக வழிபாடு இடம்பெற்றதற்கான அடையாளங்கள் உள்ளன. இந்த நாகசிலையில் 'மணிணாகன் பள்ளி' என்ற தமிழ் பிராமிக் கல்வெட்டு இருப்பது பேராசிரியரால் உறுதி செய்யப்பட்டுள்ளது.



**பேயடிகூழாங்குளம் நாக சிலை.**

ஐந்துதலை நாக வழிபாட்டிடத்துக்கு அருகே இலிங்க வழிபாட்டுத் தலம் அருவி ஆற்றை மறித்துப் பல இடங்களில் நீர்த்தேக்கங்கள் (குளங்கள்) உருவாக்கப்பட்டுள்ளன. அந்தக் குளங்களின் கட்டுக்களிலும் குளத்தின் அருகிலும் ஐந்துதலை நாகசிலைகளும் குளங்க ளுக்கு அண்மையாக இலிங்க வடிவங்களும் இருந்ததற்கான அடையாளங்களும் உள்ளன. அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தில் பல வடிவங்களில் இலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளமைக்கும் சான்றுகள் உள்ளன.



*சமளங்குளம் மலைச்சாரலில் எண்கோண மூலஸ்தானம்*

**எண்கோண மூலஸ்தானம்**

சைவ ஆலயங்களில் எண்கோணத்தில் மூலஸ்தானம் கட்டப்படுவது வழக்கம்.

வழமையாக ஆலயத்தின் அமைப்புக்கேற்ப இலிங்கங்கள் வடிவமைக்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சம்மளங்குளம் ஒரு எல்லைக் கிராமமாகும்.

பலவித காரணங்களினால் மக்கள் இங்கிருந்து இடம் பெயர்வதும் மீளக் குடியேறுவதும் வழக்கமாக இருந்துள்ளது.

சமளங்குளத்தில் ஐந்துதலை நாகசிலை இருக்கும் மலைச்சாரலில் எண்கோணத்தில் கட்டப்பட்ட மூலஸ்தானத்தின் கீழ்ப்பகுதி சிதைந்த நிலையில் உள்ளது. இதன் மேற்பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

மூலஸ்தானத்தின் மூலைப் பகுதிகள் மிகவும்,செம்மையாகக் கட்டப்பட்டுள்ளன.

மூலஸ்தானம் இருந்த இடத்தில் தொல்லியல் பிரிவினர் ஆய்வுகளை மேற்கொண்டிருந்ததாகவும், கிராம மக்களின் எதிர்ப்புக் காரணமாக ஆய்வுகள் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குப்பின்னர் இந்த மூலஸ்தானம் திருத்திக் கட்டப்படவில்லை. ஆனால் இங்கிருந்த சிலைகள் வேறு இடங்க்ளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

(தொடரும்)




### கதை

ரவுடிகளைச் சுட்டுத்தள்ளும் பொலிஸ் அதிகாரி விக்ரமாதித்தம் (மாதவன்) ரவுடி, வேதாவுக்கும் (விஜய் சேதுபதி) இடையில் நடக்கும் விவகாரமே விக்ரம் வேதா. பல கொலைகளைச் செய்துவிட்ட வேதாவையும் சுட்டுக் கொல்வதற்காக விக்ரம் தேடுகிறார். முதல் காட்சியிலே வேதாவின் கூட்டாளிகளைக் கொன்று குவிக்கிறது விக்ரம் குழு. தலைமறைவாக இருக்கும் வேதாவைக் கண்டுபிடித்துக் கொல்வதற்குப் படை தயாராகும் போது, வேதாவோ தானாகவே வந்து சரணடைந்து விடுகிறான். படம் களைகட்டுகிறது. தன் நண்பனும் சக பொலிஸ் அதிகாரியுமான சைமனை (பிரேம்) கொன்றவனைத் தேடும் விக்ரமாக நாமும் மாறிப்போகிறோம். இறுதியில் நல்லவன் யார், கெட்டவன் யார்? இருவரும் என்ன ஆனார்கள்? என்ற கேள்விகளுக்கு விடையளிக்கிறது படம்.

### வழமைக்கு மாறிய பொலிஸ், ரவுடி

கனகச்சிதமான திரைக்கதையோடு படத்தை இயக்கியுள்ளனர் புஷ்கர், காயத்ரி. ஆரம்பத்திலேயே விக்கிரமாதித்தன் - வேதாளம் கதையை விளக்கி, இது வழக்கமான சினிமா இல்லை என்பதைப் புரியவைத்துவிடுகின்றனர். வழக்கமான பொலிஸ் ரவுடி கதை என்றாலும், திரைக்கதை வடிவமைப்பில் புதுமையைப் புகுத்தியிருக்கிறார்கள். மாதவன் - விஜய் சேதுபதி இடையே நடக்கும் ஆடு புலியாட்டம், கதை சொல்லி, தீர்வு கேட்பது, அந்தத் தீர்வை ஏற்கெனவே செயல்படுத்தி இருப்பது, தர்மம், உணர்வு என நியாயத்தின் பக்கங்களைப் பகிர்வது எனச் செம்மையாகச் செதுக்கபட்ட திரைக்கதை திரையில் விரிகிறது. ஊகிக்கமுடியாத திடீர்த் திருப்பங்களை, வித்தியாசமான கோணங்கள் மூலம் நம்பத்தகுந்த வகையில் காட்சிப்படுத்தியிருப்பதும் சிறப்பு.

### பாத்திரப் படைப்பு

"பொலிஸ் மகன் பொலிசாத்தான் இருப்பான். கிரிமினல் மகன் கிரிமினலாத்தான் இருப்பானா? அப்ப காந்தி அப்பா காந்தியா, கோட்சே அப்பா கோட்சேவா?" என்பது போன்ற மணிகண்டனின் வசனங்கள் கவர்கின்றன. எல்லைக்கு உட்பட்டுத் துப்பறிவது, நியாயத்தைவிட சட்டத்துக்கு உட்பட்டுக் கடமை புரிவது, ஆதாரங்களைக் கண்டறிந்து தர்மத்தின் பக்கம் நிற்பது என நேர்த்தியாக நடித்திருக்கிறார் மாதவன். குருதிதெறிக்கச் சுட்டுத் தள்ளுவது, மனைவி ஷ்ரத்தா ஸ்ரீநாத்திடம் காதலில் லயிப்பது, விஜய் சேதுபதியுடன் மோதுவது எனக் காட்சிகளில் மிரட்டியிருக்கிறார்.



விஜய் சேதுபதியின் வருகைக்காக முழுத் திரையரங்கமும் காத்துக் கிடக்கிறது. மிடுக்கான தோற்றம், கம்பீரமான நடிப்பில் மாதவன் அசத்தி நிற்பதைத் தனது சின்னச் சின்ன உடல் அசைவுகளிலேயே விஜய் சேதுபதி ஈடு கட்டிவிடுகிறார். அவரது குரலும் அசட்டையான சேஷ்டைகளும் சுவாரசியத்தைக் கூட்டுகின்றன. வடையைக் கையில் ஏந்தியபடி பொலிஸ் நிலையத்துக்குள் நுழையும் காட்சி தொடங்கி படம் முழுதும் உடல்மொழியால் வசீகரிக்கிறார் சேதுபதி.

கொட்டன் புடவை, மைதீட்டிய கண்கள், பக்குவமான நடிப்பு என வழக்கறிஞராகவும், இல்லத்தரசியாகவும் ஷ்ரத்தா ஸ்ரீநாத் அசத்துகிறார். கணவன் மாதவனிடம் காதல் கொள்ளும் மனைவியானாலும் நியாயத்துக்காகக் குரலை உயர்த்தி வாதாடும்போது கவனிக்க வைக்கிறார்.

### ஒளிப்பதிவு, இசை, ஒரு சில குறைகள்

ஆரம்பத்தில் இடம்பெறும் விக்கிரமாதித்தன்-வேதாளம் கதையின்போதே இசையமைப்பாளர் சாம்.சி.எஸ். தனது முத்திரையைப் பதித்துவிடுகிறார். பாடல்கள் இனிமையும் துள்ளலுமாக ஒலிக்கின்றன.

சென்னை வியாசர்பாடியை சமீப கால தமிழ் சினிமாக்கள் உள்ளும் புறமுமாகக் காட்டிவிட்டாலும்கூட, அந்தப் பழுதடைந்த குடியிருப்புகளில் இன்னும் காட்சிப்படுத்தப்படாத எதார்த்த அழகு ஏராளமாக உள்ளது என்பதை பி.எஸ். வினோத்தின் ஒளிப்பதிவு நிரூபிக்கிறது.

**கவனம் ஈர்க்கும் படம்**

கதிர் ஏன் சென்னை வந்தார்? சேட்டா ஹரிஷ் என்ன ஆனார்? மாதவன் ஏன் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவை எடுத்துவிட்டு காரணம் தேடுகிறார்? என்பது போன்ற கேள்விகளுக்கு விடை தெரியவில்லை. சுட்டுத்தள்ளப் புறப்படும் பொலிஸ் படையின் குறுக்கே விஜய் சேதுபதி அலட்சியமாக நடந்து செல்கையில் ஒரு பொலிஸ் கூட அவரைக் கண்டுபிடிக்கவில்லை. காவலரணில், சோதனையில் சிக்காமல் விஜய் சேதுபதி கடத்தல் பொருளைக் காரில் கொண்டுவருகிறார். இப்படியான ஒன்றிரண்டு குறைபாடுகள் இருப்பினும், காட்சிப்படுத்திய விதம், பாத்திரத் தேர்வு, பார்ப்பவர்களின் புத்திசாலித்தனத்தைப் பரிசோதிக்கும் வகையிலான திரைக்கதை ஆகியவை மூலம், கவனம் ஈர்க்கின்றது விக்ரம் வேதா.






### கதை

அன்பான குடும்பம், நட்பு என்று வளரும் ஹிப்ஹாப் ஆதிக்கு சிறு வயதில் இருந்தே இசைதான் கனவு. மகனின் விருப்பத்தை உற்சாகப்படுத்தினாலும், அவன் படித்து எதிர்காலத்தில் நல்ல வேலையில் இருக்கவேண்டும் என்பதே அப்பா விவேக்கின் ஆசை. நண்பன் விக்னேசுடன் சேர்ந்து பள்ளியில் குறும்புத்தனம், வம்பிழுப்பது என்று வலம்வரும் ஆதிக்கு, சக மாணவி ஆத்மிகா மீது ஈர்ப்பு ஏற்படுகிறது. ஆத்மிகா வேறு பள்ளிக்கு மாறியதும், ஆதி படிப்பு, இசை என்று கவனம் செலுத்துகிறார். வளர்ந்து கல்லூரியில் சேர்ந்த போது, ஆத்மிகாவை மீண்டும் சந்திக்கிறார். நட்பு காதலாகிறது. அந்தக் காதலால் ஏற்படும் பிரச்சினை என்ன? இசைதான் வாழ்க்கை என்று பயணித்துக் கொண்டிருந்த அவரின் இலட்சியம் என்ன ஆனது? என்பதுதான் மீதிக் கதை.

### ஆதியின் ஆளுகை

இசையமைப்பாளரான ஹிப்ஹாப் ஆதி, நடிகராகவும் இயக்குநராகவும் இதில் அறிமுகமாகியிருக்கிறார். அவர் தன் வாழ்க்கையில் இசைத்துறையில் கால்பதிக்க ஆரம்பித்த காலத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களில் கலந்த கற்பனைதான் இந்தக் கதை என்பதைப் பட ஆரம்பத்திலேயே விளக்கி விடுகிறார். அவரது சுயசரிதையாகவும் தந்தை உறவு, கடந்துபோகும் காதல், அதில் எழும் பிரச்சினை, கல்லூரி வாழ்க்கை, பகிடிவதையின் கொடுமை, சகோதர உறவு என்பவற்றுடன் கற்பனைகள் கலந்தும் திரை வடிவம் பெற்றுள்ளது மீசைய முறுக்கு. கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, இயக்கம் எனச் சகல வேலைகளும் அவருடையதே.

### பாத்திரப் படைப்பு

நாயகனைவிட விவேக் கதாபாத்திரம்தான் அதிகம் கவனம் ஈர்க்கிறது. சிறுவயதில் பிள்ளைகளுக்குப் படிக்க 'பொன்னியின் செல்வன்' கொடுப்பது, மகன் சென்னைக்குச் செல்லும்போது அவனுக்குத் தெரியாமல் அவனுடைய பேசில் பணம் வைப்பது, அழகான தமிழ் உச்சரிப்பு, பாரதியார் பாசம் போன்றன அழகு. மகனின் விருப்புக்குத் தடையாக இல்லாமல், அதேநேரம் அவனது எதிர்காலம் நல்லதாக அமைய வேண்டும் என்று அக்கறை காட்டும்போது "தோல்வின்னாலும், வெற்றின்னாலும் மீசைய முறுக்கு" என்று உத்வேகப்படுத்தும்போதும் தனித்து நிற்கிறார்.

விவேக், விஜயலட்சுமி கதாபாத்திரங்கள் தவிர நாயகி ஆத்மிகா, ஆர்.ஜே.விக்னேஷ், ஆனந்த்ராம், அன்பு, கோபி, சுதாகர் என்று ஆதியின் கூட்டாளி பட்டாளங்கள் பெரும்பாலும் புதிய முகங்கள். ஆதியின் இசை அல்பத்தை வெளியிடும் இடத்தில் மா.கா.பா. ஆனந்தும் கைதட்டல் பெறுகிறார். யு.கே.செந்தில்குமார் கிருதிவாசனின் ஒளிப்பதிவும் அருமை.

ஆட்டம், பாட்டம் என்று சுற்றும் பாடல் காட்சிகளில் ரசிக்கவைக்கிற அளவுக்கு ஆதியின் நடிப்புக் காட்சிகள் சரியாக ஒட்டவில்லை. நடிகனாக பல இடங்களில் ஒப்பேற்றவே செய்திருக்கிறார். அடிக்கடி வரும் பாடல்களும், ஒரேமாதிரியாகப் படமாக்கப்பட்டிருக்கும் விதமும் சலிப்பை ஏற்படுத்துகின்றன. நகைச்சுவைக் காட்சிகள் படத்தை நன்கு தாங்கிப் பிடிக்கின்றன. கண்டதும் காதல், பகிடிவதை, சாதிப் பிரச்சினையால் காதல் முறிவு, இசை முயற்சியில் சந்திக்கும் அவமானம் என்பது போன்ற பழகிப்போன காட்சிகள், படத்தின் விறுவிறுப்பையும், எதிர்பார்ப்பையும் குறைத்துவிடுகின்றன. பல்வேறு சம்பவங்களின் தொகுப்புப்போல இருப்பதால், சீரான ஒரு கதையோட்டம் கொண்ட படமாக இல்லை. என்றாலும், கல்லூரிப் பருவத்தினரைக் கவரும் காட்சிகளை அமைத்த வகையில், ஆதி முறுக்கிக் கொள்ளலாம் மீசையை!



# விலங்குக் கடத்தலில் சூடு பிடிக்கிறது கறுப்புச் சந்தை

பிரகாஸ்

சில மணிநேரத்தில் விதியையே முடித்துவிடும் பாம்பு விஷம் பல்வேறுபட்ட நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. விஷத்தை விஷத்தால் முறிக்கலாம் என்பார்களே அது இதுதான். வெளிநாடுகளில் பாம்பு விஷத்தை உற்பத்தி செய்வதற்கு என்று பல பண்ணைகள் உள்ளன. குறிப்பாக அமெரிக்காவின் கலிபோர்னியா போன்ற மாகாணங்களில் பாம்பு விஷத்தின் விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. அங்கிருந்து உலகின் பல பாகங்களுக்கும் பாம்பு விஷம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ராஜ நாகத்தின் விஷத்துக்குக் கறுப்புச் சந்தையில் பெரிய கிராக்கி உள்ளது. பாம்பு விஷத்தைத் தங்கத் திரவம் என்றும் சொல்வார்கள். அவ்வளவு பெறுமதி வாய்ந்தது அது. பாம்புகளுக்கு மட்டுமல்ல. அருகிவரும் உயிரினங்கள் பலவற்றுக்கும் கறுப்புச் சந்தையில் பெரும் கிராக்கி உள்ளது. இதனால் அவற்றைப் பிடித்து விற்பனை செய்வதற்கு என்று பல வலைப்பின்னல்கள் பன்னாட்டு அளவில் இயங்குகின்றன. அவ்வாறான குழுக்கள் மேற்கொண்ட கடத்தல் முயற்சிகளில் சில முறியடிக்கப்படு வதுண்டு. அந்த வகையில் இந்த வருடத்தில் முறியடிக்கப்பட்ட சில விலங்குகளின் கடத்தல் முயற்சிகளைப் பற்றிப் பார்ப்போம்.

## கம்போடியாவில் கடலாமை

கம்போடியாவில் கடலாமைகள் கடத்தப்படுவது காலாகலாக நடைபெற்று வருகிறது. அண்மையில் அந்த நாட்டின் கன்டல் மாகாணத்தில் சுமார் 20 கடலாமைகள் இறைச்சிக்காகக் கடத்தப்பட்டமை வனவிலங்குத் திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ஆமைகள் மீட்கப்பட்டன. அருகிவருகின்றன என்று இவை அடையாளமிடப்பட்டாலும் அது கொல்லப்படுவது தொடர்ந்துகொண்டேதான் உள்ளது. அதன் இருப்புக்கு அச்சுறுத்தலான நிலைமை கம்போடியாவில் காலா காலமாக நீடிக்கின் றது.




## 'சிப்ஸ்' பேணிக்குள் ராஜநாகம்

முன்னரே குறிப்பிட்டதைப் போன்று கலிபோர்னியாவில் பாம்புக் கடத்தல்கள் குறைவில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு நடைபெற்ற ஒரு கடத்தல்முயற்சிகடந்தவாரம்முறியடிக்கப்பட்டுள்ளது. 'சிப்ஸ்' வைத்து வரும் பேணிக்குள் சுமார் 6 அடி நீளமுடைய ராஜநாகத்தை அடைத்துக் கடத்தியுள்ளார்கள். சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய குழுவொன்றைச் சோதனை செய்தபோது இந்தக் கடத்தல் பிடிபட்டுள்ளது.




## கண்கள் கட்டியபடி கடத்தப்படும் கழுகுகள்

பாகிஸ்தானில் கழுகுகள் கடத்தப்படுவது அமோகமாக நடைபெற்று வருகிறது. அந்த நாட்டின் கராச்சி நகரில் சுமார் பத்துச் சோடி கழுகுகளைக் கடத்தும் முயற்சி அண்மையில் முறியடிக்கப்பட்டது. சுமார் 10 லட்சம் ரூபா பேரம் பேசி இந்தக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.




## கூடைக்குள் உராங்குட்டான்

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா நகரில் கூடை ஒன்றுக்குள் வைத்துக் கடத்தப்பட்ட சிறிய உராங்குட்டான் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. சுமார் 25 ஆயிரம் டொலர்கள் பேரம்பேசி கடந்த 12ஆம் திகதி இந்தக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று இந்தோனேசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர். ஒரு குழந்தையைக் கொண்டு செல்வதைப்போல எக்கச்சக்கமான ஏற்பாடுகளுடன் இந்தக் கடத்தல் நடைபெற்றுள்ளது.




## பச்சை உடும்புகள்




படத்தைப் பாத்ததும் ஓணான்கள், பச்சோந்திகள் எண்டு நினைச்சிருப்பியள். அட உள்ளதச் சொன்னா என்னங்கோ இது பச்சை உடும்புகள். கொஸ்டொரிக்காவில் அரிதாக உள்ளன. உடும்பு இறைச்சிக்கு தனி மவுசு உள்ளது என்றாலும், இந்தப் பச்சை உடும்புகள் செல்லப்பிராணிகளாக வளர்ப்பதற்காகவே கடத்தப்படுகின்றன. அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களில் இதுவும் ஒன்று. இதைப் பெருக்குவதற்காகக் கொஸ்டொரிக்காவில் அரசால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


## பிலிப்பைன்ஸில் மின்சார மீன்கள்

'ஈல்கள்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் மின்சார மீன்கள் பிலிப்பைன்ஸில் ஏராளமாக உள்ளன. தனது உடலில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திறன் இந்த மீன்களுக்கு உள்ளது. பிலிப்பைன்ஸிலேயே இந்த மீன்களின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. இவற்றுக்குக் கறுப்புச் சந்தையில் நல்ல கேள்வி. எனினும் பிலிப்பைன்ஸ் அரசு தனது நாட்டிலிருந்து ஈல்களைக் கடத்துவதைத் தடைசெய்து சட்டமியற்றியுள்ளது. ஆனால் கடந்த 3ஆம் திகதி ஹொங்கொங்கை நோக்கி கடத்தப்படவிருந்த பெரும்தொகையான ஈல்கள் அனைத்தும் மீட்கப்பட்டன. போத்தல்கள், பைக்கற்றுக்களில் வைக்கப்பட்டு அவை கடத்தப்பட்டன. சுமார் 22 ஆயிரம் யூரோ பெறுமதியுடையன என்று சொல்லப்படுகிறது.



# பாடசாலையிலா ரியூட்டறியிலா முதியோரை கனம் பண்ண அறிவூட்டுவது?

அம்மா வாங்கோ... மாமா வாங்கோ... தாத்தா வாங்கோ இங்க இருக்கலாம். இடம் இருக்கு என்று எப்போதும் கூறிநிற்பதே ஆரோக்கியமான சந்ததிக்கு அழகு.





தொல்புரம் சி.கதிர்காமநாதன்

பேருந்து ஓடத் தொடங்கிய போதிலிருந்து நடத்துநர் கூப்பாடு போடத் தொடங்கிவிட்டார்.

"பின்னுக்குப் போங்கோ... பின்னுக்குப் போங்கோ..."

யாரும் பெரிதாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"ஜேர்மன் போங்கோ...
கனடா போங்கோ...
சுவிஸ் போங்கோ..." என்று சொல்லியிருந்தால், சனங்கள் சொன்னது கேட்டிருப்பார்கள். அதை விட்டுப் போட்டுச் சும்மா நெடுகலும் "பின்னுக்குப் போங்கோ... பின்னுக்குப் போங்கோ..." என்றால்...?

இப்போதுதான் இந்தப் பேருந்து தொல்புரம் கிராமத்தின் ஊடாக மாவடி, வட்டுக்கோட்டை போய், செட்டிமடம் போய், யாழ்ப்பாணம் போக ஆரம்பித்திருக்கின்றது. அதிக பொது மக்களுக்கு இது நன்மையாக இருந்தது.

டச்சு வீதி ஓடி இப்போது வண்டி இதோ வட்டு. பிரதான பாதையில் ஏறி ஓடத் தொடங்கியது. வண்டியின் இருக்கைகளைப் பள்ளி மாணவர்கள் பிடித்திருந்தார்கள். அநேகர் பிரதான வீதியில் அமைந்துள்ள இரண்டு பெரிய பாடசாலைகளிலும், மற்றவர்கள் யாழ். நகர உயர்தரப் பாடசாலைகளினும் படிக்கும் மாணவர்களாக இருந்தார்கள்.

அவர்களுடைய வண்டிப் பயணம் குறுகிய தூரமாக இருந்தாலும், இருக்கைகளில் இருந்து கதையளந்து வருவது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனக்கு இடையிடையே தலைச் சுற்றல் வந்து போனது. நல்லவேளையாக நான் இருக்கையில் இருந்துவிட்டேன். வைத்தியசாலைக்குச் சென்று குருதிப் பரிசோதனை செய்யவேண்டியிருந்தது. என்னைப் போல வைத்தியசாலைக்குச் செல்வதற்காக வண்டியில் ஏறிய பலர், நெரிசல் காரணமாக உள்ளே வருவதற்குச் சிரமப்பட்டார்கள். கம்பிகளைப் பிடித்தபடி நின்று தள்ளாடினார்கள்.

நடத்துநரின் பரிதாபகரமான "ஏலாத ஆக்களுக்குச் சீற்றைக் குடுங்கோ..." என்ற குரலுக்கு மதிப்பளித்துச் சிலர் இடம் கொடுத்தார்கள். வண்டி, நிறுத்தங்களில் நின்று புறப்படும் போதெல்லாம் நடத்துநர் தனது அவலக் குரலைத் தொடர்ந்தும் எழுப்பினார்.

"பள்ளிக்குடப் பிள்ளையள் எழும்பிப் பெரியாக்களுக்கு, ஏலாத ஆக்களுக்கு இடத்தைக் கொடுங்கோ..."

என்ன கத்தியும் என்ன...?

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் என்ன கூப்பாடு போட்டும் இந்தத் தமிழ் மக்களைக் காப்பாற்ற எந்த நாடும் வராது போயின. அப்பாவி மக்கள் ஏராளமாக மூச்சடங்கினர். நிலமை இப்படியிருக்க பாவம் இந்த வயதுபோன நோயாளிகளான பயணிகளை யார் காப்பாற்ற வரப் போகிறார்கள்...?

---

வட்டு. - யாழ். கல்லூரியின் மாணவர்கள் சிலர் இறங்க, நின்று கொண்டிருந்தவர்களுக்கு இடம் கிடைத்தது. இனிமேல் யாழ்ப்பாணம் வரும் வரையும் இடம் கிடைப்பது என்பது கஷ்டமான காரியம் தான். இருக்கை கிடைக்க வேண்டும் என்றால், அரசியல்வாதிகள் போன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர வேண்டியதுதான். அப்படியாக இருக்கை கிடைத்தாலும்கூட அது சாரதியின் இருக்கையாகத்தான் இருக்குமே தவிர ஏனையவை அனைத்திலும் வேர் பாய்ச்சியபடி மனிதர்கள்.

வண்டி ஓடினால் என்ன? மாகாணசபை நடந்தால் என்ன? எனக்கெதிரே தொடராக இருந்த இருக்கையின் வரிசையில், உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் இருவர் தமக்குள் சீண்டிக் கொண்டும், குறும்பாகக் கதைத்துக் கொண்டும் அமர்ந்திருந்தார்கள்.

வண்டி யாழ்ப்பாணம் நோக்கி, செட்டிமடப் பாதையில் திரும்பியபோது, எதிர்ப்பக்கத்திலிருந்து நடுத்தர வயதுப் பெண்ணொருவர் கையில் குழந்தை யுடன் வண்டியை நிறுத்தும்படி சைகை செய்தபடி ஓடி வந்தார்.

பம்பலாகக் கதைத்துக் கொண்டிருந்த அந்த இரண்டு மாணவிகளும் இந்தக் காட்சியைப் பார்த்தார்கள். சாரதி வண்டியைச் சட்டென நிறுத்தி ஓடி வந்த பெண், குழந்தையை உள்ளே ஏற்றினான். வேகமெடுத்தது வண்டி.

தாயும் குழந்தையும் உள்ளே வர இருக்கையில் இருந்த மாணவிகள் சட்டெனக் கண்களால் இருவரும் தமக்குள் சமிக்ஞை செய்தார்கள்.

"அடியே ......(தோழியின் பெயர்) எங்கட சீற்றுக்கு ஆப்பு வருகுது... கவனம்"

அவசரமாக இருவரும் மடியில் வைத்திருந்த தமது புத்தகப் பைகளின் மேல் தலைகளைத் தீக்கோழிகள் போலப் புதைத்துக் கொண்டார்கள். நடத்துநர் மீண்டும் அவலக் குரல் கொடுத்தார். "பிள்ளையள் எழும்பிச் சீற்றைக் குடுங்கோ..."

கடைசியில் யாரோ ஒரு பயணி எழுந்து தனது இருக்கையை அவர்களுக்குக் கொடுத்தார்.

---

சரி! இனி விசயத்துக்கு வருவோம். நானும் இந்த விசயத்தைக் கெதியா முடிக்க வேணும். காரணம் வண்டிப்பயணத்தின் முடிவிடம் வருவதற்கு இன்னமும் சொற்ப இடம்தான் இருக்கின்றது.

நாம் நாளாந்தம் காணுகின்ற விடயம் தான் இது. வண்டியில் வயது போனவர்கள், நோயாளிகள், கர்ப்பவதிகள் எனப் பலதரப்பட்டவர்கள் ஏறும்போது அவர்களும் சம பிரச்சினையையே எதிர்கொள்கிறார்கள்.

ஆனால் இப்படியானவர்களுக்கு வண்டியில் கட்டாயம் இடம் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இல்லை. வண்டியில் இருக்கைகளுக்குப் பக்கத்தில், மதகுருமார்களுக்கு, கர்ப்பவதிகளுக்கு இவ்விடம் ஒதுக்கப்பட்டுள்ளது எனப் பேரூந்துகளில் அறிவித்தல்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். இவை ஒழுங்காகக் கடைப்பிடிக்கப் படுகின்றனவோ தெரியவில்லை.

இடம் கொடுப்பது, தான் பிடித்த இடத்தைக் கஷ்டப்பட்டுப் பிடித்த பதவியை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பது இலேசான காரியமல்ல. இது மனம் சார்ந்த, நடத்தை சார்ந்த விடயம். இப்படியான நேரங்களில் வண்டியில் இருக்கும் இள வயதினரின் இருக்கைகள்தான் பெரிதும் எதிர்பார்க்கப் படுகின்றன. காரணம் கணிதம், விஞ்ஞானம், தமிழ் மொழி என்பதோடு மட்டுமல்லாமல் 'முதியோருக்கு உதவுங்கள்' என்றும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். என்ன செய்வது? சொல்லிக்கொடுத்தால் மாத்திரம் எல்லாம் வந்துவிடுமா?

தாயும் பிள்ளையும் ஏறுவது தெரிந்த பின்னரும் தாமாக மனம் விரும்பித் தமது இடத்தைக் கொடுக்க அவர்கள் ஏன் முன் வரவில்லை?

மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பக்குவம் அவர்களுக்கு ஏன் உருவாக வில்லை...?

5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் இவர்களுக்கு இது பற்றிசொல்லிக்கொடுக்க வில்லையா? அல்லது ஆசிரியர்களும், அனுசரணையாளர்களும் சொல்லிக் கொடுக்க மறந்துவிட்டார்களா? அல்லது நாம் படிக்கும் பாடசாலையின் 'ரேஞ்சுக்கு' இதெல்லாம் தேவையில்லாதது என்று எண்ணிவிட்டார்களோ?

> நாளாந்தம் காணுகின்ற விடயம் தான் இது. வண்டியில் வயது போனவர்கள், நோயாளிகள், கர்ப்பவதிகள் எனப் பல தரப்பட்டவர்கள் ஏறும்போது அவர்களும் சம பிரச்சினையையே எதிர்கொள்கிறார்கள். இப்படியானவர்களுக்கு நாம் வண்டியில் இடம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

---

அவர்கள் தமது இருக்கைகளைத் தக்க வைத்த சந்தோசத்துடன் மறுபடியும் கதையைத் தொடர்ந்தார்கள்.

அவர்கள் இப்படி நடந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்... தாயும் பிள்ளையும் ஓடி வருகிறார்கள். வண்டி நிறுத்தப்படுகிறது. உள்ளே ஏறுகிறார்கள். பிள்ளைகள் பார்க்கிறார்கள். இருக்கைகளை விட்டு எழுந்து நிற்கிறார்கள். "நிற்கிற ஆள்கள் வழியை விடுங்கோ. அம்மாவும் பிள்ளையும் இந்த இடத்தில் வந்து இருக்கட்டும்" அவர்கள் வருகிறார்கள்.

தாயையும் குழந்தையையும் தாமிருந்த இருக்கையில் அமர வைக்கிறார்கள். பிள்ளைகள் முகத்தில் உதவி செய்த திருப்தி. தாய் நன்றியுடன் பிள்ளைகளைப் பார்க்கின்றார். 'நல்ல பிள்ளைகள்... நல்லாய்ப் படிக்க வேணும்..." அவர் மனதுக்குள்.... ஏன் இப்படி நடக்கவில்லை.?

"அம்மா வாங்கோ... மாமா வாங்கோ... தாத்தா வாங்கோ, இங்க இருக்கலாம். இடம் இருக்கு" என்று எப்போதும் கூறிநிற்பதே ஆரோக்கியமான சந்ததிக்கு அழகு. இல்லாவிடில் நாளையும் வண்டி ஓடும். அன்றைக்கு இவர்களுக்கும் இதுவே நிலை...!

# அன்று 'பெய்ன்ற் பிறஸ்' இன்று 'பெய்ன்ற்' நாளை 'பெய்ன்ற் 3D'

ஜோதா நகுலதாஸ்

இங்கு 'பெய்ன்ற்' என்று கூறவருவது கட்டடச் சுவர்களுக்கோ, மரத்தளபாடங்களுக்கோ, உலோகப் பொருள்களுக்கோ நாம் பூசிக் கொள்ளும் தீந்தையை அல்ல. அதையும் ஆங்கிலத்தில் 'பெய்ன்ற்' என்றே அழைக்கின்றோம். ஆனால் இந்தப் 'பெய்ன்ற்' கணினிகளில் இருக்கின்ற மென்பொருளைக் குறிப்பது. அதாவது கணினிகளுக்கு உயிர் கொடுத்து இயக்கம் தரும் 'மைக்ரோ செவ்ற் வின்டோஸ்' இன் அனைத்துப் பதிப்புக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. கணினித் திரையில்கூட வரைந்து நிறந் தீட்டலாம் எனும் சாத்தியத்தை ஏற்படுத்தியிருந்த ஆரம்பகர்த்தாவே இந்தப் 'பெய்ன்ற்'. ஆனால் எதிர்வரும் காலங்களில் இந்தப் 'பெய்ன்ற்' செயலியை நாம் கண்டுகொள்ள முடியாத காரணங்கள் தோற்றம் கொண்டுள்ளன. அதாவது இனிவரும் 'வின்டோஸ்' களில் அதற்குப் பதிலாக 'பெய்ன்ற் 3டி என்பதாக பரிணாமம் கொண்டு, நிறைந்த மாற்றங்களுடனும் தொழில்நுட்ப வசதிகளுடனும் பாவனைக்கு வரவிருக்கின்றது.

'வின்டோஸ்' இன் முதல் பதிப்பான 'வின்டோஸ் 1.0' விலேயே இந்த மென்பொருளின் முதல் பதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அது வேறொரு கூட்டு நிறுவனத்தின் 'பெய்ன்ற் பிறஸ்' எனும் மென்பொருளின் உரிமம் பெற்ற பதிப்பாக இருந்தது. பின்னர், அதுவே 'வின்டோஸ் 3.0'வில் 'பெய்ன்ற் பிறஸ்' என்றும் பதிப்பாகியிருந்தது. 'வின்டோஸ் 95' இலும் அதற்குப் பிந்தைய பதிப்புகளிலும் இதனுடைய பெயர் 'பெய்ன்ற்' என்றே பயன்படுத்தப்பட்டு வந்தது. அதுவே நீடித்த காலமாகப் (இன்றுவரை) பயன்படுத்தப்பட்டும் வருகிறது. கணினியில் வரைகலைத் தொழில்நுட்பத்தின் அடிப்படையாகவும், ஆரம்பமாகவும் அமைந்துள்ள இதில் வரைதல் கருவிகள் (drawing tools), வர்ணம் தீட்டும் கருவிகள் (painting tools) மாத்திரமன்றி தேவைக்கு ஏற்ப வரைந்தவற்றை அளவுபடுத்தும், மாற்றியமைக்கும் வசதிகள் என்பனவும் புகுத்தப்பட்டிருந்தன.

இந்தப் 'பெய்ன்ற்' நாம் கொள்வனவு செய்யும் கணினிகளில் 'வின்டோஸ்' மென்பொருள்களுடன் இலவசமாகவே இதுவரை காலமும் கிடைத்து வந்தது.

இனிப் புதிதாகப் பல வசதிகள் புகுத்தப்பட்டு வரவிருக்கின்ற 'பெய்ன்ற் 3டி'யும் அவ்வாறே எமக்குக் கிடைக்குமா...? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். 'மைக்ரோ சொவ்ட்' நிறுவனம் 'பெய்ன்ற்' செயலியின் பயன்பாட்டை நிறுத்த உள்ளதாகக் கடந்த திங்கட்கிழமை அறிவித்ததிலிருந்து பாவனையாளர்கள் மத்தியில் இது போன்ற பலவித செய்திகள் உலாவரத் தொடங்கிவிட்டன. கணினித் திரையில் இனி முப்பரிமாண வரைதல் மென்பொருளாகவே குறித்த 'பெய்ன்ற் 3டி' வெளி வரவிருக்கின்றது. இதுபற்றி 'மைக்ரோ சொவ்ற்' என்ன கூறுகின்றது...? "பெய்ன்ற் சேவையை மேம்படுத்தும் திட்டங்கள் எதுவும் இல்லை. வருங்காலத்தில் 'பெய்ன்ற்' சேவை நீக்கப்படலாம்" என்கின்றது. இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால், 'பெய்ன்ற்' சேவையைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தவர்கள், வருபவர்கள் இனி 'பெய்ன்ற் 3டி' சேவையைக் கொண்டே தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.




# பண்டாரவன்னியன் 6



இராம. இராகவா

"எம்தோழர்கள் உயிர்பிரிந்தால்
துவண்டு விடுவோமா...?

தாயின் முலையறுக்கும்
தனயர்களாய் மாறிநிற்கும்
ஈனர்கள் எம்மினத்தில்
இருப்பதால் நிலை தளர்ந்தோம்.

மண்டூகமாய் மாறிநிற்கும்
அவர் மண்டைகளை உடையுங்கள்...
என் நெஞ்சம் அவாவுகிறது
அவர் குருதி கேட்டு"

பொறி பறந்த உரைதனை
கேட்டிட்ட வன்னியர்கள்
வெறி கொண்டு
ஆர்ப்பரித்தர்
அச் செய்திதனை
காற்றெடுத்துப்போனது காண்..

குருவி நாச்சியாருக்கு
கூடாரம்
அனலெடுக்கத் தொடங்கியது.

நிமிர்ந்து பார்த்தான்
வன்னியன்
"குருவி...!"
அழைத்த குரல்
கேட்ட மறுநொடி
"ஐயனே...!"
பதில் எழுந்து ஓய்ந்தது.

கூடாரத் திரை விலக்கி
அடிவானை நோக்கிற்று
அவன் சிவந்த விழிகள்..

"விடிவெள்ளி தோன்ற
இன்னும் ஒரு சாமம்
மீதமாய்க் கிடக்கிறது"
மூளை கணக்கிட்டுக்கொள்கிறது.

"குருவி!
இவ்விடம் விட்டு நகர்ந்துவிடு
அருகினில் எதிரிகள்.
நானும் என் படைகளும்
உயிரிருக்கும் வரை
மண்ணுக்காக வாளெடுப்போம்
நீ புறப்படு
எங்கேனும் கலந்துறைய
வழி தேடு.
ஆதவன் உதிக்க
ஒரு சாமந்தான் உள்ளது.
ம்...
யாரங்கே...!"
மழை விட்டதுபோல்
அமைதியானது கூடாரம்

"அரசே..."
காவலன் உள்ளே
முகம் நீட்டினான்

"நான் அழைத்ததாய்
தளபதிகளிடம் கூறு.
இன்னும் ஒருநிமிடத்தில்
இங்கிருக்க வேண்டும்"
சிட்டாய்ப் பறந்தான்
காவலன்.

நாச்சியின் முகத்தில்
தீ
கொழுந்து விட்டெரிந்தது.
"நான் ஈனப்பிறவி என
எடுத்தெறிந்து விடுதல்
அழகல்ல ஐயனே!
அஞ்சனம் பூசிய விழியில் கோபம்
குடியேறாது என்ற எண்ணமா?
பகை விரட்ட என் கரத்தில்
பலமில்லை
என்றும்
அடுப்பூதி அடிசில் படைக்கமட்டும்
என்னை வழிப்படுத்தல்
நியாயமா..?"
கண்கள் சிவப்பேற, ஏற குரலில்
சினம் தலையெடுத்தாடியது.
"நான் எதற்குப் போகவேண்டும்
பேடிபோல் ஒதுங்கவேண்டும்
பெண் என்ற நினைப்பால்
என்னை ஒதுக்குதல் தகுமோ...?
வாள் பிடிக்கத் தெரியாதா ?
வேல் எறியத் தெரியாதா ?
பரி ஏறிக் களந்தனில்
பகை விரட்டத் தெரியாதா ?"
கொல்லனது உலைக்களத்து
வெப்பமாய் வந்து விழுந்தன
குருவியின் வார்த்தைகள்...
திரும்பிப் பார்த்தான்

## குருவியின் வடிவம் அழகு காட்டிற்று...



வன்னியன்
பெருமிதம் அவன்
கண்களில்
எட்டிப் பார்த்தது
'ஏன் இவள்
உறுமுகின்றாள்...?
விழிகளில் வழிந்த
காதலைக் காணோம்...!
விடியலைக் கொடுக்கும்
வார்த்தையைக்
காணோம்...!
கொதிக்கும் முகமும்
இறுகும் கரமும்
கொலையைக் கூட
செய்யத் துணியும்
விழிகள் காட்டும்
கோர நடனமும்
அப்பப்பப்பா...
காளிதேவியின் வடிவம்
இதுவோ..." என
எண்ணத் தோன்றும்
வகையில்
குருவியின் வடிவம்
அழகு காட்டிற்று...

(தொடரும்)




# திசையில் இருந்து...

அனார்கலி

## தமிழிலக்கியப் பெருவிழா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் மாகாணத் தமிழிலக்கியப் பெருவிழா நாளை 31ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் (ஓகஸ்ட் 2வரை) நடைபெறவுள்ளது.

இந்த முறை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை, கல்முனை மஹ்மூத்மகளிர் கல்லூரி என்பவற்றில் இந்தப் பெருவிழா நடைபெறவுள்ளதாக மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் தெரிவித்தார்.

விழாவின் முதல்நாள் நிகழ்வுகளில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவும் 2ஆம் நாள் நிகழ்வுகளில் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ்நஸீர் அகமதும் 3ஆம் நாள் நிகழ்வுகளில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ். இராதாகிருஸ்ணனும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சீறிப் பாய்கின்றனர் சிலர்...

கிழக்கில் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்படவிருக்கும் முஸ்லிம் கூட்டமைப்பில் முஸ்லிம் காங்கிரசும் இணைந்து கொள்ள வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கூட்டமைப்பென்றை நிறுவுவதில் முன்னிற்பவரும் முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலியே முஸ்லிம் காங்கிரசுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

"முஸ்லிம்களின் தனித்துவம் காக்க வந்த எமது கட்சியிடம் இப்படியா புலுடா விடுவது?" எனக்கேட்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் "நடக்கக் கூடிய காரியத்தைப்பற்றிப் பேசுங்கள்" எனவும் சீறிப்பாய்கிறார் . "கிழக்கில் உருவாக்கப் போவதாகக் கூறும் முஸ்லிம் கூட்டமைப்புப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. பேரியக்கமான முஸ்லிம் காங்கிரசுடன் தனியாக முட்டி மோதி மூக்குடைபட்டவர்கள் ஒன்று சேர்ந்த கூட்டுத்தான் அது" எனச் சாடியிருக்கிறார் கல்முனையைச் சேர்ந்தவரும் முஸ்லிம் காங்கிரசின் உயர் பீட உறுப்பினருமான ஏ.சீ.யஹ்யாகாஷ்.

'உங்களுக்கு ஏன் ஐயா இப்படிச் சினம் வருகிறது...?' எனக் கேட்பாருமுள்ளனர். காலத்தின் கோலமே இது.

## படையெடுக்கும் பக்தர்கள்...!

கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவம் கடந்த 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தமிழர் பிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான பக்தர்கள் கதிர்காமத்துக்குப் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை பேருந்துகளில் மட்டுமன்றி தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியும் தினமும் பெருந்தொகையான பக்தர்கள் கதிர்காமம் சென்ற வண்ணமுள்ளனர்.

மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று பொத்துவில் மற்றும் அம்பாறையூடாகக் கதிர்காமத்துக்குப் பயணிக்கும் இந்தப் பக்தர்கள் வழியிலுள்ள முக்கிய இந்து ஆலயங்களில் தங்கித் தங்கி வழிபாடுகளைச் செய்தவாறே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

உற்சவம் முடிவடையும் காலப்பகுதியான ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை தினமும் அதற்காக சிறப்புப் பேருந்துச் சேவைகளை மேற்கொள்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.






## கறை படியாத கரம்...!

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் அமைச்சரும் முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சருமான ஏ.ஆர்.மன்சூரின் மறைவு தென்கிழக்கின் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன ஒற்றுமைக்காகத் தனது அரசியல் வாழ்வில் பெரும் பகுதியைச் செலவளித்திருந்த மன்சூரின் உடல், அவரது சொந்த ஊரான கல்முனைக் குடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்று சாய்ந்தமருது, நகரப்பகுதிகள் போன்றவற்றின் அமைந்திருந்த தமிழ் - முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முழுநாளும் மூடப்பட்டிருந்ததுடன் வெள்ளைக் கொடிகளும், இரங்கல் பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

'கறை படியாத கரம் மன்சூர்' எனப்பலரும் தமது அனுதாபச் செய்திகளில் குறிப்பிட்டிருந்தனர். கறைபடியாமல் அரசியல் செய்வது எவ்வளவு இயலாத காரியம்...! இன்றைய அரசியல் வாதிகளுக்கு அதிர்ச்சியளிக்கும் செய்தியல்லவா இது!



## குத்து வெட்டு ஆரம்பம்

வடக்குக் கிழக்கை மையமாக வைத்தும் கல்முனையில் தலைமையகத்தைக் கொண்டும் 25 வருடங்களுக்குமேலாகச் செயற்பட்டு வரும் தொழிற்சங்கமான அகில இலங்கை அரச பொதுஊழியர் சங்க நிர்வாகத்தினுள் குத்துக்களும் வெட்டுக்களும்; தலைதூக்கியுள்ளன.

பதவி ஆசை பிடித்தவர்களெனவும் மோசடிப் பேர் வழிகளெனவும் சுட்டிக்காட்டப்படும் சிலர் நிர்வாகத்தினுள் புகுந்து சங்கத்தைச் சீர்குலைக்க முற்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுமாறு நடந்து கொள்வதன் காரணமாகத் தனக்கான அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிலரைப் பதவிகளிலிருந்து இடைநிறுத்தியுள்ளேன் என்று சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் கூறுகிறார்.

ஆனால், தலைவர், சர்வாதிகாரிபோல் நடந்துகொள்வதாகவும் அவரது தலைமையில் நம்பிக்கையில்லை எனவும் எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

*நிலமை எங்குதான் போய் முடியுமோ...? யாமறியோம் பராபரமே!*

## வீழ்ந்தது நெல்லின் விலை

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோகச் நெற்செய்கையின் அறுவடைப் பருவம் ஆரம்பமாகியுள்ளது. அங்கு நெல்அறுவடை மும்முரமாக நடைபெற்றுவரும் நிலையில், நெல் விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி விவசாயிகளைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த பெரும்போக அறுவடையின்போது 66கிலோக்கள் கொண்ட ஒரு மூடை நெல் 3500ரூபா வரை விற்பனையாகியிருந்தது. அதற்கடுத்து நிகழும் இந்தச் சிறுபோக அறுவடையின்போது ஒரு மூடை நெல் 2 ஆயிரத்து 500ரூபாவைத்தாண்டவில்லை என்பதால் இதில் ஈடுபட்டிருந்த அனைத்து விவசாயிகளையும் கவலை ஆட்கொள்ளவே செய்திருக்கின்றது.

இதனால் சில விவசாயிகள் தமது நெல்லை இந்த மலிவு விலையில் விற்பதைத் தவிர்ப்பதற்காக அதை வெயிலில் உலரவைத்துச் சேமித்து வைக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். நெல்விலை கூடும்போது விற்கலாம் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆனாலும் அன்றாடச் சீவியத்துக்குக் கஸ்ரப்படும் பல ஏழை விவசாயிகளின் பாடுதான் திண்டாட்டம்.





குணசேகரன் சக்தீனா



# சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம்!



## குற்றமும் தண்டனையும்

வழமையாக இளைஞர்கள் தான் நீதிமன்ற வளாகத்தை ஆட்கொண்டிருப்பார்கள். ஆனால் இப்பொது நாற்பது, ஐம்பது வயது மதிக்கத்தக்கவர்களே அதிகம். அவர்களைப் பெண்கள், தாய்மார்கள் என்றும் கூறலாம். அதேபோல் தந்தைமார்களும் நிறைந்திருந்தார்கள். அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்முறுவல் புரிந்தார்கள்.

இளம் மட்டங்களை விரல் விட்டுத்தான் எண்ண முடிந்தது.

“இவர்கள் அப்படி என்ன குற்றம் புரிந்திருப்பார்கள்…!”என்று நான் எண்ணிப் பார்த்தேன். புரியவே இல்லை. குற்றம் செய்யக்கூடியளவில் இவர்களுக்குத் துணிச்சல் இருப்பதாகத் தெரியவில்லை. முதுமை ஆட்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதவான் மன்று தனது செயற்பாடுகளில் லயித்தது.

வழமையை விட மிக உரத்த குரலிலும் மிக வேகமாகவும் வழக்கிலக்கங்கள் கூப்பிடப்பட்டன.

“உங்களுக்கெதிரான குற்றச்சாட்டு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்தமை. குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கிறீர்களா..?” என்று கேட்கப்பட்டது. அதற்குத் தலையசைத்தார்கள். ஏற்றுக்கொள்கிறோம் என்பதற்கு ஒப்புதலாக.

“உங்களது இந்தக் குற்றச்சாட்டுக்குத் தண்டப்பணம் ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்த வேண்டும்” உத்தரவிடப்பட்டது.

குற்றவாளிக்கூண்டுக்குள் இருந்து வெளியே வந்தார்கள். பணம் செலுத்தும் நேரம் வரும் வரை நீதிமன்றத் பாதுகாப்புக்கூண்டுக்குள் தடுத்து வைக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் யாரும் தமக்காக வாதாடுவதற்குச் சட்டத்தரணிகளை முன்னிறுத்தவில்லை. அனைவரும் இப்பொழுது மன்றின் பாதுகாப்புக் கூண்டுக்குள், இவர்களால் அவ்விடம் நிறைந்து காணப்பட்டது. அவர்களுக்காகப் பணம் செலுத்த இன்னும்சிலர் அந்த இடத்தை நிறைத்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

---

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கரையோரப்பிரதேசத்தில் வசிப்பவர்கள். ஊரே அங்கு வந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. பணம் கட்டி விட்டுச் சென்றுவிடவேண்டும் அவ்வளவு தான் அவர்களது எதிர்பார்ப்பு.

ஆனால், இவர்கள் தம்மையும் தம்மைச்சுற்றியுள்ளவர்களையும் பற்றி யோசித்திருந்தால், இப்படியான குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்க வேண்டியதில்லை. ஒரு பிரதேசமே இன்று நீதிமன்றுக்குள். தாமாக உணர்ந்து செய்ய வேண்டிய பணிகள் தான் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல். ஆனால் அதனை அவர்கள் உணரவில்லை. தமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அவர்கள் எண்ணவில்லை. தமது நாளாந்த செயற்பாடுகளின்போது ஒவ் வொரு மனிதனுமுடைய நோயற்ற வாழ்வை அவர்கள் நினைக்கவில்லை.

சுயநலம் மட்டுமே பொதிந்த அந்த வாழ்க்கையை விட்டு விலகுவதற்கு இவர்களிடம் மாற்றத்தை உண்டு பண்ண வேண்டும். இதற்காகத் தான் நீதி தன் வேலையைக் காட்டுகின்றது.

இலங்கையில் புதிதாகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் ஒன்று தான் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனும் இந்தச் சட்டமும். அதில் குற்றச்சாட்டுக்களுக்கு ஏற்ற மாதிரி தண்டப்பணத் தொகையும் வேறுபட்டிருந்தது. குற்றங்களுக்குத் தண்டனைகள் கொடுத்தாலும் குற்றங்கள் இன்னும் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனாலும் ஏன் தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்ற காரணத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இயன்றவரைக்கும் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், நீதியை நிலை நாட்டவும் நீதித் துறையால் முன்னெடுக்கப்படுவதே இந்தத் தண்டனைகள்.

---

சில மாதங்களுக்கு முன்னர் டெங்கு நுளம்பால் பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன. இப்பொழுதும் அதன் ஆபத்து தொடர்கின்றது.

'ஈடிஸ்' வகையைச்சேர்ந்த நுளம்புகளே டெங்கு(வைரஸ்) நோய்க் காரணியைப் பரப்புகின்றன. இந்த நுளம்புகள் கறுப்பு, வெள்ளைப் புள்ளிகளையுடையவை. இவை நீரில் முட்டையிடுகின்றன. வளர்ந்த ஒரு நுளம்பு 2தொடக்கம் 4 வாரங்கள் வரை சூழலில் உயிர் வாழக்கூடியது. இந்தக் காலத்துக்குள் அவை 3 தொடக்கம் 4 தடவைகள் வரை முட்டைகளை இடும். ஒரு முறையில் 100 தொடக்கம் 200 முட்டைகள் வெளிவரும். இவற்றின் முட்டைகள் பசைத் தன்மையுடையவை. அவை வறண்ட சூழலில்கூட 6 தொடக்கம் 12 மாதங்கள் வரைக்கும் பொரிக்கும் திறனுடன் இருக்கும். தண்ணீர் கிடைக்கும்போது வெடித்து குடம்பி, கூட்டுப்புழு, முழு நுளம்பாக மாறிக்கொள்ளும். அந்த நுளம்புகள் 100 தொடக்கம் 300 மீற்றர்கள் தூரமுள்ள சுற்றா டல்களுக்குள் பறந்து சென்று மனிதரைக் கடிக்கும் ஆற்றலுடையவை. சாதாரனமாக 8 நாள்களில் ஒரு முட்டையானது வளர்ந்த நுளம்பாக மாறிவிடும்.

'ஈடிஸ்' இனத்தைச் சேர்ந்த ஆண் நுளம்புகள் இந்த நோயைக் காவுவதில்லை அவை தாவரங்களின் சாற்றை உறிஞ்சிக்குடித்து உயிர்வாழ்கின்றன. ஆனால் ஒருமுறை ஆண் நுளம்பு டெங்கு வைரசினால் தொற்றுதலடைந்தால் அதன் ஆயுளுக்கும் அதுவும் நோயைப் பரப்பும் ஆற்றலைக் கொண்டிருக்கும்.

குருதியை விரும்பிக் குடிக்கும் பெண் நுளம்புகள் காலை 6மணி தொடக்கம் 9மணி, மாலை 3மணி தொடக்கம் 6மணி வரையிலான பகல் பொழுதுகளிலேயே குருதி குடிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளன.

நுளம்புகளுக்குப் பார்வை தெளிவற்றபோதும் அவை மனிதர்களுக்கு அண்மையாகப் 10 மீற்றர்களுக்குள் வந்ததும் எம்மை ஏதோ ஒரு உருவம் போன்றே கண்டுகொள்கிறது. ஆனால் அவ்வுருவம் மனிதனா? அல்லது வேறு ஏதேனுமா? என்பதைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அவை 3 மீற்றர்களுக்குள் நெருங்கியதும் மனித உடலின் வெப்பநிலையை உணரும்.அதன்உணர் கொம்புகளில் உள்ள வாங்கிகளின் ஊடாக மனிதரைக் கண்டறிந்து தாக்குகிறது.

---

பொலிசாரும் சுகாதாரத் தொண்டர்களும் இணைந்து முன்னெடுக்கும் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் மக்களுடைய காணிகள் அதாவது வீட்டுச் சூழல் பார்வையிடப்படுகின்றது. இதன்போது நுளம்பு பெருகும் தன்மை கவனிக்கப்படுகின்றது. இந்த ஆட்கொல்லி டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவானதாக வீட்டுச் சூழல் காணப்படும் பட்சத்தில் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டு அவர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்படுகின்றனர். நீதிமன்று அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி தண்டம் அறவிடுகின்றது. ஆனால் தொடர்ந்தும் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இதை நாம் தான் உணர்ந்து கொள்ளவேண்டும். நாளை நாமும் டெங்கு நுளம்பின் கடிக்கு ஆளாகலாம். வரும் முன் காக்க வேண்டும். நாமும் எமது சுற்றத்தாரும் டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்தோம் என்ற காரணத்தால் மன்றுப்படி ஏறித் தண்டப் பணத்தைக் கட்டி விட்டுப் போவதோடு முடிவதில்லை இந்தப் பிரச்சினை. ஆயிரத்து ஐநூறு ரூபா கட்டினால் முடிந்தது பிரச்சினை என்று எண்ணுவதும், அலட்சியப்படுத்துவதும், தொடர்ந்தும் குற்றமிழைப்பதும் நாளை உங்களுக்கே ஆபத்தாக அமையும். நீங்கள் வளர்த்த நுளம்பு பல திசைகள் சென்று பலரின் உயிரைக் குடிக்கும். இதில் கொலையாளி நுளம்பல்ல அதை வளர்த்து விட்ட நீங்களே. அத்துடன் அவற்றுக்குக் கண்களும் சரியாகத் தெரியாது. பின்னர் வளர்த்துவிட்டவரை மாத்திரம் எப்படி அதற்குத் தெரியும்...?



# நூல் அறிமுகம்


தொகுப்பு எஸ். மல்லிகா



**நூல்: நெஞ்சுறுத்தும் நிஜங்கள் (கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்: செல்வராஜா சுதாகரன் (வயலூரான்)**
**விலை : 200 ரூபா**

## பக்தியுடன் பலதுமுரைக்கும் நூல்

பக்தி முதல் சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் வரை பலதையும் பதிவாக்கியுள்ளது 'நெஞ்சுறுத்தும் நிஜங்கள்' (கவிதைத் தொகுப்பு) நூல்.
தான் வாழும் சமூகம் மற்றும் அலுவலகத்தில் கண்ட, கேட்ட, அறிந்த, அனுபவித்த சம்பவங்களின் பிரதிபலிப்பாக இந்தக் கவிதைத் தொகுப்பு நூல் அமைந்துள்ளது. பொருத்து வீடு முதல் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வரை அத்தனையையும் எளிய தமிழில் அழகாய்க் கவியாக்கியுள்ளார் ஆசிரியர். நூலின் நீட்சியை அட்டைப்படமும் துல்லியமாகப் பேசுகின்றது.
மரபுக் கவிதைகள் வடிப்பதில் கைதேர்ந்தவரான வயலூரான், நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதி வருபவர்.



**நூல் : பாதை தெரியாத பயணங்கள் (சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்: சி.மார்க்கண்டு**
**வெளியீடு: கலாசாரப் பேரவை, வடமராட்சி வடக்கு.**
**விலை: 250 ரூபா**

## சமூகநெறிகளை அவாவிநிற்கும் கதைகள்

சமூக நீதி மற்றும் சமூகநெறிகளை அவாவிநிற்கும் கதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது பாதை தெரியாத பயணங்கள் (சிறுகதைத் தொகுப்பு) நூல்.
யாழ்ப்பாணி, கள்ளப்பூனை, வார்ப்பு, பாதை தெரியாத பயணங்கள், வேள்விப் படையல், ஆருக்கு விடுதலை, நூல்விழுங்கிகள், மணப்பாவை, பரிசு தந்த கதை, காணாமல் போன குஞ்சுகள் ஆகிய பத்துக் கதைகள் இந்நூலின்கண்ணுள்ளன. அனைத்துமே எளிய மொழிநடையில் பின்னப்பட்டுள்ளன. நூல் தலைப்பின் கருத்தோவியமாக அட்டைப் படம் அமைந்துள்ளது. "மாவன்னா" என்று அறியப்பட்டுள்ள சி.மார்க்கண்டு, மனிதநேயச் சிந்தனை கொண்ட படைப்பாளி. சிறுமை கண்டு பொங்குபவர். அவரது எழுத்துக்களில் அதனைத் தரிசிக்க முடிகிறது.



**நூல்: ஆறாத காயங்கள் (சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர் குந்தவை (இ.சடாட்சரதேவி)**
**வெளியீடு: செல்லையா ஐயர் கலாசார மண்டபம், தொண்டைமானாறு.**
**விலை: 200 ரூபா**

## ஈழத்தின் வலியுரைக்கும் கதைகள்

ஈழப்போரில்சிதைந்துபோன மனிதர்களையும் அவர்களின் வாழ்வையும் வலியோடு எடுத்துரைக்கிறது ஆறாத காயங்கள் (சிறுகதைத் தொகுப்பு) நூல்.
காலிழப்பும் பின்பும், இரும்பிடை நீர், கோழிக்கறி, நீட்சி, புழுக்கம், ஊழியமும் ஊதியமும், ஆநிரைகள், நாடும் நம்மக்களும், பாதுகை ஆகிய 9 கதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த நூல், ஈழ மக்களின் வலியை , போர் தந்த வலியை உரைக்கிறது. மக்களின் அவல வாழ்வைப் பேசுகிறது.
எளிய மொழிநடையில் பின்னப் பட்டுள்ள கதைகளுக்கு ஏற்றாற்போல் அட்டைப்படமும் அமைந் துள்ளது. குந்தவை என்ற புனைபெயரில் எழுதும் இ.சடாட்சரதேவி, தொண்டைமானாற்றைச் சேர்ந்தவர். இவர் அதிகம் எழுதாவிட்டாலும், எழுதிய அனைத்துமே தேர்ச்சி பெற்ற எழுத்துக்கள்.



# நிஜ உலகம்

அன்றைக்கு ஒரு தடவை
வங்கிக்குப் போயிருந்தேன்
வரவேற்பளித்த பெண் கண்ணுக்குள்
புகுந்து கொண்டாள்.
அவளைத் தாண்டி அடுத்து
இருந்தவளின் பார்வையும் மனதுக்குள்
மாயா ஜாலம் காட்டியது.

இப்படித்தான் ஒருதடவை
தபாலகத்திலும் நடந்திருந்தது.

வாகன வரி கட்டப்
பிரதேச செயலகம் சென்றபோதும்
பொறுப்பாயிருந்தாள் ஒருத்தி.
உடுத்தியிருந்த மஞ்சள் சாறியை
அவளுக்கென்றா நெய்தார்கள்...!

வெள்ளிக் கிழமைத் தூய்மையுடன்
அவள் கூந்தலில் நிறைய மல்லிகைகள்.

பிரதேசம் விட்டகன்றும்
சன்சில்க்கும், அவள் மலர் மணமும்
மூக்குக்குள் இடையிடையே...

சுற்றுலாவுக்கு வெளிக்கிட்டதிலும்
என்னைச் சுற்றி நிறையப் பெண்கள்

விமானத்தில் ஏறும்போது அன்பு
பெருகக்
கைகூப்பியும் அங்கு சென்று
அமர்ந்துவிட
அருகில் வந்து உபசரித்தும்
அட டட டா... அதை ஓட்டிச் செல்வது
எல்லாமே பெண்கள் தான்

யாரைய்யா சொன்னது
பெண்களுக்கு உரிமை
இல்லையென்று...?
அவனைப் பிடிக்க முதல்
அழைத்து வாருங்கள் பாரதியை
பார்க்கட்டும் நிலைமையை

பொன். நகுலன்



# வேண்டும்... வேண்டும்...

குருதியோடிய நீரோடை எங்கும்
தெளிந்த நீர் ஓடவேண்டும்
அந்த நீரோடையில் நம்
கண்ணீரும் கரையவேண்டும்

சோகங்கள் சொரிந்த மண்ணில்
சோலைகள் அமைய வேண்டும்
சோதனை அனைத்திலும் நாம்
சாதனைகள் படைக்க வேண்டும்

கையேந்தி நின்ற நாம்
கைகொடுத்து உதவவேண்டும்
ஒடிந்துபோய் இருந்த நாம்
ஓடி முன்னேற வேண்டும்

புண்பட்ட மனங்களிலே
நல்விதைகள் தூவவேண்டும்
தூய நற்சிந்தனைகள்
துயர் துடைத்துத்
துளிர்க்க வேண்டும்

பழிதீர்க்கும் இழிவெண்ணம்
படிதாண்டிப் போகவேண்டும்
நாம் புன்னகைத்து வாழ்வதுவே
அவர் தண்டனையாய்
மாற வேண்டும்

இழப்பு, வலி என்றும்
நம்முள்ளே இருக்க வேண்டும்
சாதிக்க உந்துகின்ற
சக்தியாக விஸ்வரூபம் எடுக்க
வேண்டும்

பதுங்கு குழி, மண்மூடைகள்
மெல்ல மெல்ல மறக்கவேண்டும்
அறிவும் உழைப்பும் ஒற்றுமையும்
நம் கேடயங்கள் ஆக வேண்டும்

குப்பி விளக்கிலும் குண்டு மழையிலும்
குவிந்த கல்விச் சாதனையை
நினைத்திட வேண்டும்
அழியாத நம் செல்வம் அதுவென்று
என்றும் மனதில் நிலைத்திட வேண்டும்

தந்தியறுந்து புழுதியில் புதைந்த
வீணையில் விரல்பட வேண்டும்
ஆனந்தபைரவி ராகம் செவிகளில்
ஆனந்தமாய் ஒலித்திட வேண்டும்

சிதைக்கப்பட்ட பாறைகள் நாம்
நற் சிலைகளானோம் எனக்
காட்ட வேண்டும்
பற்றிப் படர்ந்து குத்திக் குதறிய
முட்களும் அழிந்திட வேண்டும்

ஈனமான இனம் நாமல்ல
ஈன்ற தாய்மண் நமதாகவேண்டும்
உரிமைகள் உடமையாகி
ஈற்றினில் ஈழம் ஈட்டிட வேண்டும்
அகிம்சையால் நாம் அதை ஆளவும்
வேண்டும்

அ.அஜந்தன்



எட்டாவது இடத்திலிருக்கும் இலங்கை 9ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டால், உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்து விடும்.



# வெளிநாட்டு பயிற்சியாளர்களை பயந்தோட வைக்கும் இலங்கை கிரிக்கெட் அணி

ஏ.ஜே.ஞானேந்திரன்

அது ஒரு பொற்காலம் என்றே தோன்றுகின்றது. 1990களில் இலங்கை அணி, உலக அணிகளுக்குப் பீதியை ஏற்படுத்தியது. எதிரணியினரை எதிர்பாராத விதமாக நிலைகுலையச் செய்து தமது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஓர் அணியாக இருந்தது. வெளிநாட்டுப் பயிற்சியாளர்களை முதன்முதலாகத் தனது அணிக்காக 'இறக்குமதி' செய்த பெருமை, அப்பொழுது இலங்கைக்கு இருந்தது. இதனைப் பார்த்தே ஏனைய அணிகளும் பின்பற்றின. குறிப்பாக பங்களாதேஷ் அணி இலங்கையிடம் அதன் திட்டங்களைக் கடன் வாங்கி, தன் அணியில் அறிமுகப்படுத்தியது. மெல்ல மெல்ல அது பலம் வாய்ந்த அணியாகவும் உருமாறத் தொடங்கியது.

### 20 வருடங்களுக்கு முன்பிருந்த இலங்கை அணி

1990களில் 'Master Blaster' என்று செல்லமாக அழைக்கப்பட்ட சனத் ஜெயசூரிய இன்றும் உங்கள் ஞாபகத்தில் இருக்கிறாரா? தனது அதிரடி ஆட்டத்தினால், ஒரு நாள் ஆட்டத்தின் போக்கையே திசை திருப்பி எதிரணியினருக்குச் சிம்மசொர்ப்பனமாக இருந்தவர் இந்த சனத் ஜெயசூரிய.

இன்று அமைச்சராகி இருக்கும், இலங்கையின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்க, 1990களில் பிரகாசித்த இன்னொரு கிரிக்கெட் வீரராவார். உலகக் கிண்ணத்தை 1996இல் இலங்கை கைப்பற்றியபோது, அர்ஜுனதான் அணித் தலைவராக இருந்தார். 'தேஷ மான்ய' என்ற அரச விருதைப் பெற்ற இவரால்தான், இலங்கை அணி பலம் வாய்ந்த அணியாக உருப்பெற்றது என்று கூறினால் மிகையாகாது..

1992இல் இலங்கை அணியில் விளையாட ஆரம்பித்த முத்தையா முரளிதரனின் சுழல் பந்துவீச்சு செய்த லீலைகள் ஏராளம். ஆட்டத்தின் போக்கையே மாற்றியது இவர் பந்துவீச்சு. சாதனை மேல் சாதனை. போதுமடா சாமி என்று நிறுத்தாமல், 2010 ஜூலை வரை டெஸ்ட் ஆட்டங்களில் இவர் விளையாடி இருக்கின்றார். இவர் விளையாடிய 133 டெஸ்ட் ஆட்டங்களில் 54 ஆட்டங்களில் வெற்றி கிடைத்திருக்கின்றது.

ஒருநாள் ஆட்டத்தில் 8 இலக்குகளை வீழ்த்திய சாதனையை நிலைநாட்டி இருந்தவர் வேகப் பந்துவீச்சாளர் சமிந்தவாஸ். 1990களில் அறிமுகமாகிய இன்னொரு சிறந்த கிரிக்கெட் வீரர் இவர். 1994இல் இருந்தே இலங்கை அணிக்காக இவர் விளையாட ஆரம்பித்தார். மிகச் சிறப்பாகப் பந்து வீசக்கூடிய இலங்கை யின் வேகப்பந்து வீச்சாளர் என்று பார்த்தால், இவர் பெயர்தான் உச்சத்தில் இருக்கின்றது .

1997இல் விளையாட ஆரம்பித்த மகேல ஜெயவர்தன இலங்கை அணிக்கு இன்னொரு தூணாக இருந்தார். இலங்கை அணியின் துடுப்பாட்டக்காரரால் அடிக்கப்பட்ட அதிக பட்ச ஓட்டங்களாக இவர் 2006இல் எடுத்த 374ஓட்டங்களை இன்று வரை எவரும் தாண்டவில்லை. முன்னாள் அணித்தலைவராக இருந்த இவர், 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கைத் தாண்டிய முதல் இலங்கை அணி வீரர் என்ற சிறப்பைப் பெற்றவர்!

இலக்குக் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான ஹஷான் திலகரட்ன 1990களில் இருந்த இன்னொரு கிரிக்கெட் ஜாம்பவான். அர்ஜுனவைப் போல் இன்று அரசியலில் இறங்கிவிட்டார்.

ஏழாவதாகக் களமிறங்கி சதம் எடுத்த முதல் துடுப்பாட்ட வீரர் என்ற சாதனையை இவர் 1995இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தில் படைத்தார். இப்படியாக இலங்கை அணியைப் பலம் கொண்ட அணியாக வளர்த்தவர்கள் பலர்.

“ கடந்த 6 வருட இடைவெளியில் இலங்கை அணிக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பத்து வரையான தலைமைப் பயிற்சியாளர்கள் வந்து திரும்பியுள்ளார்கள் என்பதை நீங்கள் நம்பியே தீரவேண்டும்.

### பயிற்றுவிப்பாளர்களுடனான அணுகுமுறை...?

கடந்த 6 வருட இடைவெளியில் இலங்கை அணிக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பத்து வரையான தலைமைப் பயிற்சியாளர்கள் வந்து திரும்பியுள்ளார்கள் என்பதை நீங்கள் நம்பியே தீரவேண்டும். இது போதாதென்று, இந்திய அணிக்கெதிரான தொடரின் பின்னர், பயிற்சியாளராக இன்னொரு புதியவர் நியமிக்கப்படலாம் என்றும் பேச்சடிபடுகின்றது. ஆஸ்திரேலியாவின் வேகப் பந்துவீச்சாளர் கிலெஸ்பி இலங்கை அணிக்குப் பயிற்சி அளிப்பதற்காக இலங்கை அதிகாரிகளால் அணுகப்பட்டிருக்கிறார். “எந்தப் பயிற்சியாளரும் உங்களுடன் நிலைத்து நிற்கவில்லை” என்று காரணம் கூறி, பயிற்சியாளராகப் பதவி ஏற்பதற்கு மரியாதையாக மறுப்புத் தெரிவித்திருக்கிறார் அந்தப் பந்து வீச்சாளர். தென்னாபிரிக்கப் பயிற்றுவிப்பாளரான கிரகம்போர்ட் சொல்லாமல் கொள்ளாமல் நாட்டை விட்டு ஓடிப்போனது, கிரிக்கெட் உலகில் பெரிய அதிர்வலைகளைக் கிளப்பி இருந்தது. தற்போதைய இலங்கை நிர்வாகத்தா லும் பயிற்சியாளர்களைத் தொழில்ரீதியாக அணுகத் தெரியாத சமீபத்தியக் கிரிக்கெட் சபை அதிகாரிகளினாலும் ஏற்பட்ட வினைதான் இது என்கிறார்கள் அவதானிகள்.

2013இல் இலங்கை கிரிக்கெட் சபை தனக்கு அனுப்பியிருந்த ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிட்டு வெகுண்டெழுந்திருந்தார் ஸ் ரீவ் ரிக்சன். 'ஆஸ்திரேலிய அணியின் உதவிப் பயிற்சியாளராக இருந்த எனக்கு இவர்கள் அனுப்பி வைத்த ஒப்பந்தம் பெரிய தர்மசங்கடத்தை அளித்தது' என்று கூறி இருக்கிறார் அவர். 'இலங்கை ஓர் அழகான நாடு. அங்கு வாழ வேண்டும் என்ற ஆசையை இலங்கை எப்பொழுதுமே எனக்குள் தூண்டிக் கொண்டிருந்தது' என்று கூறும் அவர், தனக்கு அனுப்பப்பட்ட ஒப்பந்தத்தால் மனம் காயபட்டுப் போயிருக்கிறார் என்பது வெளிப்படுகின்றது.

### கைநழுவும் நிலையில் உலகக் கிண்ணம்...!

சிம்பாப்வே அணியை இலங்கை அணியுடன் ஒப்பிடும்போது, சிம்பாப்வேயைப் பலமான அணி என்று சொல்லிவிட முடியாது. இரண்டு அணிகளுக்கும் இடையில் தொடர் ஆரம்பமாகியபோது, இலங்கை அணி தொடரை இலகுவாகக் கைப்பற்றி விடுமென்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் நடந்தது என்ன ? ஒருநாள் தொடர் 3:2என்ற கணக்கில் சிம்பாப்வே வசமாயிற்று. நடந்த ஒரு டெஸ்ட் ஆட்டத்திலும் தப்பினோம்பிழைத்தோம்என்றநிலைதான். எல்லாவற்றுக்கும் உச்சமாக கடந்த 2016 இலங்கைக்கு மிக மோசமான ஆண்டாக அமைந்தது. ஆசியக் கிண்ண மோதலில் முதல் சுற்றுடன் வெளியேறியது இலங்கை. தென் ஆபிரிக்காவால் தொடரில் 5:0 என்ற கணக்கில் அடிகொடுத்து வழியனுப்பி வைக்கப்பட்டது இலங்கை அணி. ஒரு நாள் தொடரைச் சிம்பாவே அணியிடம் இழந்த பின்னர், 2019இல் இடம்பெறும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கு கொள்ளும் தகுதியை இலங்கை இழந்துவிடுமோ? என்ற பயப்பீதியும் எழுந்துவிட்டது. தரப்படுத்தலில் இப்பொழுது எட்டாவது இடத்திலிருக்கும் இலங்கை 9ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டால், உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்து விடும் என்பதே உண்மை நிலவரம்.

### சிறந்தவர்களில்லாமல் நீளுகின்றது சிரமம்

தனது சிறப்பான ஆட்டத்தால் இலங்கை அணியை 2013இலிருந்து நன்றாகவே நடத்திச் சென்ற இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் தன் பதவியைத் துறந்திருக்கிறார். இதுவும் இலங்கைக் கிரிக்கெட்டில் அதிர்வலைகளைக் கிளப்பி இருக்கின்றது. இதற்குப் புற அழுத்தமே தலையாய காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

மகேல ஜெயவர்தன. குமார் சங்கக்கார போன்ற சிறந்த வீரர்கள் விளையாடுவதிலிருந்து ஒதுங்கிய காலம் தொட்டே ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டது இலங்கை அணி. அனுபவம் இல்லாத இளம் வீரர்களை வைத்துக்கொண்டு, ஒரு பலமான அணியை உருவாக்க முடியாது திணறுகின்றனர் இலங்கைக் கிரிக்கெட் சபையினர். இறுதியாக நடைபெற்ற சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்திலும் கூட 39வயதான சுழல் பந்து வீச்சாளர் ரங்கன கேரத் இல்லாவிடில் அணியின் பந்து வீச்சுப் பலம் எந்த அளவுக்கு மாறுபட்டிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. தலைகள் ஒழுங்காக இருந்தால் நன்றாகவே வாலாட்ட முடியும்.

# கட்சி தாவும் 14 அமைச்சர்கள்

மைத்திரி அணியில் இருந்து 18 அமைச்சர்கள் விலகுவதற்குத் தீர்மானம் எடுத்துள் மைக்குப் பல காரண ள் உள்ளன. றில் ஒன்றுதா க்கிய தேசிய அமைச்சர்கள் பல இ ர்களை தொடர்ச் க விமர்சித்து வருகின் ம. இது தொடர்பில டந்த வாரம் 14 அமைச்சர்களும் சந்திப்பொன்றை மேற்கொண்டனர். மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சர்கள் எமக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்;விமர்சிக்கின்றனர். இதை நாம் இனிமேலும் பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. இதற்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டனர்.

அத்தோடு நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன் எதிர்க்கட்சியில் போய்அமர்ந்துவிட வேண்டும். இது தொடர்பில் அரச தலைவரைச் சந்தித்து நாம் விலகுவதற்கான காரணத்தைத் தெளிவாக விளக்க வேண்டும் என்று அதில் ஓர் அமைச்சர் யோசனை தெரிவித்தார். இந்த யோசனைகளை அங்கிருந்த அனைத்து அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டனர்.

# அண்ணா எப்போ கல்யாணம்?

முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் மூன்று புத்திரர்களும் இன்னும் திருமணம் முடிக்கவில்லை. அவர்களுக்கு திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை பெற்றோருக்கு உள்ளபோதிலும், மூத்த புதல்வன் நாமல் ராஜபக்ச அதற்கு இடங்கொடுப்பதாக இல்லையாம்.

அவர் கல்யாணம் காட்டினால்தான் இளைய சகோதரர்கள் கட்ட முடியும். இதனால் இளைய சகோதரர்கள் இருவரும் நாமலைத் திருமணம் முடிக்குமாறு நச்சரிக்கிறார்களாம். "அண்ணா எப்போ கல்யாணம், எப்போ கல்யாணம்" என்று கேட்டுக் கொண்டே இருக்கின்றார்களாம்.

"நான் கல்யாணம் முடிக்க வேண்டும் என்ற தேவை உங்களுக்கு இருக்குபோல. உங்களின் அவசரத்துக்காக எல்லாம் இப்போ கல்யாணம் முடிக்க முடியாது" என்று நாமல் அவர்களிடம் கூறிவிடுகிறாராம். இது தொடர்பில் அவரிடம் நாம் வினவு ் போது இன்னும் ஓரிரு வருடங்களில் அது நடக்கும் என்கிறார். மணப்பெண்யார்? அதுமட்டும்சஸ்பென்ஸ்.

# எம்பியின் வீட்டிலும் வெடிப்பு!



நாட்டில் இடம்பெற்றுவரும் போராட்டங்களுள் உமா ஓயத் திட்டத்துக்கு எதிரான போராட்டமும் ஒன்று. அந்தத் திட்டத்தால் 1500 இற்கு மேற்பட்ட வீடுகளில் வெடிப்புகள் வீழ்ந்துள்ளன. அதேபோல் கிணறுகள் அனைத்தும் வற்றிப்போயுள்ளன.

இந்த இடர் ம க்களை மாத்திரமன்றி அரசியல்வாதிகளையும் பாதித்துள்ளது. இதனால் மக்களுக்காக இல்லாவிட்டாலும் தங்களுக்காக வேணும் போராட வேண்டிய பரிதாப நிலைக்கு இந்த அரசியல்வாதிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆளுங்கட்சி அரசியல்வாதிகள்கூட இந்தத் திட்டத்துக்கு எதிராகப் போராடத் தொடங்கியுள்ளனர். அவர்களுள் ஒருவர்தான் ஐக்கிய தேசிய கட்சியின் பதுளை மாவட்ட எம்பி சமிந்த விஜயசிறி. அவர் வாழ்ந்து வந்த பரம்பரை வீடு வெடித்து விட்டதாம். அவர் சிறு வயதில் குளித்து மகிழ்ந்த கிணற்றில் நீர் வற்றிவிட்டதாம்.






எம்.ஐ.முபாறக்

தேர்தலுக்கு முன் கட்சி தாவலையும் அதற்கு முன் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களுக்கு பாடம் கற்பிக்கப்படுவதையும் பார்க்கலாம்போல.

ஒருவேளை அரச தலைவர் கனவு நிறைவேறிய பின்தான் கல்யாணமோ... அப்போ அறுபதாம் கல்யாணம்தான்.

# ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானா...?



ஊழல், மோசடியில் சளைத்தவர்கள் அல்லர் நாங்கள் என்று மகிந்தவின் ஆட்சிக்கு சவால் விடுக்கும் விதமாக இந்த அரசும் ஊழல், மோசடியில் போட்டிபோட்டுக்கொண்டு இறங்கியுள்ளது.

மத்திய வங்கியில் தொடங்கிய இந்த அநியாயம் வெற்றிகரமாகத் தொடர்கிறது. எதிர்க்கட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக இந்த அரசின் ஊழலை வெளிப்படுத்தினாலும்கூட அரசு இதற்கெல்லாம் அஞ்சுவதாக இல்லை. இருக்கின்றவரைக்கும் சுருட்டுவோம் என்பதுபோல் சுருட்டல்கள் இடம்பெறுகின்றன. அவ்வாறான சுருட்டல்களில் ஒன்றைத்தான் இப்போது பார்க்கப் போகின்றோம்.

அமைச்சர் சாகல ரத்னாயக்கவுக்குச் சொந்தமான தேயிலைச் தொழில் சாலை ஒன்று மாத்தறை அக்குரசையில் அமைந்துள்ளது. பெரும் தொகையான பணத்தை அரச வங்கி ஒன்றில் இருந்து கடனாகப் பெற்றிருந்தது அந்தத் தொழில்சாலை. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவது யார் தெரியுமா? ஒரு பாவமும் அறியாதஅந்தத் தொழில்சாலையில் எந்தவொரு பங்கையும் கொண்டிராத நாங்கள்தான்.

ஆம். இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான .anka Transformer நிறுவனம்தான் இந்தக் கட மீளச் செலுத்திக்கெ ண்டிருக்கி . அதாவது எமது ப ணத்தைக் ண்டுதான் அமை சர் வயிற்றை நிரப்புகிறார்.

இந்த விவகாரத்தை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு கோப் குழு முயற்சி செய்தபோது சட்ட நுணுக்கங்களைக் காட்டி அரசு அதைத் தடுத்துவிட்டது. மகிந்த ஆட்சி என்ன, நல்லாட்சி என்ன. எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். எல்லமே மக்களைச் சுரண்டி தமது வயிற்றை வளர்க்கும் அரசுகள்தான்.



காணாமல் போனோர் தொடர்பான விவகாரத்தை இலங்கை அரசு கையாளும் பொறிமுறையில் ஒருபடியாக அமைப்பது போனோருக்கான அலுவலகம் ஸ்தாபிப்பது தொடர்பான நிலைப்பாடும் மேலே சொன்ன வெருளி வைக்கும் பொறிமுறையை நிகர்த்ததாக இருக்குமோ என அஞ்சப்படுகிறது.



# காணாமல் போனோருக்கான காரியாலயம் 'கத்தரி வெருளி'யாக அமையக்கூடாது!

கசக்கி எறியப்பட்ட காகித ஒப்பந்தங்கள் பலதை கடந்த வரலாறு இலங்கையின் இன முரண்பாட்டிற்கு இருக்கையில், காணாமல் போகாமல் ஒரு வருடத்தை கடந்திருக்கிறது காரியாலய சட்டம்.

ஸூடோ ஸ்வாமி

'கத்தரி வெருளி' என்றொரு சிறுவர் பாடலை கற்றுக் கொள்ளும் பாக்கியம் எனது பாலபருவத்தில் கிடைத்திருந்தது. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இயற்றிய அந்தப் பாடல், விவசாயச் செய்கைகளின் போது பயிர்ப்பச்சைகளுக்கு சேதம் விளைவிக்க வரும் பறவைகளை விரட்டுவதற்கு விவசாயிகள் கையாளும் 'இராஜதந்திர'மான வெருளி வைப்பதை பற்றியதாகும். 'கத்தரி தோட்டத்து மத்தியிலே நின்று காவல் புரிகின்ற சேவகா ...' என்று தொடரும் அந்தப்பாடல், பயிர்ச்செய்கைகளை நாசம் செய்ய வரும் கால்நடைகள் மற்றும் பறவைகள் வெருளியை கண்டு விரண்டு ஓடுவதாக குறிப்பிடுகிறது. இப்படிப்பட்ட வெருளி வைப்பு விவகாரங்கள் வெறுமனே விலங்கினங்களை விரட்டுவதற்காக மட்டுமல்லாமல் கவனக்கலைப்பு கருவியாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருவது வழமை. கண்படாமல் அல்லது திருஷ்டிபடாமல் இருப்பதற்காக கட்டுமான தளங்களில் வெருளி வைப்பு கைங்கரியம் இப்போதும் கையாளப்பட்டு வருகின்றது. மனித உருவத்தை ஒத்த சாயலில் சுய இயக்கமற்ற பொம்மை ஒன்றை செய்து வைப்பதே இந்த வெருளி வைக்கும் விவகாரத்தின் அடிப்படையாகும்.

காணாமல் போனோர் தொடர்பான விவகாரத்தை இலங்கை அரசு கையாளும் பொறிமுறையில் ஒருபடியாக காணாமல் போனோருக்கான அலுவலகம் அமைப்பது தொடர்பான நிலைப்பாடும் மேலே சொன்ன வெருளி வைக்கும் பொறிமுறையை நிகர்த்ததாக இருக்குமோ என அஞ்சப்படுகிறது. காரணம், வெருளிக்கு இருக்கக்கூடிய குணாதிசயங்களை இந்த அலுவலகம் கொண்டிருப்பதும் வெருளியால் அடையப்படக்கூடிய கவனவீர்ப்பை இந்தப் பொறிமுறை பெற்றுக் கொடுப்பதும் சாத்தியமாகியிருக்கிறது.

இலங்கை அரசு கடந்தாண்டு மே மாதத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகம் அமைப்பதற்கான சட்டமூலம் கருத்திலெடுக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து கடந்த ஜூன் மாதம் அது தொடர்பான திருத்தப்பிரேரணை நாடாளுமன்றில் அங்கீகாரத்தினை பெற்றிருந்த நிலையில் அண்மையில் அரச தலைவர் சிறிசேனவினால் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து அது மீண்டும் கவனவீர்ப்பினை பெற்றிருக்கிறது.

## ஐ.நா. செயலாளரின் வரவேற்பு!

குறித்த அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டத்தில் அரச தலைவர் கைச்சாத்திட்டதை வரவேற்றிருக்கும் ஐ.நா. செயலாளர், தமது அன்புக்குரியவர்களை உண்மை நிலைவரம் தொடர்பில் தேடும் இலங்கையருக்குரிய இந்த சம்பவம் ஒரு மைல்கல் என தெரிவித்திருக்கிறார்.

குறித்த அலுவலகத்தின் பணிகளுக்கு உதவி வழங்க தாம் தயாரென தெரிவித்திருக்கும் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், அதனை விரைவாக இயங்க வைக்கவேண்டும் என்பதுடன் அது தொடர்பில் சுயாதீன ஆணைக்குழு நிறுவப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

பன்னாட்டு எதிர்பார்ப்புக்குரிய இந்த நிறுவகத்துக்கான அண்மைய முனைப்புக்கு அமெரிக்க மற்றும் கனடா தூதுவர்களும் தமது வரவேற்பை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

## சம்பந்தனின் வலியுறுத்தல்!

அமையவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் அலுவலகத்தினது அமைவினை துரிதப்படுத்துவதனை நாடாளுமன்றில் மீள வலியுறுத்தியிருக்கும் சம்பந்தன், கடந்த செவ்வாய்க்கிழமை சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றினை கொணர்ந்து உரை நிகழ்த்தியிருந்தார். மற்றும் தடுப்பில் உள்ளவர்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதாக அரசு வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் அடிபட்டுப்போனதை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித்தலைவர், அது இதுகாறும் நடந்தேறாத நிலையில் அலுவலக அமைப்புப்பணிகள் மேலும் தாமதிக்க கூடாதென அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

## அலுவலகத்திற்கு இருக்கும் இயலுமை மற்றும் இயலாமை!

கவனக்குவிவை பெற்றிருக்கும் இந்த அலுவலக அமைவு, அதனது நகர்வு வேகம் விமர்சனங்களை எதிர்கொள்வதற்கப்பால் அதற்கு இருக்கக்கூடிய ஆணைஇயலுமை தொடர்பில் உள்நாட்டில் கருத்து முரண்பாட்டினை எதிர்கொண்டிருக்கிறது.

காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் தொடர்பில் மகாநாயக்க தேரர்களை உசுப்பேற்றுவதற்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருக்கிறார் முன்னாள் அரச தலைவர் ராஜபக்ச. அந்த அலுவலக அமைப்பினால் நேரிடக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் தனது மடலில் குறிப்பிட்டு ராஜபக்ச மகாநாயக்க தேரர்களுக்கும் மகாசங்கத்தின் உறுப்பினர்களுக்கும் எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார்.

விசேடமாக சிப்பாய்களை இது நெருக்கடிக்குள்ளாக்கும் என்று தெரிவித்திருப்பதுடன் மற்ற ஏனைய சில நடைமுறை சட்டங்களையும் இது தவிடுபொடியாக்கும் என்றிருக்கிறார்.

## திஸ்ஸ விதாரண எதிர்ப்பு!

மகிந்த காலத்தில் அமைக்கப்பட்ட சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை வகித்தவரும் நவசமசமாஜ கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண காணாமல் போனோருக்கான அலுவலகத்திற்கு தனது எதிர்ப்பினை அறிவித்திருக்கிறார். குறித்த அலுவலகத்தின் நடவடிக்கைகள் சிப்பாய்களை ஆபத்தில் தள்ளும் என்றிருப்பதுடன், அலுவலகத்தின் பரிந்துரைகள் பன்னாட்டு நீதிமன்றங்களில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இராணுவத்தினர் பன்னாட்டு விசாரணைகளுக்கு முகம் கொடுக்க சாத்தியமிருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

காணாமல் போன தமது அன்புறவுகளை தேடும் உறவினர்களுக்கு ஆறுதலை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் அலுவலகம் சம்பந்தமாக அவர்கள் தரப்பில் திருப்தி தெரிவிக்கப்படவில்லை. பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை எதனையும் கொண்டிராத காணாமல் ஆக்கப்படுதல்களுக்கு பின்னால் உள்ளவர்களை கண்டறிவதற்கான சாத்தியப்பாடுகளை கொண்டிராத சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திராணியற்ற பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட வெருளியை ஒத்த இயல்பினை இந்த அலுவலகம் கொண்டிருப்பது ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. வெறும் பரிந்துரைகள் பிரேரிக்கும் அமைப்பாக இந்த அலுவலகம் விளங்கப்போவது தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரச தலைவரின் ஒப்பத்தை பெற்றிருக்கும் 2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் போன ஆட்களுக்கான காரியாலய சட்டம், தற்போது வர்த்தமானி பிரசுரத்திற்காக காத்திருக்கிறது. அதன் பிரசுரத்தின் பின்பே குறித்த காரியாலயத்தினை இயக்குவதற்கான நபர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த பணித்தொடர் ஒழுங்கின் பின்பே எந்த நோக்கத்திற்காக அது பெயரிடப்பட்டதோ அந்த நடவடிக்கை ஆரம்பிக்கும்.

கசக்கி எறியப்பட்ட காகித ஒப்பந்தங்கள் பலதை கடந்த வரலாறு இலங்கையின் இன முரண்பாட்டிற்கு இருக்கையில், காணாமல் போகாமல் ஒரு வருடத்தை கடந்திருக்கிறது காரியாலய சட்டம். ஆனால் காரியாலயத்தை நிறுவுவதற்கான உரிய படிகள் விரைவாக அடுத்தடுத்து நகர்த்தப்படாதவிடத்து பன்னாட்டு தரப்புகளினதும் மனிதாபிமான விரும்பிகளினதும் பார்வை இலங்கையின் உள்நாட்டு நடவடிக்கைகளில் படாதிருப்பதற்காக கட்டப்பட்ட வெருளியாகவே காணாமற்போனோருக்கான காகித காரியாலயத்தை கொள்ளவேண்டியிருக்கும்.




# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 30.07.2017 தொடக்கம் 02.08.2017 வரை



## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரன் அனுகூல பலன் தரக் காத்திருக்கின்றனர். வசீகர பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். அக்கம் பக்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது. புத்திரரின் உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் செயல்பாடு குடும்ப ஒற்றுமைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சியும், இலாபமும் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.



## இடபம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் வழங்குவர். வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். வாகனப் பயணத்தால் நன்மை காண்பீர்கள். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். விருந்து விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவி விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு அதற்குரிய வருமானம் கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்வு அமையும். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேறுவர். பெண்களுக்குச் சீரான வாய்ப்புகள் வந்தாலும் அவ்வப்போது குழப்பமான மனநிலையும் இருக்கும்.



## மிதுனம்

ராகு, சுக்கிரன், சனீஸ்வரர் அதிகளவு நன்மை தருவர். நண்பர் உங்களின் நற்குணம் அறிந்து மகிழ்வர். உடன்பிறந்தவர் வகையில் சுபநிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். குடும்பத் தேவை குறையின்றி நிறைவேறும். வாகனப் பயணம் மூலம் சுமாரான பலன் கிடைக்கும். புத்திரர்கள் பெற்றோரின் கருத்துக்கு மதிப்பு அளிப்பர். உடல்நிலை பலம் பெறும். மனைவியின் அன்பும், பாசமும் கண்டு நெகிழ்வீர்கள். தொழிலில் குறுக்கிட்ட இடையூறு விலகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும். பணியாளர்கள் பணியிலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர்.



## கடகம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். அன்றாடப் பணிகளில் உரிய திட்டமிடுதலுடன் ஈடுபடுவது நல்லது. தாய்வழி உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வெளியூர் பயணம் மூலம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். சீரான ஓய்வு உடல்நலனை பாதுகாக்க உதவும். மனைவியின் செயல்பாடு வளர்ச்சிக்கு வழி வகுக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை நிறைந்திருக்கும். தொழிலில் உள்ள அனுகூலத்தை அக்கறையுடன் பாதுகாப்பது நல்லது. பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க தாமதமாகலாம். பெண்கள் நற்செயலில் ஆர்வமுடன் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.




## சிங்கம்

குரு, சந்திரனால் நற்பலன் உண்டாகும். முக்கியபணி நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். உடன்பிறந்தவர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு நடைமுறையை பலப்படுத்தவும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். கடன் தொந்தரவால் சிரமம் உருவாகலாம். மனைவி வழி சார்ந்த உறவினரின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிவது அவசியம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. பெண்கள் தாய் வீட்டாரின் உதவி கேட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பு தவிர மற்ற விஷயத்தில் ஈடுபட வேண்டாம்.



## கன்னி

பெரும்பான்மை கிரகங்களால் நன்மை கிடைக்கும். அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் நற்பெயரும் புகழும் தேடி வரும். புதிய வீடு வாகனம் வாங்க யோகம் உண்டாகும். புத்திரர் அறிவாற்றலில் சிறந்து விளக்குவர். பூர்வீகச் சொத்து மூலம் திடீர் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரம் அணுகாத சுமுகவாழ்வு அமையும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் புதிய பங்குதாரர்களின் ஆதரவால் லாபம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் நன்றாக படித்து முன்னேறுவர். கலைத்துறையைச் சார்ந்தவர்கள் கூடுதலாக முயற்சிக்க வேண்டும்.



## துலாம்

புதன், ராகு, சூரியன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். முக்கிய பணி இஷ்டதெய்வ அருளால் நிறைவேறும். அன்றாட வாழ்வில் இனிய அனு பவம் உண்டாகும். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். புத்திரர் படிப்பு, அறிவாற்றலில் மேம்படுவர்.

ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவி உங்கள் மீதுள்ள பாசத்தை வெளிப்படுத்துவார். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காக அக்கறையுடன் பாடுபடுவர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை.



## விருச்சிகம்

புதன், குரு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். உறவினர்களுடன் இனிய சந்திப்பு ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புத்திரர் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.



## தனுசு

கேது, சந்திரனால் நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்களை புதிய அணுகுமுறையால் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். தாய்வழி சார்ந்த உறவினரிடம் நெருக்கம் அதிகரிக்கும். புத்திரர் நற்செயலில் ஈடுபட்டு பெருமை தேடித் தருவர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் குடும்ப ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற விடாமுயற்சி தேவை.



## மகரம்

புதன், குரு, சுக்கிரன், சனீஸ்வரர் ஆதாய பலன் வழங்குவர். மனதில் புத்துணர்வு மேலோங்கும். வாழ்வில் முன்னேறுவதற்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுபமங்கள நிகழ்ச்சி நடந்தேறும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வெளியூர் பயணம் மூலம் நன்மை கிடைக்கும். எதிர் மனப்பாங்கு உள்ளவரும் நட்பு பாராட்டுவர். மனைவி உங்களின் நல்ல குணம் அறிந்து பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் பங்கேற்பர்.



## கும்பம்

சூரியன், செவ்வாய், சுக்கிரன் நற்பலன் தருவர். யோசனையுடன் திட்டமிட்டு பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவி கேட்டு அணுகுவர். வாகனப்பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர் அதிருப்தி மனப்பான்மையுடன் செயல்படுவர். பூர்வீகச் சொத்தில் அளவான வருமானம் கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சுமூகத் தீர்வு பெற முயற்சி தேவை. மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெற்று மகிழ்வர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.



## மீனம்

புதன், குரு, சுக்கிரன் அளப்பரிய நன்மை வழங்குவர். மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேறும். வாகன பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். கடனில் [illegible] கள். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நடந் [illegible] மனைவியின் செயல் [illegible] தொழில், வியாபாரத்தில் [illegible] படிப்படியாக அதிகரிக் [illegible] டம் பாராட்டு. [illegible] உறவினரின் குடும்ப [illegible] உதவுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

# விருது...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)


அய்யோ தமிழ் வரலாறு காறி உமிழுமே...' இளங்கமணன் தன் முடியைக் கழற்றி வீசினான். தன் உடைவாளை உருவி எடுத்துக் கொண்டபோர்து...

"அரசே சற்றுப் பொறுங்கள்! என் பிணக்கை முடித்துவிட்டு நீங்கள் எதையும் செய்யலாம்" என்று கூறிவிட்டு "மன்னா! நீங்கள் கழற்றி வீசிய இந்த முடியை மீண்டும் குமணனுக்கு வழங்கச் சம்மதமா?" என ஆணித்தரமாகக் கேட்டு நின்றார் சாத்தனார்.

புலவரே பத்து முறையும் சம்மதம். எனக்கு இனி முடி வேண்டாம். மங்காத தங்கமான என் அண்ணனே வேண்டும். எனக் கூறிப் புலவரைக் கட்டியணைத்துக் கதறினான்.

மந்திரி, பிரதானிகள் முன்னிலையில் தான் கொண்ட வந்த மண் தலையை மூடிய துணியை அகற்றிக் காட்டி நடந்த விடயத்தை விவரமாகக் கூறி, "எல்லோரும் புறப்படுங்கள் எங்கள் வள்ளலை, குமண மன்னனை மீண்டும் அரியணை ஏற்றுவோம்" என்று சாத்தனார் மகிழ்ந்து கூறிய போது எல்லோரும் மகிழ்ந்து ஆரவாரத்தோடு புறப்பட்டனர். அரச தர்பார் போல ஊர்வலம் புறப்பட்டுச் செல்லும் காட்சி தொடர பின்னணிக் குரலாக ஒரு குரல் ஒலித்தது இப்படி...

"பசியின் விருதென்பதா? தமிழரின் விருதென்பதா? தாயின் முலையிலிருந்து பால் கிடைக்காத குழந்தை பசியின் கொடுமை தாங்காது தாயின் முகம் நோக்கிக்



கதற, தாய் தன் இயலாமையோடு தன் கணவன் முகம் நோக்க, கணவன் தமிழெடுத்து அரசன் முன் பாடினான் பசி அடக்கும் விருதைப்பெற. முடிவு.. பசித்த பசியின் கவித் தமிழ் வென்ற விருது இது. வாள் முனையால்

ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டிய வரையெல்லாம் கொற்றத்தில் தமிழ் கோலோச்சியதால் தான் தன் உரிமையை வென்றெடுத்து விருது வழங்கியது அன்று. இன்று நினைத்தாலும் நெஞ்சு புல்லரிக்கிறது. அந்தத் தமிழின் பெருமையும் வலிமையும் எமக்கு விருதாகத் தந்து சென்றதே தமிழின் வரலாறு. அந்த வரலாறு மீண்டும் தமிழுக்குக் கிட்டுமா?" என்ற கேள்வியோடு தொலைக் காட்சி நிகழ்வு முற்றுப் பெறுகிறது.

சே...! அன்றைய தமிழின் வலிமையும்; பெருமையும் மனதைச் சல்லடை போட்டு வதைக்கின்றதே... இதுவரை நேரமும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த அரவிந்தன் நினைத்தான்...

அன்றைக்கு உரிமையை விருதாகப் பெற்றது தமிழ். இன்று விதானையாரிடம் படிவம் பெற்று சிபாரிசும் பெற்று அரசிடம் விருது பெறுகிறார்கள் தமிழர்கள். அன்றைய , இன்றைய விருதுகளையும் சீராகப் பார்த்தால், இன்றைய விருது ஒரு அவக் கால விருதுதானே...? என்று நினைத்தான் அரவிந்தன்.

உண்மையில் அன்று அறம் காத்தது விருது. இன்று? அரவிந்தன் அப்படியே சிலைபோல இருந்தான். விருதுக்கு விடைதேடிய அவன் மனம் எங்கோ ஓடியது...

## சொற்சிலம்பம் போட்டி இல: 482

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | 3 | | 4 | |
| 5 | 6 | | ■ | | ■ | | ■ |
| 7 | | ■ | 8 | | | | ■ |
| | ■ | 9 | | | ■ | ■ | 10 |
| ■ | ■ | 11 | | ■ | 12 | 13 | |
| 14 | 15 | | ■ | 16 | | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | ■ | 21 | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:..................................................

முழுமையான தபால் விலாசம்: ....................................

..............................................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

2. ஏமாற்றம்
5. ஸ்வரங்களாலான இசையின் அமைப்பு
7. விஷ்ணு
8. இது சுகம் தரும்
9. தமிழ் நாட்டின் புரட்சிக் கவிஞர்
11. சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் சண்டியனை இப்படிக் குறிப்பிடுவர்.
12. பழையதல்லாதது
14. பிணம்
16. மேலெழு
17. யானை
18. அழகிய காட்டுப் பறவை
19. பசு
20. திக்கு
21. பாதம்
22. கண்டறிய முயற்சி செய்

### மேலிருந்து கீழ்

1. கடவுளின் மூன்றாவது அவதாரம்
2. இல்லை என்பதற்கு எதிர்
3. துணி வகைகளில் உஷ்ண வலய நாடுகளில் பாவிக்க உகந்த துணி வகை
4. மண் குடத்தை ஒத்தது; தாளத்துக்கான இசைக்கருவி.
6. இதுவும் யானையைக் குறிக்கும்
8. தமிழ் நாட்டு சினிமாக் கவிஞரொருவர்.
9. வாதுமை மரத்தின் கொட்டையை உடைத்து எடுக்கும் பருப்பு.
10. பெண்
12. கடும் வேகமான காற்று
13. மரியாதைக்குரிய சொல் (ஆண்)
14. சேறு
15. ஒன்றையடுத்து ஒன்றாக அமையும் ஒழுங்கு
16. ஒரு பத்திரம்
18. பெரிய
19. வீட்டு வளர்ப்புப் பிராணி.

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 480 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) திருவாசகம் (6) திகில் (7)சதி (9)கவடு (10)யாத்திரை (11)தருணம் (12)புல் (13)மது (15)மரு (17) முகம் (18)காவலாளி (20) அரபு (21)மாயம்

**மேலிருந்து கீழ்**
(1)தியாகம் (2)வாதிடுதல் (3)சகி (4)கல்யாணம் (5)கதிரை (7)சதி (12)புருவம் (13)மகரம் (14)தும்பு (15)மகான் (16)எளிய
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.482**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (09.08.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 480 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
க.தில்லையம்பலம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**
வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை,

**3 ஆம் பரிசு**
யூ.ஹெவன்லி பச்சேக்,
வங்காலை - 1,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
இரா.சந்திரசேகரன்,
மாசியப்புலம் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

**5 ஆம் பரிசு**
திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி ஸ்ரீகிருஷாந்தி, உமாபதிசிவம்
இல.18 வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

ந.பாலகுமார்,
சிவன் வீதி,
காரைநகர்.

அ.அறிவரசி,
இல. 16/1 மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம்போட்டி இல.482இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.08.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 480 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பில்டிங் கன்ஸ்ரைக்ஸன் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- ☑ மேசன்
- ☑ தச்சுவேலை தெரிந்தவர்கள்
- ☑ கம்பிவேலை தெரிந்தவர்கள்
- ☑ பெயின்ரர்கள்

} சம்பளம் ரூ.1700/- (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 150/= வழங்கப்படும்)

☑ உதவியாளர் - சம்பளம் ரூ.1200/= (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 112/- வழங்கப்படும்)

**077 712 9690, 077 550 1520 , 077 853 5248**

## நாகபூஷணி திருமண சேவை

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு மணமகன்.
மணமகள் அனைவருக்கும் பதிவுக் கட்டணங்கள் யாவும்
இலவசம் (30.07.2017 முதல் 09.08.2017 வரை)
எம்மிடம் ஏராளமான மணமக்கள் ஜாதகங்கள் உள்ளன.
நீங்கள் விரும்பும் மணமகனையோ மணமகளையோ
மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

**384/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(நல்லூர்க் கோயிலுக்கு வடக்குப் பக்கம்)
**021 222 9306/ 077 138 7596** (CS 6234) (14)



## ஸ்ரீ சம்மக்கா சாறக்கா ஜோதிடம்

**இந்தியாவின் பிரபல ஜோதிடர்**
**ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி**

**நேரம்:- காலை 8.00 தொடக்கம் மாலை 7.00 வரை**
**இல.276/1, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இ:- 076 720 6899**

எத்தனையோ ஆள்களிடம் ஜோதிடம் பார்த்திருப்பீர்கள். ஆனால் இவர்களிடம் பார்த்தல் நூற்றுக்கு நூறு வீதம் எல்லாப் பரிகாரமும் கிடைக்கும். கைரேகை. ஜாதகம். கல்வி. தொழில். வியாபாரம். வாஸ்து சாஸ்திரம். வெளிநாட்டு பயணம். வெளிநாட்டு. உள் நாட்டுப் படிப்புகள் இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

**இந்தியாவின் பிரபல ஜோதிடர்**
**ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி.**

## Montessori Teacher Training (AMI)

பாலர் பாடசாலைக்கான AMI முறை
மூலமான பயிற்சி நெறி

Duration : 16 Classes + Training
ஆரம்பம் : 15th Sep 3.30 p.m

பயிற்சி நெறி முடிவில் 3 Certificates
பெறும் வாய்ப்பு.

- NVQ Level 4 Certificate
- AMI Certificate
- Bharat sevak samaj (Indian Certificate)

**குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி**
**முற்கூட்டியே பதிவு செய்யவும்.** (CS 6253) (14)

**Beefort International School**
136, Navalar Road, Jaffna.

## வவுனியா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான லொறிகள் மூடிய கேள்விக் கூறு மூலம் விற்பனைக்கு

**விவரம்**

| வகை | இலக்கம் | பதிவுத்திகதி |
|---|---|---|
| 01) இசுசு | 42 - 9326 | 30.01.1992 |
| 02) டாட்டா | 43 - 4045 | 04.03.1993 |

- **பார்வையிடும் காலம்** :- 31.07.2017 தொடக்கம் 10.08.2017 வரை
- **நேரம்** :- காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை.
- **இடம் :-** குட்செட் வீதியில் உள்ள தலைமை அலுவலக வளாகம்
- மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000.00 செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 15.08.2017 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் காலம் :- 19.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி.
- அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் நேரில் சமுகமளிக்கலாம். சமுகமளிக்காது தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும்.
- அறிவிக்கப்பட்டு 7 நாள்களுக்குள் வாகனத்தின் முழுக்கட்டணத்தையும் செலுத்தி வாகனம் எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.
- விண்ணப்ப உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லொறி விற்பனை"** எனக் குறிப்பிட்டு **தலைவர், வவுனியா பலநோக்குக் கூட்டுறவு சங்கம், குட்செட் வீதி, வவுனியா** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**024 222 2384,**
**024 2222784**
**26.07.2017**

**"சங்க நெறியாளர் சபையின் தீர்மானமே இறுதியானது"**

# PALMYRAH DEVELOPMENT BOARD
# MINISTRY OF PRISON REFORMS, REHABILITATION, RESETTLEMENT AND HINDU RELIGIOUS AFFAIRS
# CALLING OF NATIONAL COMPETITIVE TENDER

Chairman of procurement committee Palmyrah Development Board invites sealed quotations under the two bid system technical and financial proposals from the eligible bidders for Hand tools, Wood working machines and Portable hand machines.

Sealed tenders are invited up to 21st August 2017 at 2.30 p.m. and will be opened on 21st August 2017 at 2.45p.m at Palmyrah Development Board, first floor, NHDA building, Kandy Road, Jaffna, Sri Lanka for the listed Tools and equipments by the organization in two bid system experienced firms and/or preferably from SLS/ISO certified manufacturers/agencies for Hand tools, Wood working machines and Portable hand machines of following equipments. The items should be able to conform to the test procedures and requirements of Sri Lanka and international standards, as mentioned below against required technical specifications of each item.

The tender document along with technical details, terms and conditions, can be obtained **from 31st July 2017 from the following offices. To participate in the tender please pay a non-refundable nominal fee of LKR 1, 000/=** (Sri Lankan Rupees One thousand only) in cash.

1. Palmyrah Development Board, 01st Floor, NHDA Building, Kandy Road, Jaffna.
2. Palmyrah Development Board, 17 A 1/1, Collingwood place, Colombo 6.

The quantities of items envisaged in the projects advising to quote to the Goods and services as per the specifications as follows.

| Procurement Code | Narration | Bid Security LKR |
|---|---|---|
| PDB/JAF/EX T/2017/01 | ***Hand Tools*** Hand saw 20"-20 Nos, Tenon saw 12"-12 Nos, Hoping saw 10"-4 Nos, Chisel 1"-20Nos, Chisel 1/2"-20Nos, Chisel 1/4"-20Nos, Mortise ¼"-20 Nos, Mortise ½"-10 Nos, Bevel Edge chisel ½"-10 Nos, Bevel Edge chisel 1"-10 Nos, Marking gauge-10Nos,Mallet wood-20 Nos, Planer record 1 1/2"(No5)-20 Nos , Planer record smooth1 1/2"(No4)-20 Nos ,Plough planer with blade - 2 Nos, rebate planer with blade-2Nos,Spork safe planer-10 Nos, Oil stone rough 8"-3Nos, Oil stone smooth 8"-3Nos,measure tape 5m-20 Nos,Clow hammer 1pounds-20 Nos, Cross pin hammer ¼ pounds-5 Nos, File triangular 4"-20Nos, File triangular 8"-10Nos, File triangular 3"-20Nos,Drill bit set HSS Set-1/16"-1/2"-2 Nos, Try square 12"-20 Nos, Try square 6"- Nos-10 Nos, Steel ruler 12"-20 Nos, Pliers 8"-2 Nos, Pincers 8" -2 Nos,G gram 8"-10 Nos, Sash gram 4feet-3 Nos, Flat file 10" rough-10 Nos, Half round file rough 10" – 10 Nos, Rasp file 8"-10 Nos, Rasp file 10"-10 Nos, Turning tool set-3Nos, Bench vice 4"-10 Nos, Hack saw frame-2 Nos, Caliper out 8"-5 Nos, Caliper inside 8"-5 Nos, wing compass 6"-5 Nos, Sliding vevel 6"-10 Nos, Screwdriver 12'-5 Nos, Screwdriver 6"-5 Nos, Plips screw driver 6"-3 Nos, Plips screw driver 10"-3 Nos, Inside planer 11/2"(No 5)-2 Nos, Outside planer 11/2"(No5)-2 Nos | 100,000/= |
| | ***Wood working Machines –Fix*** Planning, sawing, thickness planning, moulding combined multi-purpose machine 12"-01 Nos, Wood lath Machine 4 Feet with 4" chuck-01 Nos, Lath machine 4 feet with tools and accessories with 8" three joy and four joy chuck set-01 Nos, Gig saw machine vertical moving 1" Blade-1set | |
| | ***Portable Hand machines -Electric*** Cross cutting saw with blade 14"-2 Nos, planer 4"-2 Nos, Disk grinder with rubber 4"-5 Nos, Driller hand 3/8"-3 Nos, Driller with stand 5/8" -1 Nos, router with cutters set-3 Nos, Gig saw with blader (no 10)-3 Nos, Chain saw set 3 feet-2 Nos, Grinding machine double stone 6"-1Nos | |

**The supplier shall be followed the following special terms & Conditions**

1. Quality will be checked by the Technical Evaluation Committee along with the Sri Lankan Goods & Service Standard (SGS)
2. You are strictly requested to undergo the Instruction to Bidders in the tender document.
3. Tenders must be submitted separately for each item in the prescribed tender format only, otherwise these are liable to be rejected.
4. Tenders must be submitted in sealed covers super-scribing the tender code as mentioned above and the Description of Equipment and due date which in this case is **21st August 2017at 2.30 pm.**
5. **Pre-bid Consultation:**-The firms those who are interested for consultation before to bid, a pre-bid consultation will be given to them on **11th August 2017 from 2.00p.m** onwards regarding information on the requirements, specifications, standards and demonstration of existing set-ups etc.
6. The Government/Purchaser reserves all rights to cancel/reject any or all the tenders without assigning any reason whatsoever.
7. Transport arrangement should be made by supplier to deliver to the Palmyrah Development Board Stores at the site, Karainagar in Jaffna District Sri Lanka.
8. Total quantity has to be delivered on or before **25th September 2017.**

Duly filled/prepared Tenders adhering to all the conditions specified in the Tender Documents should be deposited into the tender box at Palmyrah Development Board, 01st Floor, NHDA Building, Kandy road, Jaffna, or sent by registered post addressed to: **The Chairman, Procurement Committee, Palmyrah Development Board, 01st Floor, NHDA Building, Kandy road, Jaffna, Northern Province, Srilanka to receive on or before 21st August 2017 at 2.30 pm and Please insert the tender code in the top of the envelop.**

If you need any clarification, don't hesitate to contact on **Tel. 021-2222034, fax /0212224154** or E-Mail to slpdbho@yahoo.com on or before **18th August 2017 before at 1.00p.m.**

Any expenses arising on the preparation of tender document and submission should not be reimbursed. Late Tenders will not be accepted.

*The Chairman,*
*Procurement Committee,*
*Palmyrah Development Board,*
*First floor, NHDA Building, Kandy Road,Jaffna, Sri Lanka.*

# பரவுலகில் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இகவுலகில் மகிழ்வு
07 . 04 . 1955



பரவுலகில் அமர்வு
01 . 08 . 2015

## திருமதி அன்ரனற் இருதயநாதர்
## (யோகமலர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவரே, மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"

பாசமிகு தலைவியாய், நேசமிகு தாயாய், அறம், நெறி, பண்புக்கு பாத்திரவாளராய்
இம்மையி லும் மறுமையிலும் இனியவளாய், தருமத்தின் உபகாரியாய், எங்கள் குடும்பத்தின்
அகல் விளக்காய் வாழ்ந்த எங்கள் அம்மா! நாமோ கரம் கூப்பி சிரம் தாழ்த்தி ஆராதிக்கின்றோம்.
உங்கள் நித்திய வாழ்வுக்காக நித்தமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை மறுதினம் (01.08.2017) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் **(குழந்தை இயேசு ஆலயத்தில்)** காலை 6.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நான் வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்கே சொந்தம்"



இவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சுகோதரர்கள்.

**குடும்பத்தினர்**

தகவல் : செ.இருதயநாதர் (துரைமணி)

**077 130 8661**


# முதலமைச்சர்கள் மந்திராலோசனை

சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவதற்கு அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானம் பற்றிச் சகல மாகாண முதலமைச்சர்களினதும் கருத்துகள் பெறப்படவுள்ளதாக முதலமைச்சர்களின் கூட்டமைப்பின் தலைவரும் வடமேல் மாகாண முதலமைச்சருமான தர்மசிறி தசநாயக்க தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான அமைச்சரவையின் தீர்மானம் தங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரே தாங்கள் இதுபற்றிக் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும், தேர்தல்களை ஒத்தி வைப்பது தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்குப் பதிலாக முதலமைச்சர்களின் கருத்துகளைப் பெறுவது உசிதமென தாங்கள் கருதுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

(த)


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன்

(முன்னாள் கிராம சேவையாளர் - J/127)

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர் வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
என் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்.

**குடும்பத்தினர்.**
நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தோற்றம் 24.07.1953
மறைவு 26.07.2012



# மரண அறிவித்தல்

## செல்வி பாக்கியநந்தினி துரைசிங்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பாக்கிய நந்தினி துரைசிங்கம் 27.07.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (ஓய்வு ஊதியர் Sworn Translater) ஆனந்தலட்சுமி அவர்களின் அன்பு மகளும் பாஸ்கரனின் அன்புச் சகோதரியும் திரிபுரநாயகியின் மைத்துனியும் யதுஷிகனின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கந்தையா சண்முகநாயகி தம்பதியரின் அன்பு பெறாமகளும் காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம் கனகாம்பிகை தம்பதிகளின் மரு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

06, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
து.பாஸ்கரன் (சகோதரன்)

**077 827 0501**



# நான்காம் ஆண்டு நினைவலைகளில்...

தோற்றம்
14 . 11 . 1932



மறைவு
14 . 08 . 2013

அமரர்

## கந்தையா அம்பலவாணர்

Rtd.Staff Sergent - Srilankan Army Ordnance Corp.
Late Chairman - Mercantile Security Services Pvt Ltd

நல்லாசி உள்ளவரே !
நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டது - ஆனால்
நான்கு திசைகளிலும் உங்கள் பெயர்
ஒலித்துக் கொண்டிருக்கின்றது....
உங்களிடம் கற்றுக் கொண்ட தன்னம்பிக்கையும்
மனத்தைரியமும் விடாமுயற்சியும் எம்மை
வளம் படுத்திக் கொண்டிருக்கின்றது...
எமது உயிர் போன்றவரே !
எமது உயிர் இருக்கும் வரை
ஓயாது உங்கள் குரல் - என்றென்றும்
அலையலையாகத் தொடரும்.....



651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சுகுமாரன் நிதர்சினி
குடும்பத்தினர்.
077 773 0597



# மரண அறிவித்தல்

## திருமதி சுகந்தினிதேவி (ராசாத்தி) தவராஜசுந்தரம்



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், புதுமுறிப்பு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தினிதேவி (ராசாத்தி) தவராஜசுந்தரம் கடந்த 26.07.2017 புதன்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், தவராஜசுந்தரம் (காந்தன் - கிளி/ அக்கராயன் ம.வி. ஆசிரியர்) அவர்களின் பாசமிகு துணைவியும், மாலினி (சந்திரா), ஜெகதீஸ்வரன் (சூரி), சாந்தினிதேவி, லவகேஸ்வரன் (ஈசன் - கனடா), இராஜேஸ்வரன் (வெள்ளை), இலங்கேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரட்ணம் (முன்னாள் பணியாளர் - கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச), மோகனாம்பாள் செல்வானந்தம், தனலட்சுமி (கனடா), சாந்தினி, யசோதா (ஆஸ்திரேலியா), கனகசுந்தரம் (பிரான்ஸ்), சௌந்தரராஜா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பாலசுந்தரம், சிவயோகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உருத்திரபுரம் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

**077 864 9347**



மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசத்தில் அடம்பன் பாலைக்குளி டிலாசால் விளையாட்டுக் கழகத்துக்கு வடக்கு மாகாண போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி 30 ஆயிரம் ரூபாவில் மின் விளக்குகள் ஐந்தைக் கொள்வனவு செய்து கழகத்தின் தலைவர் பி.நிலாளனிடம் கையளித்தார். (ஐ)



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இளம் தொழில் முனைவோருக்கான 2017 ஆம் ஆண்டு விருது வழங்கும் நிகழ்வு யு என் டி பி மற்றும் கைத்தொழில் சேவைகள் பணியகத்தினதும் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் கடந்த 16 ஆம் திகதி சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் முத்தையன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் நல்லின பசுக்கள் நிறைந்த பண்ணையை நடத்திவரும் பெண் தலைமைத்துவ குடும்பத் தலைவியாகிய திருமதி மதன் சறோஜினி என்பவருக்கு சிறந்த பண்ணையாளருக்கான விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ-102)







முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் வலயத்தின் மூன்று முறிப்பு அ.த.க பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பு.கஜந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரன், கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)






வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் பழனிவேல் சுகந்தினி, ராசையா புனிதமேரி, கேதீஸ்வரன் புவியரசி ஆகிய மூன்று மாணவிகளுக்கும் கனேடிய தமிழ் கிறித்தவ நண்பர்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பாதணிகளை ஓமந்தை கிராம அலுவலர் அ.அனுசியாவால் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-402)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் 2017இற்கான வருடாந்த நிதியொதுக்கீட்டில் செட்டிகுளம் மாங்குளம் பிரிவுக்குட்பட்ட தாருல் உலூம் முஸ்லீம் வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி உபகரணத்தொகுதியொன்றை அண்மையில் வழங்கி வைத்தார். நிகழ்வில் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், அமைச்சரின் பிரதேச ஒருங்கிணைப்பாளர் ஹக்கீம் முனவ்பர், அமைச்சரின் உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-402)








அமெரிக்க மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி சென். தோமஸ் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது. (ஐ)




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் புன்னைநீராவி கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக 3 கணினிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ)



வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் பங்களிப்புடன் தரணிகுளம் ஆசிகுளம் வுவனியாவைச் சேர்ந்த முன்னாள் போராளியின் குடும்பத்துக்கு புதிய குழாய்க்கிணறு ஒன்று அமைத்து அதற்கான நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்திக் கொடுக்கப்பட்டது. (ஐ)





யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலிசியம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு பாடசாலை வளாக மைதானத்தில் இலிசியம் முன்பள்ளி நிர்வாக இயக்குனர் நவநீதன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம், கொக்குவில் டெய்லி பூட்ஸ்சிற்றி நிறுவுனர் எஸ். யோகபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ)




வரணி மத்தியகல்லூரியன் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலயக்கல்விப்பணிப்பாளர். சு கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார். சிறப்பு நிகழ்வாக கணித விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட்டு முதன் முதலாக பொறியியல் பீடத்துக்குத் தெரிவான மாணவன் கந்தையா ஜனகராஜ் நிகழ்வில் முன்னிலைப்படுத்தி கௌரவிக்கப்பட்டார். (ஐ)




நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்காந்தராசாவின் ஏற்பாட்டில் கனடா வாழ் உறவான சிவசேகரமின் நிதியுதவியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய இரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 25 பேருக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வழங்கும் ஆரம்ப நிகழவு கடந்த வாரம் இரு பாடசாலைகளிலும் நடைபெற்றது. (ஐ)

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# மனுக்குலத்தின் தொடர்பாளர்களும் சாட்சியாளர்களும்

## பாப்பரசரின் 51ஆவது உலக சமூகத் தொடர்பு தினச் செய்தி



கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் உலக சமூகத் தொடர்பு தினச் செய்தியின் கருப்பொருளாக, "அஞ்சாதே.ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன் (எசாயா 43:5)" என்ற வாக்கியங்களைக் குறிப்பிட்டு தனது சிந்தனைகளைத் தெரிவித்துள்ளார். அது பற்றி இவ்வாக்கத்தினூடே நோக்குவோம்.
தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளார் இவ்வாண்டுக்குரித்தான 51ஆவது உலக சமூகத் தொடர்பு தினச் செய்தியாக இதனை வெளிப்படுத்தியுள்ளார். பிரான்சிஸ் டீ சேல்ஸ் புனிதருடைய தினத்தில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளதுடன் இதன் சிறப்பு என்னவெனில் பிரான்சிஸ் டீ சேல்ஸ் புனிதர் செய்தியாளர்களின் பாதுகாவலராக விளங்குகிறார்.

**செய்தியாளர்களின் பாதுகாவலர் புனிதர் பிரான்சிஸ் டி சேல்ஸ்**

பிரான்சிஸ் டி சேல்ஸ் 1597 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 21 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். திருத்தந்தை ஏழாம் அலெக்சாண்டர் பிரான்சிஸ் டி சேல்சுக்கு 1661 ஆம் ஆண்டு அருளாளர் பட்டமும் மூன்று வருடத்தின பின்பாக புனிதர் பட்டமும், அளித்தார். 1877 ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் இவருக்கான மறைவல்லுநர் பட்டத்தை வழங்கினார்.
அன்னெசி நகரில் உள்ள மரியாள் எலிசபெத்தை சந்தித்த நினைவகப் பேராலயத்தில் இவருடை கல்லறை உள்ளது. நினை வேந்தல் விழாக்கள் ஜனவரி 24ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. 1923ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் இவரை எழுத்தாளர்களுக்கும்,செய்தியாளர்களுக்கும் பாதுகாவலராக அறிவித்தார்.
திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 51 ஆவது உலக சமூகத் தொடர்பு தினச்செய்தி இக்காலச்சூழலில் எதிர்பார்ப்பையும்,நம்பிக்கையையும் பகிரச் செய்வதாக அமைந்துள்ளது.தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியால் நாம் ஊடகங்களோடு கொண்டிருக்கின்ற தொடர்பில் செய்திகளை அதிகளவானோரோடு வேகமாகவும்,பரவலாகவும் ஊடுருவச் செய்ய முடிகிறது.
ஒருவர் மற்றவரின் வளர்ச்சிக்காக உதவும் தகவல் பரிமாற்றத்தையே நான் விரும்புகிறேன்.ஏனையவர்களைப் பற்றிக் கொண்டிருக்கின்ற முற்சார்பு எண்ணங்களை அகற்றி ஓர் உரையாடல் கலாச்சாரத்தை வளர்த்து ஒருவர் மற்றவரோடு இணைந்து இந்த உலகை யதார்த்தமாகவும்,உண்மையாகவும் பார்க்க நான் விரும்புகிறேன்.
போர்,தீவிரவாதம்,பிறழ்வுகள் மற்றும் மனிதத் தோல்விகளை மட்டுமே முன்னிலைப் படுத்தி வரும் செய்திகளால் எழும் கலக்கம் மற்றும் பயத்தை நாம் உடைக்க வேண்டும். இதற்காக மனித வாழ்வியல் யதார்த்தங்களை மறைக்கவும்,தீமையின் ஆதிக்கத்தை இருட்டடிப்பு செய்யவும் வேண்டும் என நான் சொல்லவில்லை. மாறாக இப்படிப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து கேட்பது எங்களுடைய மனதின் நேர்முக எண்ணங்களையும்,ஆற்றலையும் செயலிழக்கச் செய்துவிடுகிறது என்றே கூறுகிறேன். தகவல் தொடர்பு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் நல்ல செய்திகளை அவர்களால் வெளிப்படுத்த இயலாததால் அவர்கள் மனித வாழ்வின் துன்பத்தைக்கூடப் பொழுதுபோக்காக மாற்றி ஒட்டுமொத்த மனிதர்களையும் எதிர்மறையான சிந்தனை உள்ளவர்களாக மாற்றிவிடுகின்றனர்.எங்களுடைய வாழ்நாள் நகர்வுகளின் இதயமாக நற்செய்தி இருக்க வேண்டும். ஆக,புதிய மற்றும் திறந்த மனம் கொண்ட தகவல் பரிமாற்றத்தளம் உருவாகவும்,



தீமையை அழகுபடுத்திப்பார்க்கும் நிலை மாறி தீமைக்கு தீர்வுகள் உருவாக்கும் நேர்முகம் கொண்ட நிலைகளும் உருவாக வேண்டும். மேலும் நம் வாழ் நாள் நகர்வுகளின் இதயமாக நற்செய்தி இருக்க வேண்டும்.

**நற்செய்தி**

வாழ்க்கை என்பது தொடர்ச்சியாக நிகழும் நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல. மாறாக அது ஒரு வரலாறு.நம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை நாம் ஆராய்ந்து புரிந்து கொள்ளும் ஒரு கதையாடல். யதார்த்தங்கள் தாமாகவே பொருளற்றவை. நாம் அவற்றைப் பார்க்கும் விதம் கொண்டே அவை பொருள் தருகின்றன. அந்த வகையிலே கிறிஸ்தவர்களுக்குரிய நற் பார்வை வெளியாக அமைந்திருப்பது நற்செய்தி மட்டுமே. அது கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி (மாற்கு: 1:1). இந்த வார்த்தைகளைக் கொண்டே 'தூய மாற்கு' தன் நற்செய்தியை தொடங்குகின்றார். கிறிஸ்துவே அந்த நற்செய்தி. நற்செய்தி நூலின் பக்கங்களை வாசிக்கும்போது அதன் உள்ளடக்கமும்,அதன் தலைப்பும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன.
இயேசு கிறிஸ்து என்னும் இந்த நற்செய்தி எப்படி நல்ல செய்தியாகிறது..? அதில் துன்பம் இல்லை என்பதற்காக அல்ல மாறாக துன்பமே நற்செய்தி முழுவதும் நிழலாடுகின்றது. இயேசு தந்தையின்மேலும் ஒட்டுமொத்த மனுக்குலத்தின்மேலும் கொண்டிருக்கின்ற அன்பின் வெளிப்பாடே நற்செய்தி.
கிறிஸ்துவில் கடவுள் மனித யதார்த்தத்தோடு தன்னையே இணைத்துக்கொண்டுள்ளார். நாம் தனிமையில் இல்லை என்றும்,தன் பிள்ளைகள்மேல் அக்கறை கொண்டிருக்கும் தந்தை ஒருவர் எமக்கு இருக்கிறார் என்றும் சொன்னார் இயேசு. 'அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன் (எசாயா: 43:5)' என்பது மக்களின் வரலாற்றில் தன்னையே கரைத்துக்கொண்ட கடவுளின் ஆறுதல் தரும் வார்த்தைகள். அவரின் அன்பு மகனில் இந்த இறைவாக்குறுதி 'உன்னோடு இருக்கின்றேன் 39;' என்று பரந்து எங்களுடைய எல்லா வலுவின்மைகளையும் தழுவிக்கொள்கிறது. இறப்பிலும் எம்மோடு இணைந்துகொள்கிறது. கிறிஸ்துவில்தான் இருளும்,இறப்பும் ஒளியிலும் வாழ்விலும் சந்திக்கின்றன. அவரில்தான் எதிர் நோக்குப் பிறந்துள்ளது. தோல்வியின் கசப்பை வாழ்வு சந்திக்கும் சாலைகளில் அந்த எதிர் நோக்கு காத்திருக்கிறது. அந்த எதிர்நோக்கு என்பது எமக்கு ஏமாற்றம் தருவதில்லை. ஏனெனில் கடவுளின் அன்பு எங்களுடைய உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது (உரோ 5:5). இந்த எதிர்நோக்கே நிலத்தில் விழும் விதையில் முளைக்கும் நுண்ணிய இலை போல புதிய வாழ்வை தோற்றுவிக்கிறது. இந்தப் பின்புலத்தில் பார்க்கும்போது மனித வரலாற்றில் நிகழும் ஒவ்வொரு சோகமும் நற்செய்தியின் தளமாக மாற முடியும்.

> வாழ்க்கை என்பது தொடர்ச்சியாக நிகழும் நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல. மாறாக அது ஒரு வரலாறு. எம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை நாம் ஆராய்ந்து புரிந்து கொள்ளும் ஒரு கதையாடல். யதார்த்தங்கள் தாமாகவே பொருளற்றவை. நாம் அவற்றைப் பார்க்கும் விதம் கொண்டே அவை பொருள் தருகின்றன.அந்தவகையிலே கிறிஸ்தவர்களுக்குரிய நற்பார்வை வெளியாக அமைந்திருப்பது நற்செய்தி மட்டுமே.

எப்போது அன்பின் துணையால் நாம் அருகில் வரவும்,கனிவான இதயங்களை எழுப்பவும் முடிந்தால் தீர்க்கமான முகங்களைக் கொண்டு நோக்கவும் புதிதாகக் கட்டுவதற்கான கரங்கள் எழவும் முடிந்தால். இறையரசு எம் மத்தியில் மௌனமாக முளைத்து வரும் விதைபோல இருக்கும்.

**இறையரசு விதைமேல் நம்பிக்கை**

தன் சீடர்களுக்கும்,தன்னைத் தேடி வந்த மக்களுக்கும் சிந்தனைத்தளத்தையும்,சரியான பார்வை வெளிகளையும் கொடுக்க விரும்பிய இயேசு உவமைகளைப் பயன்படுத்துகிறார். மடிந்து உயிர்தரும் விதை பற்றிய உருவகத்தை இறையரசுக்கு அடிக்கடி ஒப்பிடுகின்றார் (மாற்கு 4:134). இந்த சொல்லாடல்களும்,உருவகங்களும் இறையரசின் அவசரத்தையும், அவசியத்தையும் நீர்த்துப்போகச் செய்வதில்லை. மாறாக கேட்பவர் ஏற்றுக்கொள்ளவும்,அந்த ஆற்றலை உள்வாங்கிக்கொள்ளவும் அவை இடத்தை உருவாக்குகின்றன.
இதன் வழியாகவே நாம் பாஸ்கா மறை நிகழ்வின் மாண்பை அறிந்துகொள்கின்றோம். அதுவே கிறிஸ்துவில் புது வாழ்வின் அழகிய மறை பொருள். அந்தப் புதுவாழ்வில் கபடமும்,சிலுவையும் தடைகள் அல்ல. மாறாக அவையே கடவுளின் மீட்பின் வாய்க்கால்கள். மனித ஆற்றலை விட இறைவலுவின்மை அதிகமாக இருக்கிறது. தோல்விகூட அன்பின் நிறைவான முன்னோட்ட மாகிறது. இப்படித்தான் இறையரசில் எதிர்நோக்கு முதிர்ச்சி யடைந்து ஆழப்படுகிறது.
'நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது (மாற் 4:2627).' என்பதைப் போல. இறையரசு ஏற்கனவே எம்மத்தியில் மௌனமாக முளைத்துவரும் எவரும் கண்டுகொள்ளாத விதைபோல இருக்கிறது. யாருக்கு தூய ஆவியானவர் நேரிய பார்வையைத் தருகிறாரோ அவரே அதைக் கண்டுகொள்ள முடியும். தங்களைச் சுற்றி வளரும் களைகளால் அவர்கள் தங்கள் இறையரசின் மகிழ்ச்சியை இழந்துவிடுவதில்லை. மனுக்குலத்தின் சாட்சிகளாகவும்,தொடர்பாளர்களாகவும் உலகின் கடைசி எல்லை வரை இயேசு என்னும் நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட எதிர் நோக்கு விண்ணேற்ற வழிபாட்டுக் கொண்டாட்டத்தில் ஆண்டவரைத் தியானிக்க எம் கண்களை அழைக்கிறது.
ஆண்டவர் அருகாமையில் இருந்தாலும் எதிர்நோக்கின் எல்லைகள் விரிந்து கொண்டே செல்கின்றன. மனித இயல்பை விண்ணுக்கு எடுத்துச்செல்லும் கிறிஸ்துவில் எல்லா ஆணும் பெண்ணும் இத்திரைச் சீலை வழியாகத் திருத்தூயகத்துக்குள் நுழைய முடியும். ஏனெனில் அவர் குருதி சிந்தி எமக்கெனப் புதியதொரு வழியைத் திறந்து வைத்துள்ளார் (எபிரேயர் 10:1920). நாம் தூய ஆவியானவரின் ஆற்றலால் புதிய மற்றும் மீட்படைந்த மனுக்குலத்தின் சாட்சிகளாகவும்,தொடர்பாளர்களாகவும் உலகின் கடைசி எல்லை வரை இருக்க முடியும் (திருத்தூதர் பணி 1:78).
உயிர்ப்பின் மறைபொருள்மேல் கொண்டுள்ள நம்பிக்கை இறையரசு விதையின் மீதும்,உயிர்ப்பின் மறைபொருள் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையே நாம் தொடர்பு கொள்ளும் முறையை வடிவமைக்க வேண்டும். இந்த நம்பிக்கையே எல்லா வேலைகளையும் செய்வதற்கு எம்மை திடப்படுத்துகிறது. இந்த நம்பிக்கையாலேதான் நாம் உலகின் ஒவ்வொரு கதையாடலிலும்,ஒவ்வொரு மனிதரின் முகத்தி லும் நற்செய்தியை அடையாளம் கண்டுகொள்ளவும்,அடிக்கோடிட்டுக் காட்டவும் முடியும். நம்பிக்கையில் தூய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு தங்களையே கையளிக்கும் அனைவரும் கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்பதையும்,அவர் நம் வாழ்வில் தோற்றமுறும் வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்விலும் செயலாற்றுகிறார் என்பதையும் அறிந்துகொள்வர்.
எதிர் நோக்கு என்ற நூலால் இறை என்பதும் மனித வரலாறு என்பதும் பிணைக்கப் பட்டுள்ளது. இந்தப் பிணைப்பை ஏற்படுத்துபவர் ஆறுதல் அளிக்கும் தூய ஆவியானவரே. மதிப்பீடுகளில் மிகவும் சிறிய மதிப்பீடு எதிர் நோக்கு. இது எப்போதும் வாழ்வின் திரைக்குப் பின்னால்தான் நிற்கின்றது. ஆனால்.இது புளிக்காரமாக இருந்து எல்லா மாவிலும் புளிப்பேற்றுகிறது. கடவுளின் அன்பின் நிழல்களாக வாழ்ந்த தூயவர்களின் வாழ்வில் நற்செய்தி மறுபதிப்பு செய்யப்பட்டிருந்ததை நாம் அறிவோம். இன்றும் வாழ்வின் யதார்த்தங்களுக்கான பொருளை நற்செய்தியில் கண்டுகொள்பவர்கள் வழியாகவும்,உலகின் இருளின் நடுவில் ஒளிரும் தீபங்கள் வழியாகவும் ஒளியேற்றி நம்பிக்கை மற்றும் எதிர் நோக்கின் கதவுகளைத் திறந்து ஆவியானவர் இறையரசின் விதையை நம் உள்ளங்களில் விதைத்து க்கொண்டிருக்கிறார்.
திருத்தந்தை கூறுவது போல் மனுக்குலத்தின் சாட்சிகளாகவும், தொடர்பாளர்களாகவும் உலகின் கடைசி எல்லை வரை இருக்க நாம் முயல்வோம்.

## சந்தேகநபருக்கு...

நல்லூரில் கடந்த சனிக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டின் முதன்மைச் சந்தேக நபர் என்று பொலிஸாரால் அடையாளப் படுத்தப்பட்ட சிவராசா ஜெயந்தனுக்குக் கொடுப்பதற்காக அவ ரது மனைவி கொண்டு வந்த பார்சலில் இருந்து மின்சாரக் கடத்தலைப் பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 'ரெஸ்ரர்', சிறைச்சாலை அதிகாரிகளால் மீட்கப்பட் டுள்ளது. இதனைய டுத்து ஜெயந்தனின் மனைவி சிறைச்சாலை அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டார்.

நல்லூர் கோயில் பின் வீதியில் கடந்த சனிக்கிழமை, யாழ்ப் பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், அவரது மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவத்து டன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார். நீதி வான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தனிச் சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார். இவரைப் பார்ப்பதற்கு இவரது மனைவி கடந்த வியாழக்கிழமை, யாழ்ப்பாணம் சிறைச்சா லைக்குச் சென்றுள்ளார்.

அவர் கொண்டுசென்ற பொதிகளைச் சிறைக்காவலர்கள் சோதனையிட்டுள்ளனர். உடுப்புகளுக்குள்ளிருந்து 'ரெஸ்ரர்' (மின்சாரக் கடத்தலைப் பரிசோதிக்கும் கருவி) மீட்கப்பட்டுள் ளது. சந்தேக நபரின் மனைவியைச் சிறைக்காவலர்கள் கடு மையாக எச்சரித்துள்ளனர். அத்துடன் சிறைக்கு வந்து அவரது கணவரைப் பார்வையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டு உள் ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (டு-5-8-101)

விசேட விலைக்கழிவு !




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து தேவைகளுக்கும் மிக பொருத்தமான, சிறந்த தீர்வினையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும் மிகவும் அர்பணிப்புடன் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

Central Environmental Authority Approved.



1. வீடு , தொழிற்சாலை , உணவகங்களுக்கு உகந்த எல்லா அளவிலுமான RO குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
2. நீர்க்குழாய்கள் , Tiles , Bathroom fittings களில் படியும் கல்சிய , மக்னீசிய படிவுகளிலிருந்து விடுதலை பெற Water Softener System.
3. சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கேற்ப கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை நிறுவி பராமரித்தல்.
4. நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.



குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்!

WE ACCEPT MasterCard VISA

Everpure Hi-Tec (Pvt) Ltd.
No.341, K.K.S Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

## நினைவலைகள்

முதலாம் ஆண்டு 65ஆம் நாள்



| | |
|---|---|
| பிறப்பு 12.05.1939 | பிறப்பு 23.11.1950 |
| இறப்பு 10.08.2016 | இறப்பு 24.05.2017 |

**வைரமுத்து சிவலிங்கம் கனகமணி சிவலிங்கம்**

திதி:- 30.07.2017

மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில் மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில் ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த எங்கள் உயிர்த் தெய்வங்களே!
உங்கள் பிரிவுத் துயர் எங்கள் நெஞ்சை விட்டகலவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நீங்காத நினைவுகளுடன்...
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குப்பிளான் தெற்கு.

காணி விற்பனைக்கு

தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து 1 km தூரத்தில் உள்ள முச்சந்திக்கு (புத்தூர், நிலாவரை, தெற்கு புன்னாலைக்கட்டுவன்) அருகில் 21 பரப்புக் விவசாயக்காணி விற்பனைக்கு உண்டு

077 844 9361

யாழ் நகரில் உடனடி வேலைவாய்ப்பு
வெளிநாட்டு பயணங்கள்.கார் .வீடு வேண்டுமா?
நீங்கள் O/L இல் சித்தி பெற்றவர்களா?
பகுதி நேர வேலை செய்து மேலதிக வருமானம் உழைக்க ஆசையா?
உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள
தொடர்பு கொள்ளுங்கள் 0767755920

Basic Computer Studies - அடிப்படை கணினி கல்வி
சகல விதமான கணினிகளும் திருத்தம் செய்து தரப்படும். மற்றும் பாவித்த நல்லநிலையில் உள்ள கணினி, உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெறலாம்.
அடிப்படை கணினி கல்வி வீடு வந்து கற்பித்துத் தரப்படும். (குழுவாகவும் கற்கலாம்)
(M.S.Word, M.S.Excel, M.S.Pow.Point, Internet & E-mail, Basic Hardware)
077 889 1702
கணிதம்
தரம் 6 முதல் தரம் 9 வரை

Green Nation காகித பைகள்
காகித பைகள் கிடைக்கும்
01. உணவு மற்றும் பேக்கரி 02. காகித ஷாப்பிங் பைகள்
03. ஆடை மற்றும் பரிசு பைகள்
04. உணவு மடிப்புக்கள் மற்றும் பெட்டிகள்
* எந்த நேரத்திலும் கிடைக்கும்.
* நாங்கள் உங்கள் ஓடர்களை ஏற்கின்றோம்
ஹொட் லைன் இல- 011 727 2072
முகவரி :- W.U.செனவிரத்னா நிறுவனம் மற்றும் பிறைவேட் லிமிட்டெட்

மோகன்தாஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
திருவனந்தபுரம், கேரளா, இந்தியா
AICTE New Delhi Approval F.No.06/06/KER/ENGG/2002/12
&Affilated to APJ Abdul Kalam Technological University
AnISO 9001 : 2008 Certified Institution

இலங்கை மாணவர்களுக்கு உலகத் தரமான பொறியியல் கல்வி



இளநிலை கற்கை நெறிகள்

நவீன வேலை மையம்/எதிர்கால கற்கை நெறிகள்



2017 வருடத்திற்கான அனுமதிகளுக்கு
Visit: www.mcetonline.com | E-mail: chiefadministrator@mcetonline.com Mob: +91 9847064246

## மரண அறிவித்தல்

### திருமதி கமலா கிறிஸ்ரோப்பர்

மன்னாரைச் சேர்ந்த திருமதி கமலா கிறிஸ்ரோப்பர் 28.07.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற BS. கிறிஸ்ரோப்பரின் அன்பு மனைவியும், ராஜீவி, சியாமளா (ஓய்வுபெற்ற அதிபர்), நிரூபா, காலஞ்சென்ற ஜூட் ஆகியோரின் பாசமிகு தாயாரும், டாக்டர் அல்போன்ஸ் ஜெரால்ட், ஷாலின் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா, சுமங்களா, பிரசன்னா, நிக்கொலஸ், கிறிஷ்னி, பிளெயின் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மன்னார். குடும்பத்தினர்.

# ரவியும் துமிந்தவும் அரசில் வேண்டாம்

## கோருகிறார் டிலான் பெரேரா

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 2020 இல் தனித்து ஆட்சி அமைக்க வேண்டு மென்றால் ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியில் இருந்தும் துமிந்த திஸநாயக்க சுதந்திரக் கட்சிச் செயலாளர் பதவியில் இருந்தும் நீக் கப்பட வேண்டும் என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 2020 இல் தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என்ற இலக்குடன் சுதந்தி ரக் கட்சி பயணித்துக்கொண் >> 45

### வாய்க்குள்...

என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மோசமான சம்பவம் அராலி வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த குடும்பத் தலைவரும் தலைவியும் மட்டும் வீட்டில் வசிக்கின்றனர். பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளனர். நள்ளிரவில் ஓடு பிரித்து உள்ளே இறங்கிய கொள்ளையர் கள் வீட்டுக்குள் இருந்த இருவரையும் கையில் அகப்பட்ட வற்றால் கட்டிப்போட்டனர். அவர்கள் சத்த மிட்டு அயலவரை அழைக்கக்கூடாது என் பதற்காக அவர்களது வாய்க்குள் துணிக ளைத் திணித்தனர்.

அங்கு சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி ஏராளமான நகைகளைக் கொள்ளையடித் தனர். இறுதியில் குறித்த குடும்பப் பெண் காதில் அணிந்திருந்த தோடுகளைக் கண் டுள்ளனர். அதனைக் கழற்றி எடுக்காது காதோடு இழுத்துள்ளனர். அதனால் இரண்டு காதுகளும் கிழிந்து தோடுகள் விடு பட அவற்றையும் எடுத்துக் கொண்டு கொள் ளைக் கும்பல் தப்பிச் சென்றுவிட்டது. காது கிழிந்ததால் குருதிப் பெருக்கு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் குடும்பத் தலைவி மயங்கி விட்டார். குடும்பத் தலைவர் வாய்க்குள் துணி திணிக்கப்பட்டதாலும் கட்டிப் போடப் பட்டதாலும் வேதனையால் தவித்துக் கொண்டிருந்தார். நேற்றுக்காலைவரை சம்பவம் எவருக்கும் தெரியாது.

காலையில் வழமைபோன்று அங்கு பசுப் பால் கொண்டு சென்றவர் வீட்டுக்காரரை அழைத்தபோது எந்தப் பதிலும் கிடைக்க வில்லை. சந்தேகத்தில் உள்ளே சென்று பார்த்தபோதே நிலைமையைக் கண்டு பதறிப்போனார். உடனடியாக அந்த வீட் டுக்கு அயலில் வசித்தவர்களை அழைத்து குடும்பத் தலைவரையும் மயங்கியபடி காணப்பட்ட குடும்பத் தலைவியையும் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

நேற்று முற்பகலுக்குப் பின்னர் சக்திதாசன் பேரின்ப நாயகி (வயது-64) என்ற குடும்பப் பெண் கண்விழித்தார். அவர் ஓய்வுநிலை ஆசிரியர். பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று இரவு முறைப்பாடு செய் யப்பட்டது. சுமார் 3 பேர் வரையில் கொள்ளையர்கள் காணப்பட்டனர் என்று கூறுப்பட்டுள்ளது. பல பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட் டுள்ளது. விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (4.8.101)

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.07.2017 | 2164 | சிவப்பு |

கடகம்

வெற்றி இலக்கங்கள்: 07 17 26 37

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 894, 256/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 09 13 19 48

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.25,000ம் வெல்ல முடியும்

2017.07.30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 682

சீட்டிழுப்பு திகதி 29.07.2017 நீலம்

R 19 21 46 59

சுப்பர் ஜக்பொட் ரூ. 54, 106, 848/= வெல்லப்படவில்லை

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 26 27 33 72

ஊதா நிற டிக்கட்டுகள் 31.07.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2909 திகதி 29.07.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 31 41 43 55 U

போனஸ்-இல. 52

திங்கட்கிழமை ஜக்பொட் 33, 989, 815/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 05 60 62 75

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.07.31 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824

SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

www.dlb.lk

வேலைவாய்ப்பு

கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்

- புத்தகம் கட்டுநர்கள்
- ஸ்கிறீன் பிறிண்டிங் தெரிந்தவர்கள்
- 'Kord' இயந்திர உதவியாளர்கள்
- கணினி வடிவமைப்பாளர்

• கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

செவ்வாய்க்கிழமை (01.08.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

PRINT MASTER 136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். 0776622981 | 0777481696

யாழ். சுண்டுக்குளியில் பகுதியளவான வீடு வாடகைக்கு

தனியான சமையலறை, மலசலகூட வசதியுடன் வீட்டின் ஒரு பகுதி யாழ். சுண்டுக்குளி பிரதான வீதியில் (A9) மக்கள் வங்கிக்கு மிக அருகில் வாடகைக்கு உண்டு. 2 or 3 பேர் அடங்கிய தொழில் புரியும் பெண்கள் அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு-076 6620760

வீடு வாடகைக்கு உண்டு

யாழ். போதனா வைத்தியசாலை பிரபல பாட சாலைகளுக்கு அருகில் நான்கு படுக்கை அறைகள் மூன்று குளியலறைகள் இணைந்த மற்றும் சமையலறை கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு. சனிக்கிழமை மட்டும் பார்வையிட முடியும்

077 711 1174


குத்தகைக்கு தோட்ட காணி தேவை

தோட்டம் செய்வதற்கு உகந்த காணி தேவை.
5 வருட குத்தகைப்பணம் முற்பணமாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு,

077 978 9223,021 205 2200

## மரண அறிவித்தல்

### திருமதி பரிபூரணம் கந்தசாமி



புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் கந்தசாமி நேற்று (29.07.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மனோன்மணி செல்லத்துரை, காலஞ்சென்ற பகவதி, கணேஸ், காலஞ்சென்ற குமாரசாமி, தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உதயபுத்திரன், புஸ்பராணி, அருள்ஆனந்தசிவம் (கனடா), விஜயலட்சுமி, பேரின்பராணி, சிவகௌரி (கனடா), கலைவாணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றராதா, நடேசன், நாகேஸ்வரி(கனடா), இராஜகுலநாயகம், குகராசா, மோகன் (கனடா), ஜெயகுலராசா (கனடா) ஆகியோரின் மாமியும் வினோசா, உஷாந்தினி, தர்ஷாயினி, சைலஜன், தமிழ்க்கனி, காலஞ்சென்றவர்களான தமிழ்ச்சோதி, தமிழ் வேந்தன் மற்றும் நெடுஞ்சேரன், குறளரசு, யாழினி, கௌந்தி, சிலம்பரசு, நிமலன், நிஷாந்தினி, நிறஞ்சன், நிருஷா, உசாந்தினி, தர்ஷிகா, கீர்த்திகா, நிதர்ஷனா, கஜீனா, துஷி, சஜி, ஆதவன், திவாஸ், தக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்துறை. 077 699 2020

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
17.02.1932

மறைவு
30.06.2017

கடந்த 30.06.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

### அமரர் சிறீதேவி சிவசுந்தரம்

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து ஆறுதல் கூறி உதவி புரிந்த அனைவருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று 30.07.2017 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு - இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

வீ.எம். றோட்,
பருத்தித்துறை.

மகன் (செல்லா), மகள் ரதிகுமாரி
077 654 8308 மற்றும் குடும்பத்தினர்.

## புத்தூரில் கைகலப்பு சிலர் வைத்தியசாலையில்

புத்தூர் நவக்கிரியில் நேற்று இடம்பெற்ற கைகலப்பில் சிலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அங்கு மாணிக்கப்பிள்ளையார் கோயில் முன்பாகவுள்ள முள்பள்ளியை அண்மித்து நேற்று மாலை சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்ற மூவரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுடன். முரண்பட்டுக் கைகலப்பில் ஈடுபட்டனர். விசாரணை நடத்தப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,11,26,101)

## யூனியன் கல்லூரியின் பளைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
புதிய நிர்வாகத் தெரிவுமற்றும் கல்லூரியின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதுவரை அங்கத்துவம் பெறாதவர்களும் விண்ணப்பத்தைப் பெற்று முழுமைப்படுத்திக் கலந்து கொள்ள முடியும் என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்தார். (4)

## காரைநகரில் மீட்ட உடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 30
காரைநகர்க் கடலில் உடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நாவல் சாலை நாவாந்துறையை சேர்ந்த ஆனந்தராஜா ஜெயந்தன் (வயது 35) என்பவரே உடலமாக மீட்கப்பட்டார். அவர் 4 வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். கடந்த 24 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார். வீடு திரும்பாத நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-8)

## தூக்கில் தொங்கியபடி பெண்ணின் சடலம் மீட்பு

### *கணவன் முன்பாக உயிர்மாய்ப்பு*

குடும்பத் தலைவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வெளிநாட்டிலுள்ள தனது கணவனுக்கு 'ரப்' மூலமாகக் காணொலியில் பார்க்குமாறு ஏற்பாடு செய்து அவர் பார்க்கும்போதே தவறான முடிவெடுத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் மாதகல் மேற்கில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த 25 வயதுடையவரே தவறான முடிவெடுத் துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. குடும்பத் தகராறே இதற்குக் காரணம் என்று ஆரம்ப விசாரணைகளைக்கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். (4,8)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி செல்வநாயகம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி செல்வநாயகம் (29.07.2017) சனிக்கிழமை மாலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பூபதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் தமயந்தி, நடேசன் (யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத்தாயும் பரம் நடேசன் (பாபு) இன் அன்பு மாமியும் நிக்சலா, அபிமாறன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஞானமலர், செல்லையா (ஓய்வு நிலை ஆசிரியர்) காலஞ் சென்ற செல்வமாணிக்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சோதிராணி காலஞ்சென்றவர் களான சரவணமுத்து, மங்கையற்கரசி, சரஸ்வதி, சண்முகநாதன், இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் சஞ்சயன், கார்த்திகாயினி, சஞ்சீவ், யசோ, காயத்திரி, பரணிதரன் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆர்க்லேன், உடுவில், சுன்னாகம்.**
**021 224 2572**
**077 9346 553**

தகவல்:
**பரம் நடேசன் ( பாபு - மருமகன்)**

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மாபாக்கியம் ஜோக்கீம்பிள்ளை

*(இளைப்பாறிய ஆசிரியை, வட. இந்து மகளிர் கல்லூரி)*



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் தற்போது 77, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மாபாக்கியம் ஜோக்கீம்பிள்ளை நேற்று (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை ரோசமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை ஜோக்கீம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை மரியமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் மேரி பேனடேற் விக்டோரியா, அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை அன்னம்மா கவிரியேற்பிள்ளை மற்றும் மற்றில்டா, செலெஸ்டின்பிள்ளை, காலஞ்சென்ற பற்றிக் இம்மானுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலா ஜோவிற்றா, ஜெனிற்றா மாலதி, யூட் மாலினி, ஜொய்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இம்மானுவேல் இராஜநாதன் மற்றும் யூட் டெறி, அல்பிரட் ரோய் ஆகியோரின் மாமியும் வேர்ஜின் கியூரி, அல்ஸ்ரன்பிராங், இனோ டினேஸ், வில்சன் வோர்ச், அலெக்ஸ்கொட்வின், ஜோசுவா, டெபோரா, டஷ்னி, வெரோனிக்கா, சோபியா, நளின் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஜெனிபர் ரேச்செல்லின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஈடித்இன்பமலர் நல்லதம்பி

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஓய்வு நிலை ஆசிரியரும், பகுதித்தலைவரும்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.10.1937 | 29.07.2017 |

பருத்தித்துறை 4ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், கோரியடி, பருத்தித்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஈடித் இன்பமலர் நல்லதம்பி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஓய்வு நிலை ஆசிரியரும், பகுதித்தலைவரும்) (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் நல்லதம்பி -நல்லதம்பி நேசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற நல்லதம்பி சிறில் அழகக்கோண், ஜீவமலர், வேலும் மயிலும் லீதியாபவளமலர், சாள்ஸ் நல்லதம்பி, எட்வேட் நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயா, நித்தி, சித்திரா, குஞ்சு, சுபேன், மகா ஆகியோரின் சிறிய தாயும் கமரூன் எவன் அதர்சன் கேசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வேலும்மயிலும் தயானந்தராஜா**
**வேலும் மயிலும் பவுண்டேஷன்,**
**பருத்தித்துறை.**

## மரண அறிவித்தல்



### சிங்காரம் சிவச்செல்வன் (பத்தர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரம் சிவச்செல்வம் நேற்று (29.07.2017) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் வடிவாம்பிகையின் அன்புக் கணவரும் கோபிநாத்தின் பாசமிகு தந்தையும் சிவகுமார், சிவபாலன் (ஜேர்மனி), சிவாஜினி, ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், மகேஸ்வரி, தங்கவடிவேல் மற்றும் லச்சுமிகாந்தன், சுகிர்தராணி, சரோஜினி (ஆஸ்திரேலியா), சந்திரலேகா, புஸ்பமாலா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.**
**077 199 2029, 076 855 8569**

தகவல்:
**செ.மதனகீதன் (மருமகன்)**

## நீதிபதி...

மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 9ஏ பெறுபேறு பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பிராந்திய இராணுவத்தினர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ரெஜினோல்ட் குரே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நல்லூரில் கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நீதிபதி இழஞ்செழியனே இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார். அவரது மெய்ப்பாதுகாவலரான சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் தனது உயிரைக் கொடுத்து நீதிபதியைக் காப்பாற்றியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த தனது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினரைக் கண்டதும் அவர்களது கால்களில் விழுந்து நீதிபதி அழுதமை மற்றும் மெய்ப் பாதுகாவலரின் பிள்ளைகளைத் தத்தெடுத்தமை எல்லாவற்றையும் தொலைக் காட்சி

ஊடாகப் பார்த்தேன். நான் மட்டுமல்ல தென்னிலங்கை மக்கள் அனைவரும் அதனைப் பார்த்து இப்படியும் தமிழ் மனிதர்கள்

இருக்கின்றனரா? என்று வியப்படைகின்றனர். இது நல்லிணக்கத்துக்கு அடையாளம். யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின்உயிரைக்காப்பாற்றசிங்களபொலிஸ் பாதுகாவலரே தனது உயிரைத் தியாகம் செய்துள்ளார். இன,மத,மொழி பேதம் இல்லாமல் அந்தச் சமயத்தில் மெய்ப் பாதுகாவலர் உயிரை தியாகம் செய்துள்ளார். அவருக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா,சுமந்திரன், ஈ.சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் உள்ளிட்ட பலருக்கும் சிங்கள பொலிஸாரே பாதுகாப்பு வழங்குகின்றனர்- என்றார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

**சும்மா இருக்க விடக்கூடாது**

நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதுதான் இராணுவத்தினரின் கடமை.

எமது நாட்டில் போர்க் காலத்தில் இராணுவத்தினரின் உயிர்களும் இரத்தமும் இந்த மண்ணுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. உள்நாட்டுப் போர் முடிந்து விட்டதால் இராணுவத்தினருக்கு ஒரு வேலையும் இல்லை. அதற்காக அவர்களைச் சும்மா இருக்க விடக்கூடாது. இந்த நாட்டின் சக்திக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றுதான் இவ்வாறான பணிகளைச் செய்கின்றனர்.

**இங்கேயே பணிபுரியுங்கள்**

இந்த உலகில் தங்கத்தை விடப் பெறுமதியானது கல்வி. தங்கத்தைத் திருடினாலும் கல்வியை யாராலும் திருட முடியாது. ஆகவே அனைவரும் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் புகட்டுங்கள். இந்த நாட்டில் உள்ள பிள்ளைகள் நன்கு படித்து இங்கேயே சேவை செய்ய வேண்டும். இந்த நாட்டில் பல முக்கிய பதவிகளில் ஏராளமான தமிழ் அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். ஆகவே உங்கள் கல்வி எமது நாட்டுக்கே திரும்பப் பயன்பட வேண்டும் -என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத்தளபதி மகேஷ் சேனநாயக்க, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன்,

யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-8)

## கூட்டமைப்பு...

சிவசக்திஆனந்தன் தெரிவித்தார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியில் வந்தால் மக்கள் எங்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்று எல்லோருக்கும் பயம் இருக்கின்றது. அதைவிட, தேர்தலில் எங்கள் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய ஆசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம். கட்சித் தலைமை எப்படிப்போனாலும் சரி அதைக் கண்டுகொள்வது இல்லை. விளக்குமாற்றைக் காட்டினாலோ அல்லது தும்புத்தடியைக் காட்டினாலோ மக்கள் வாக்களித்து விட்டுப்போவார்கள் என்ற நிலமை இனிமேல் இல்லை'

என்று குறிப்பிட்டார் ஆனந்தன்.

தமிழ் மக்களைப் பொறுப்பேற்பது யார் என்ற தலைப்பில் வவுனியாவில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் இவ்வாறான கருத்துப் பரிமாற்றம் எங்களுக்குள்ளே குறைவாக இருந்தது. ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில், நாம் வாய் திறந்து பேச முடியவில்லை. ஊடகங்கள் உண்மையை எழுத முடியவில்லை. இப்போதைய காலத்தில் இவ்வாறான கருத்துப் பரிமாற்றங்கள் அவசியம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிதவாதத் தலைவர்களையும், ஆயுதங்கள் தூக்கிய இயக்களையும் கொண்ட கலவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிடைக்கின்ற வாய்ப்புக்களையும் வீணடிக்கின்றது. ஆட்சிமாற்றத்தின்போது நிபந்தனை விதிக்கத் தவறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நாங்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை விட்டு விலகிச் செல்லவேண்டும் அல்லது அந்தக் கட்சியைத் தூக்கி எறிய வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் ஒருபோதும் செயற்பட்டதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே தடையாக இருக்கின்றது. கூட்டமைப்பாகப் பதிவு செய்தால், தாம் சர்வாதிகாரமாகச் செயற்பட முடியாது என்பதால் அவர்கள் அதற்குத் தடையாக இருக்கின்றார்கள். கூட்டமைப்புக்குள் ஒளிந்துள்ள கூட்டமைப்புக்கு மாறாக நடந்து கொண்டிருக்கின்ற கட்சியையும் அந்தத் தலைவர்களையும் மக்கள் மிகத் தெளிவாக இனங்காணவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியில் வந்தால் மக்கள் எங்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்று எல்லோருக்கும் பயம் இருக்கின்றது. அதைவிட, தேர்தலில் எங்கள் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய ஆசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம். கட்சித் தலைமை எப்படிப் போனாலும் சரி அதைக் கண்டுகொள்வது இல்லை. விளக்குமாற்றைக் காட்டினாலோ அல்லது தும்புத்தடியைக் காட்டினாலோ மக்கள் வாக்களித்து விட்டுப்போவார்கள் என்ற நிலமை இனிமேல் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பதிவு இருக்கா? வங்கிக் கணக்கு இருக்கா ? கட்சிக்கான யாப்பு இருக்கா ? இப்படியே நாங்கள் இருக்க முடியுமா ? என்று கேட்டதால்தான் தற்போது நிறையப் பிரச்சினைகள் -என்றார். (த-5)

## சட்டிக்குள்...

யும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான புளொட் அமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களைப் பொறுப்பேற்பது யார் என்ற தலைப்பில் வவுனியாவில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு சமூகம் தன்னுடைய பிரச்சினையைக் கையில் எடுக்காதவரை அந்தச் சமூகம் உருப்பட்டதாக வரலாறு இல்லை. இதை நான் சொல்லவில்லை. 37 ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுடைய தலைவர் உமா மகேஸ்வரன் சொன்னது. இன்று இந்தச் சமூகம் எங்களுடைய பிரச்சினையைக் கையில் எடுப்பதற்கான சூழல் உருவாகியுள்ளது. நான் சந்தோசப்படுகின்றேன்.

ஒரு தேசிய இயக்கம் அரசியல் சார்ந்து அல்லது தேர்தல் அரசியல் சார்ந்து இல்லாமல் பொதுவாகச் சிந்திக்கின்ற அல்லது மக்களை வழிநடத்தக்கூடிய தலைமை அல்லது ஒரு இயக்கம் தேவை. 1980ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் அல்லது அதற்கு முன்னர் தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம் பின்பு அண்ணன் அமிர்தலிங்கம், வே.பிரபாகரன், உமா மகேஸ்வரன், பத்மநாபா, சிறீ சபாரட்ணம் என்று பல தலைவர்கள் இருந்தார்கள்.

அவர்களின் நிலைப்பாட்டில் இன்றைக்கு எந்தத் தலைவரும் இல்லை. அதை நான் பகிரங்கமாகச் சொல்வேன். எங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாதமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை எங்களுடைய ஆள்கள் ஒரு தொழிலாகப் பயன்படுத்தியதுதான் காரணம். (இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தனும் கலந்து கொண்டிருந்தார். தான் அவரைச் சொல்லவில்லை என்று லிங்கநாதன் கூறினார்.)

உலகத்தில் பல சமூகங்கள் போராடியுள்ளன. இரண்டு சமூகங்கள் தமது தீர்வை நோக்கி நகரவில்லை. குர்தீஸ் மக்கள் ஒரு சமூகம். மற்றையது நாங்கள்.

தமிழ் மக்களை வழிநடத்துகின்றவர்கள், வலிகளைச் சுமந்தவர்கள் அல்லர். வெளிநாடுகளிலிருந்து இதற்கு ஆள்களை இறக்குகின்றார்கள். இதேமாதிரியான கூட்டங்களைக் கிராமப்புறங்களில் நடத்துங்கள். கிராமங்களிலிருந்து மேலே நோக்கிச் செல்லுங்கள். அப்போது நீங்கள் எதிர்பார்க்கும் தலைமை கிடைக்கும்.

இதைவிடுத்து, சம்பந்தனுக்கு எதிராக இன்னொருவரைக் கொண்டு வருவது என்பது, கறிச்சட்டிக்குள்ளிருந்து தவறி அடுப்புக்குள் விழுந்த கதையாகிவிடும் என்றார். (த-5)

## தொண்டரா...

(லொக்புக்) வலயக் கல்விப் பணிமனை கோரியபோது, அது காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் வலயக் கல்விப் பணிமனையினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது. தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள், தாம் பணியாற்றிய பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள பாடசாலை 380 மாணவர்களைக் கொண்டது. இங்கு 18 நிரந்தர ஆசிரியர்கள் உள்ளனர். இந்தப் பாடசாலை அதிபரே, தனது பாடசாலையில் 12 பேர் தொண்டர் ஆசிரியர்களாகக் கற்பித்தனர் எனத் தெரிவித்துக் கடிதம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் சந்தேகமடைந்த கல்வித் திணைக்களத்தினர், பாடசாலை அதிபரிடம் 'லொக்புக்' கோரியுள்ளனர். பாடசாலை அதிபர், 'லொக்புக்' காணாமற்போயுள்ளதாகப் பதிலளித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவிக்கையில், 'லொக்புக்' மிக முக்கியமான ஆவணம். இது காணாமற்போயிருந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு அதன் பிரதி வலயக் கல்விப் பணிமனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்படி பாடசாலை அதிபர் இந்த விடயங்கள் எதனையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டனர். (த-5-101)

## வடக்கு...

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா. எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படாத புதிய அரசமைப்பே உருவாக்கப்படும் என்று பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பானது ஒற்றையாட்சி என்ற எல்லைக்குள் இருந்துகொண்டுதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்கும். மாவட்டத்துக்கு மாவட்டம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில்தான் புதிய அரசமைப்பு அமையும்.

வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா. எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படாத புதிய அரசமைப்பே உருவாக்கப்படும்.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்படும் என்பது மைத்திரியால் எந்தவித நிபந்தனைகளுமின்றி வழங்கப்பட்ட வாக்குறுதியாகும். அவர் அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்கின்றார். நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறையை நீக்குவதாக இருந்தால் பொது வாக்கெடுப்பு நடத்தியே ஆகவேண்டும்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அரச தலைவரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு அமைச்சர் ஒருவரை நியமிக்கவேண்டுமென்றால் அரச தலைவரால் மாத்திரம் முடியாது. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் இணைந்தே நியமிக்க வேண்டும். இவ்வாறுபல உள்ளன.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை புதிய அரசமைப்பின் ஊடாக முற்றாக நீக்கப்படும். 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஆய்வு செய்து பார்த்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் அரசதலைவர் முறைமை இல்லாமல் போவதற்கான ஏற்பாடு இருப்பதைக் காணலாம்.

அரசமைப்பை மீண்டும் மீண்டும் திருத்துவதில் அர்த்தமில்லை.அதை இனியும் ஒட்டுப்போட்டுப் பாவிக்க முடியாது. காலத்துக்கு ஏற்ப புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதுதான் பொருத்தமானதாகும்என்றார். (த-3)

## நான்...

மற்றும் செயற்குழுக் கூட்டம் என்பன பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

இதன்போது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அரச தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தூய்மையற்ற அரசாக இருந்ததன் காரணமாகவே, கடந்த அரசிலிருந்து நான் வெளியேறினேன். தற்போது இருக்கும் இடமும் தூய்மையற்றது எனில், என்னால் அங்கு இருக்க முடியாது.

புதிய அரசொன்றை நிறுவினால், அது தூய்மையான அரசாகவே இருக்கும். தூய்மையற்ற அரசை ஒருபோதும் அமைக்கமாட்டேன் -என்றார். (த)

## புலமைப்...

ளின் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் உதயன் குழுமம் இந்தக் கருத்தமர்வை நடத்துகிறது.

புலமை ஆசான் செ.அம்பிகைபாகன், முன்னணி வளவாளர் சு.திலீப்குமார் ஆகியோருடன் துணுக்காய் வலயத் துறைசார் வல்லுநர்களும் கருத்தமர்வில் வளவாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தமர்வில் மாணவர்கள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் அல்லது ஆசிரியர்களுடன் வருமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (த-4)

## ரவியும்...

டிருக்கின்றது. ஆனால்,அந்த இலக்கை அடைய முடியாமல் சில தடைகள் போடப்படுகின்றன. அந்தத் தடைகள் இப்போதிலிருந்தே நீக்கப்படவேண்டும்.

அரசில் உள்ள அமைச்சர்கள் பலர்தான் அந்தத் தடைகள். அவர்கள் நீக்கப்பட்டால் எல்லாம் சரிவரும். முதலில் ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியில் இருந்தும் துமிந்த திஸநாயக்க சுதந்திரக் கட்சி செயலாளர் பதவியில் இருந்தும் நீக்கப்படவேண்டும். ரவியை நீக்குவது நாட்டுக்கு நல்லது. துமிந்தவை நீக்குவது கட்சிக்கு நல்லது.

ரவி நிதி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டது நல்ல விடயம். ஆனால்,அவர் இப்போது வகிக்கும் அமைச்சுப் பதவியில் இருந்தும் நீக்கப்பட வேண்டும். அதாவது,அமைச்சுப் பதவியே அவருக்கு வழங்கப்படக்கூடாது. ஊழல்வாதிகளுக்கு இடங்கொடுத்தால் நாடு சீரழிந்துவிடும். அது சுதந்திரக் கட்சியையும் பாதிக்கும்.

துமிந்த திஸநாயக்கவைக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கினால் கட்சி உருப்பட்டுவிடும். அவர் ஒரு குழந்தை. அவரால் கட்சியை வெற்றிபெறச் செய்ய முடியாது. முன்னாள் அரச தலைவர் தொடர்பில் அவர் அண்மையில் கூறிய கருத்துப் பாரதூரமானது. மகிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று கூறும் அதிகாரம் அவருக்கு இல்லை.

கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறியதை ஏற்க முடியாது. அவரால் தனித்து முடிவெடுக்க முடியாது. கட்சியின் மத்திய குழுதான் அது தொடர்பில் முடிவெடுக்கும்.

ஜோன் செனவிரத்ன,நிமால் சிறிபால டி சில்வா மற்றும் சமல் ராஜபக்ஸ போன்றவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றால் மாத்திரமே கட்சியை ஒற்றுமைப்படுத்தி 2020இல் தனித்து ஆட்சி அமைக்க முடியும். இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியே ஆட்சியைப் பிடிக்கும்என்றார்.

(த-3)





# பேர்ள்ஸ் போய்ஸ் வடஸ்ரகர் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 30

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பேர்ள்ஸ் போய்ஸ் - வடஸ்ரகர் அணிகள் இறுதியில் இன்று மோதவுள்ளன.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் ஜெ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் சி.அகிலதாஸ் மற்றும் வே.சிவயோகன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணம், வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் செயலாளர் தி.வரதராஜன், கிராம அலுவலகர் சி.பாரதிராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

# காலியில் இலங்கை காலி!



“ காலியில் நான்காவது இன்னிங்ஸில் 550 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றால் அதை எட்டாவது உலக அதிசமாகப் பதிவு செய்யலாம்.

இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 304 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இலங்கை அணி. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 600 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் பிரதீப் 6 இலக்குகளையும், லகிரு குமார 3 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 291 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டில்ருவான் பெரேரா 92 ஓட்டங்களையும், மத்தியூஸ் 83 ஓட்டங்களையும், தரங்க 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜடேயா 3 இலக்குகளையும், மொகமட் சமி 2 இலக்குகளையும், யாதவ், அஸ்வின், பாண்டியா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய அந்தஸ்து இந்திய அணிக்கு இருந்தாலும் காலியின் களநிலவரங்களைக் கனகச்சிதமாகக் கையாண்டார் கோக்லி. இந்த மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடுவது இயலாத காரியம் என்பதால் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கியது. அந்த அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 3 இலக்குகள் இழப்புக்கு 189 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கோக்லி 76 ஓட்டங்களுடனும், ரகானே ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அடித்தாடி சதம் கடந்தார் கோக்லி. இந்தியா 240 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.



இலங்கைக்கு வெற்றியிலக்காக 550 ஓட்டங்கள். காலியில் நான்காவது இன்னிங்ஸில் 550 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றால் அதை எட்டாவது உலக அதிசமாகப் பதிவுசெய்யலாம். அவ்வளவு சாத்தியமல்லாத விடயம் அது. கருணாரத்ன, தரங்க ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். தரங்க 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குணதிலகவால் முடிந்தது வெறும் 2. கருணாரட்ன, குசல் மென்டிஸ் இருவரும் இணைப்பாட்டமாக 79 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மென்டிஸ். டிக்வெல்ல அடித்தாடி அரைச்சதம் கடந்து வெளியேறினார். கருணாரத்ன 97 ஓட்டங்களுடன் அஸ்வினிடம் போல்ட் ஆனார். பாராட்டப்பட வேண்டிய இன்னிங்ஸை அவர் அரங்கேற்றினார். அசல குணரட்ன, கேரத் இருவரும் காயம் காரணமாகக் களமிறங்காததால் 8 இலக்குகளை இழந்தபோதே இலங்கை சகல இலக்குகளையும் இழந்தது என்றாயிற்று. முடிவில் 304 ஓட்டங்களால் வென்றது இந்தியா. (ம)

# பளுதூக்கலில் வடக்குக்கு பதக்கங்கள்

யாழ்., ஜூலை 30

தேசிய மட்டப் பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் வடமாகாணத்துக்கு தங்கம் மற்றும்வெண்கலம்என்று இரண்டு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

43வது தேசிய மட்ட பளுதூக்கும் தொடர் பொலனறுவைவிளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.

இதில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகா 63 கிலோ எடைப் பிரிவில் 155 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், பாசையூர் சென். அன்ரனீஸ் மகளிர் கல்லூரி மாணவி பா. மேரிறெஜீனா91கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



ஆசிகா



றெஜீனா

# மன்னார் கழகங்களின் கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'ஏஏ' விளையாட்டுவிற்பனை நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உதய தரிசனம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எவர்கிறீன் பெரியகமம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஏவர்கிறீன் பெரியகமம் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் ஜோசாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காத்தங்குளம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வங்காலை சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் டிசால்குடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மூன்றாம்பிட்டி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் பட்டித்தோட்டம் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் ஏது வித கோல்களையும் பதிவு செய்யாதமையினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் பட்டித் தோட்டம் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

குறோஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடுங்கண்டல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்தமையால் சமநிலைத்தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் நெடுங்கண்டல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

# இந்து இளைஞர் 'ஏ', 'பி' கிண்ணத்தை கைப்பற்றின










கைதடி சரஸ்வதியின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ', 'பி' அணிகள் கிண்ணங்களைத் தமதாக்கின.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவைமுன்னிட்டு இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

**'பி' பிரிவு இறுதியாட்டம்**

முதலில் இடம்பெற்ற பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் அச்சுவேலி கலைமகள் அணியும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் அணி கைப்பற்றியது.

அடுத்த இரு செற்களையும் 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமகள் அணி தனதாக்கியது. நான்காவது செற்றில் ஆக்ரோசமாக விளையாடிய இந்து இளைஞர் அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றியது.

முதல் நான்கு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரு செற்களைப் பெற்றிருந்தமையால் ஐந்தாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமாக முடிவில் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது இந்து இளைஞர் 'பி' அணி.

**'ஏ' பிரிவு இறுதியாட்டம்**

தொடர்ந்து இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

5 செற்களைக்கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் மூன்று செற்களையும் முறையே 25:18, 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணி. (ம-108-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

**ரி-20 துடுப்பாட்டம்**

புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுகுடியிருப்பு மத்திய சமூதாயக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுகுடியிருப்பு மத்திய சமூதாயக்கழக 'பி' அணியை எதிர்த்து பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.க. கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**வெண்மதியின் துடுப்பாட்டம்**

வெண்மதி விளையாட்டுக் கழகம் வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 'கிழக்கின் போர்' துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன. இன்றைய முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெண்மதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

ஏனைய ஆட்டங்களில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழகமும், கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேசானந்தா விளையாட்டுக் கழகமும் குடத்தனை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செல்வா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108-23)

## மெற்றோ கம்பஸ் முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

குளோபல் மெற்றோ கம்பஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிர்வாகஅலுவலர் எல்.விஸ்வநாதன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பல்மருத்துவ நிபுணர் மருத்துவர் ஏ.செந்தில்குமரன் உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-108)

## 786 அணி கௌரவிக்கப்பட்டது

இளைஞர் மன்றங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவான 786 அணி நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட இளைஞர் கழகத்தால், இளைஞர் பயிற்சி நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக புளொட் அமைப்பின் உப தலைவர்களில் ஒருவரான க.சந்திரகுலசிங்கம்(மோகன்),மௌலவி நஸ்லி, கிராம சேவையாளர் நஸார், இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் சிறி.கேசவன், மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி சுகானி உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-23)



## வடக்குக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜூலை 30

தேசியமட்ட கரம் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வடமாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

கொழும்பு டொறிங்டன் உள்ளக விளை யாட்டரங்கில் நேற்று நடைபெற்ற மூன்றாமி டத்துக்கான ஆட்டத்தில் வடமாகாணத்தை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது.

இதில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி இலங்கேஸ்வரன் டிசாந்தி மத்திய மாகாண அணியை பிரதிநிதித்துவம் செய்த கஜானி ரணசிங்கவை 2:1 என்ற செற் கணக்கில் வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். தங்கப் பதக்கத்தை மேல் மாகாண அணியும், வெள்ளிப் பதக்கத்தை சப்ரகமுவ மாகாண அணியும் பெற்றன. (ம- 422)

# நீங்கா நினைவலைகள்

6 ஆம் ஆண்டு | 7 ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933 | பிறப்பு 04.06.1935



இறப்பு 30.06.2011 | இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானை, பழைய தபால்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (22.07.2017)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகிப் வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

திதி: பூர்பக்க அட்டமி (30.07.2017)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்
நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா
அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....
நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா.....
நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.....
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாதகல் மேற்கு,
மாதகல்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 774 3185 (மகள்)

# அமெரிக்க ரென்னிஸில் ஜோ கோவிக் சந்தேகம்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் சேர்பிய வீரர் ஜோகோவிக் விளையாடு வது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலம் வரை பன்னாட்டு அரங்கில் ஜோகோவிக் ஆதிக்கம் செலுத்தி வந்தார். பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் பின்னர் ஜோகோவிக் கடும் பின்னடை வைச் சந்தித்தார்.

அண்மையில் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் ஜோகோவிக்கின் முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் பாதியிலேயே விலகினார். காயம் இதுவரை குணமடையாததை அடுத்து, அடுத்த மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகவுள்ள அமெரிக்கத் தொட ரில் இருந்து ஜோகோ விக் விலக வுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

077 481 4137

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளரிடம் இலகுவான முறையில் French கற்றுக் கொள்ளுங்கள். (ஆங்கில அறிவு அவசியமில்லை)

2006 முதல் இன்றுவரை 1291 மாணவர்கள்.

DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

40, பலாலி வீதி, அரியதனம்
ஆரம்பம்:05.08.17சனி 8am
0779 789 456
021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி
ஆரம்பம்:14.08.17 திங்.4pm
021 320 2973

IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
அதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை, கண்டி.
077 327 2302/ 075 509 5887

EDNA

வெற்றிகரமான வியாபாரமொன்றில் பங்குதாராவதற்கு
இன்றே எங்களுடன் இணையுங்கள்

எட்னா இல்லத்தின் மற்றுமொரு புதிய உறுப்பினர்
Cool & Cool குளிர்பான வகைகள்




மேற்கூறப்பட்ட அறிமுக பொருட்களின் நிறுவனத்துடன் இணைந்து விநியோக முகவராக விற்பனை பங்காளராவதற்கு இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

- ★ வங்கிப் பிணை
- ★ தேவையான அளவு களஞ்சிய மற்றும் காரியாலய இட வசதிகள் (குறைந்தது 900 சதுர அடி கொண்ட கட்டிடம்)
- ★ மீள் விநியோக செயற்பாடுகளுக்காக 10½ அடி அலுமினிய பொடி கொண்ட லொறி
- ★ பயிற்சி பெற்ற அலுவலக உத்தியோகத்தர்கள் (Cash Collector & Clerk)
- ★ விநியோகித்தல் பிரிவு தொடர்பிலான முன் அனுபவம்

உங்களது விண்ணப்பப் படிவங்களை இவ்விளம்பரம் பிரசுரமாகிய 07 நாட்களுக்குள் எங்களது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Cool&Cool

விற்பனை முகாமையாளர்
ரிலையன்ஸ் பெவரேஜஸ் (தனியார்) நிறுவனம்
இல. 257, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14.
தொலைபேசி இல : 0112 498 200, 0703 000 444 / 0711 102 222
பெக்ஸ் : 0112 498 232 / 0112 472 628 - 629

உங்களது விண்ணப்பங்களை reliance@edna.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விசேட விலைக்கழிவு !!
" நல்லூர் திருவிழா "
உற்சவ காலங்களில் மட்டுமே !

ஜூஸ் பக்கெட் மெசின்



1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்

ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்

டீ,கோப்பி மெசின்

ஜூஸ் மெசின் Eastman பொப்கோர்ன் மெசின்



ரூ.29,000இருந்து மேல்

தமிழில் தொடர்பு கொள்ள :
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

max adz

## வேலையாள்தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபலமான புடைவைக்கடைக்கு அனுபவமுள்ள அனுபவமற்ற ஆண்/பெண் வேலை ஆள்கள் உடனடியாக தேவை.

தொடர்புகளுக்கு.0773648745

## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் கோயில் வீதியில் (கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில்) சகல நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு 10, 12 கார் தரிப்பிட வசதி கொண்டது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் உகந்தது

077 635 9201/ 076 332 8190

## காணி விற்பனைக்கு

சுதுமலை வாசிகசாலைக்கு அருகில் 6½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 912 2913

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கிவரும் Call Center க்கு ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(AKN 187) (14)

077 831 7536

## தேவை

எமது சிறுவர் இல்லத்துக்கு

**பராமரிப்பாளர் :-**
வயதெல்லை 30-45 (ஆண் / பெண்)

**அலுவலக உதவியாளர் :-**
வயதெல்லை 25 - 35 (ஆண் / பெண்)

**பஸ் சாரதி :-** வயதெல்லை :- 25 - 45

உடன் தொடர்பு கொள்ளவும்
தொ.பே:- 071 535 4504 / 071 535 4500
எமது முகவரி :- செஞ்சோலை சிறுவர் இல்லம், கிளிநொச்சி.
மின்னஞ்சல் :- sencholai1992@gmail.com
நேர்முகத் தேர்வு :- 02.08.2017 (புதன்கிழமை)
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.